(42)

ஹோமியோபதி மித்திரன்

vol. 8. 6-8

1961 - ஜனவரி
February
மார்ச்

JL
LLm211,N64
N61.8.6-7
162361

நோயிலா வாழ்வே
குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

ஜனவரி
1961

38
காசுகள்

எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்

## டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

அவர்களால் எழுதப்பட்டவை

**தமிழில்**

| | விலை | ரூ. ந.பை |
|---|---|---|
| மாஸ்டர்-கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிக்கா (1144 பக்கங்கள் உள்ளது) | 20 | 00 |
| பன்னிரண்டு உயிர் உப்புகள் (பயோகெமிஸ்டிரி) | 6 | 50 |
| மெடிகல் டிக்ஷனரி-ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பும் பொருளும் | 6 | 50 |
| நோய்களும் சிகிச்சையும் .... | 5 | 50 |
| ஆர்கனன் ஆப் மெடிஸின் .... | 3 | 00 |
| இருதயமும் சுவாஸகோசங்களும் அவ்வுறுப்புகளைப் பரீக்ஷித்து வியாதியை நிர்ணயிக்கும் வழிகளும் .... | 2 | 00 |
| ஹோமியோபதிக் குடும்ப சிகிச்சைக் குறிப்பு | 2 | 00 |
| தாய்த்திரவங்களின் மெட்டீரியா மெடிகா .... | 1 | 50 |
| இரத்தசோகை வியாதி விவரமும் சிகிச்சையும் | 0 | 25 |
| மூலம்; வியாதி விவரமும் சிகிச்சையும் .... | 0 | 25 |
| நீரழிவு, மதுமேகம் .... | 0 | 25 |
| வயிற்றுக் கடுப்பு or இரத்தபேதி .... | 0 | 25 |
| மேகவெட்டை .... | 0 | 25 |
| பெரியம்மை .... | 0 | 25 |
| காலரா .... | 0 | 25 |
| மலச்சிக்கல் .... | 0 | 25 |
| கேசு ஷீட்டு .... | 0 | 13 |
| ஹோமிக்ஸ் ரெமிடீசின் உபயோக விவரம் ... | 0 | 13 |
| ஹோமியோபதியும் இஞ்சக்ஷனும் .... | 0 | 13 |

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

" பால நிலயம் "

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

மதறாஸ்-28.



For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratory Only.


# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8 ஜனவரி 1961 இதழ் 6


**பொருள் அடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | மேதைகள் .... | 3 |
| 2. | மதுரையில் மாநில மாநாடு .... | 5 |
| 3. | நோய் வராமல் பாதுகாப்பது எப்படி ... | 11 |
| 4. | நேர்முக வகுப்பு அறிக்கை .... | 17 |
| 5. | சண்டை .... | 21 |
| 6. | ஹோமியோபதித் துணுக்குகள் .... | 25 |
| 7. | செய்திகள் .... | 27 |


## பொங்கல்

**எங்கள் மாணவர்கள்,**
**வாடிக்கைக்காரர்கள்**
**அன்பர்கள் எல்லோருக்கும்**
**இந்தத் தமிழர் திருநாளில்**
**எங்கள் மனமுவந்த**
**நல் வாழ்த்துக்களை அளிக்கிறோம்.**

16836
-600 008.
டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் இயற்றிய
மூன்று புத்தகங்கள்
மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக்
**மெட்டீரியா மெடிக்கா**
* இணையற்றது * மிகச் சிறந்தது
1144 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம்
ஹோமியோபதியர்களுக்கு இன்றியமையாதது.
விலை ரூ. 20/-, அனுப்பும் செலவு ரூ. 2/-

ஹோமியோபதி வைத்தியத்துக்கு
மிக அவசியமான இரண்டாவது புத்தகம்
**நோய்களும் சிகிச்சையும்**
விலை ரூ. 5-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

ஆங்கில வைத்தியச் சொற்களுக்கு
தமிழறியாது தவிப்பவர்களுக்கு
* ஒன்றே ஒன்று * நன்றே நன்று
**மெடிகல் டிக்ஷனரி**
ஒன்றேதான் தமிழகத்திலேயே உள்ளது.
விலை ரூ. 6-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு
மதராஸ்-28.

# மேதைகள்

"ஐயனே ! என்னை என் நேயர்களிடமிருந்து காப்பாற்று" என்று ஒரு மேல் நாட்டு மேதை கடவுளை வேண்டினாராம். இந்த அவலநிலை தென்னாட்டில் ஹோமியோபதிக்கும் ஹோமியோபதியர்களுக்கும் உண்டாகியுள்ளது வருந்தத்தக்கது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே ஹோமியோபதி இந்நாட்டில் மேன்மேலும் வளரக்காரணமாயிருந்தவர்கள் மெத்தப்படித்த உத்தியோக மேதைகளே. இவர்கள் வேறு தொழில்களில் ஈடுபட்டு பொருளீட்டி ஒழிந்த வேளைகளில் ஏழைகளுக்கென்று குறைந்த விலையிலோ, இலவசமாகவோ மருந்து கொடுத்து வந்தார்கள். இந்தச் சேவையைத் தனிப்பட்ட முறையில் தர்மகார்யமாகச் செய்து வந்தார்களேயொழிய ஹோமியோபதி வளர எல்லோருமாகக் கூடி ஒரு ஆஸ்பத்திரியோ, ஆராய்ச்சி நிலயமோ துவக்க முயற்சித்தாரில்லை; அதற்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் காட்டினதாக தெரியவில்லை. இக்காலத்தில், ஸ்ரீ சோமையாவின் முயற்சியே முதலானது..

இது அவர்கள் செய்யாத குறை. இதைக்காட்டிலும் பெரிதாக அவர்கள் ஹோமியோபதிக்கு இழைத்த தீங்கு என்னவென்றால், தங்களுக்கு இதனால் சீவனம் நடக்கவேண்டியில்லாததால்,மருந்துகளின் விலையை ஒரேயடியாகக்குறைத்து அதைப் பிரசாரமும் செய்து வைத்ததுதான். அதன் காரணமாக ஹோமியோபதியை முழுநேர தொழிலாகக்கொண்டு பணிபுரியும் அநேகமாயிரம் ஹோமியோபதியர்கள், அலோபதி வைத்தியர்களைப்போல் ஆடம்பர வாழ்வு வாழாவிட்டாலும், தன்மானத்துடனும், ஒழுங்கான சாதாரண ரீதியிலும் குடும்பம் நடத்தக் கஷ்டமாயிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வைத்திய பதவியையும், குணத்தையுமே பாதிக்குமளவில் மோசமாக இருக்கிறது.

இத்துடன் நிற்காமல், "குதிரை குப்புறத் தள்ளிவிட்டதுடன், நிற்காமல் குழியும் பறித்ததாம்" என்பதுபோல,

ஆயிரக்கணக்காகத் தொழில் புரியும் ஹோமியோபதியர்கள் நாட்டிலிருக்க, அவர்களுக்குப் போட்டியாக, தங்களையும் பதிவு செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்கிறார்கள். எட்டு, பத்து வருடம் தொழில் புரிபவர்களெல்லாம் போலிகளாம்: "க்வாக்ஸ்" சாம்: அவர்கள் மாத்திரம்தான் அய்னாம்! அவர்கள் எந்த நான்கு வருட, முழுநேர ஹோமியோபதி கல்லூரியில் படித்தார்கள்? எந்த நேர்முக வகுப்பில் அல்லது ஆஸ்பத்திரியில் பயிற்சி பெற்றார்கள்? தமிழ் நாட்டில் ஹோமியோபதி கல்லூரியும் ஆஸ்பத்திரியும் தான் எங்கே?

ஹோமியோபதி படிப்பும் தொழிலும் முன்னேற வேண்டுமென்றால், முழுநேரத் தொழில் செய்யாத ஹோமியோபதியருக்கு சர்க்கார் பதிவு கொடுக்கலாகாது. வேறு தொழிலோ பென்ஷனோ உள்ளவர்களுக்கு தர்ம சிகிச்சைக்கும், குடும்ப சிகிச்சைக்கும் போதுமான மருந்துகள் வாங்க மட்டும் அனுமதி அளிக்கலாம்.

வேறொரு அதிசயம் என்னவென்றால், தொழில் புரியும் ஹோமியோபதியர் மகாநாட்டில் ஒரு சட்டசபை அங்கத்தினர் மெத்தப்படித்த மேதை! பேசுகிறார்: "வயிற்றுப்பிழைப்புக்கு மட்டும் ஹோமியோபதியைக் கையாளுவோர் அந்தத் தொழிலை விட்டுவிடவேண்டும். அப்பொழுதுதான் ஹோமியோபதியின் பெயர் கெடாமலிருக்கும்", (ஹிந்து பத்திரிகை 12—12—1960) அலோபதியரும், மற்ற தொழிலாளரும் வயிற்றுப் பிழைப்புக்காகவல்ல தொழில் புரிவது !! இப்படிப்பட்ட புத்திசாலிகளை வைத்துக்கொண்டு என்னதான் செய்வது! இந்த மேதையும் நமக்கு நேயராம்! இப்படிப்பட்ட பேச்சாளர்களை நம் மேடையில் ஏற்றாதிருக்க காரியதரிசிகள் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

சர்க்கார் கூடிய சீக்கிரம் சட்டசபையில் ஹோமியோபதியைப்பற்றிய ஒரு மசோதாவைக் கொண்டுவரப்போகிறார்கள். இந்த சமயத்திலா இப்படிப்பட்டவர்களை மேடையில் ஏற்ற வேண்டும்?

"என் நேயர்களிடமிருந்து என்னைக்காப்பாற்று" என்றல்லாமல் என்னதான் சொல்வது?

# மதுரையில் மாநில மாநாடு

நாட்டில் வைத்தியப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. வைத்திய உதவிக்காக அலோபதி முறை டாக்டர்கள் போதுமானதாக இல்லாததாலும், தேவையான அளவு டாக்டர்களை தயார் செய்ய தற்போது நாட்டிலுள்ள வைத்தியக் கல்லூரிகளால் முடியாததாலும், நகரப் புறங்களில் மட்டும் ஓரளவு மக்களின் வைத்தியத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. ஆனால் கிராமாந்திரப் பகுதிகளில் வைத்திய உதவி கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்த உதவி அளிக்க அரசாங்கத்தாலும் முடியாத நிலைமை இருந்து வருகிறது. அரசாங்கத்தால் கொடுக்க முடியாத வைத்திய உதவியை ஹோமியோபதி டாக்டர்கள் கிராமங்களுக்கு அளித்து சேவை செய்து வருகிறார்கள். எனவே, நல்ல முறையில் தொழில் நடத்தி மகத்தான சேவை செய்துவரும் ஹோமியோபதியர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று சென்னை ராஜ்ய பதிவு பெற்ற ஹோமியோபதி சங்கங்களின் கூட்டணித் தலைவரான டாக்டர் வி. ஆர். மூர்த்தி கூறினார்.

மதுரை சௌராஷ்டிர செகன்டரி பாடசாலைக் கட்டிடத்தில் 11—12—60 காலை கூடிய சென்னை மாநில ஹோமியோபதி டாக்டர்களின் 2-வது மகாநாட்டிற்கு தலைமை வகித்து அவர் மேலும் பேசுகையில் ஹோமியோபதி வைத்தியத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஒரே கூட்டணியின் கீழ் இணைக்க வேண்டுமென்பதற்காக 'ஹோமியோபதி சங்கங்களின் கூட்டணி' செயல்பட்டு வருவதாயும், ஹோமியோபதி மகாநாடு எங்கு, எப்பொழுது எவரால் நடத்தப்பட்டபோதிலும் ஹோமியோபதி முறை உயர்வடைவதற்காகவும், ஹோமியோபதியர்களின் வாழ்க்கை சீரடைவதற்காகவுமே நடத்தப்படுவதால் எந்த சங்க உறுப்பினராக இருப்பினும் ஹோமியோபதியர்கள் அம்மகாநாடுகளில் கலந்து பயனடை

யவேண்டும் என்று அவர் தெரிவித்தார். ஹோமியோபதி முறை பின் சந்ததியாருக்கும் கிடைக்க வேண்டுமென்றும் இதற்காக அரசாங்கமே தனிக் கல்லூரிகளை அமைக்க வேண்டுமென்றும், எனினும் நமது நாட்டு ஜனப்பெருக்க விகிதத்திற்கேற்ப தேவையான ஹோமியோபதி டாக்டர்களையும் தயார் செய்வது சாத்தியமல்ல என்பதாலும், தபால் மூலம் படிப்பது மட்டமாகக் கருதப்பட்டு வந்த நிலைமை தற்போது மாறியிருப்பதாலும், தபால் மூலம்தான் அதிகம் பேர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும் என்பதாலும், நல்ல முறையில் தபாலில் பாடங்களைப் போதிக்க ஏற்பாடு செய்வது அவசியமென்றும் தபாலில் பாட போதனைக்கு ஒரு 'ஸ்டாண்டர்டு' ஏற்படுத்த வேண்டியிருப்பதாயும் இந்தத்துறையில் தாம் தலைவராக உள்ள ஹோமியோபதியர்களின் கூட்டணி முயற்சி எடுத்து செயலாற்றி வருவதாயும் தெரிவித்த டாக்டர் மூர்த்தி அரசாங்கம் ஒரு பொதுவான பரீட்சை நடத்தி தபால் பாடங்கள் மூலம் பயிற்சி பெற்றவர்கள் அதில் தேர்ச்சி அடைவதுடன் ஏற்கனவே ஹோமியோபதி டாக்டர்களாகப் பணியாற்றி வருபவர்களிடம் 6 மாதகாலம் நேரடி பயிற்சி பெறவேண்டுமென்பதை வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஹோமியோபதி சம்பந்தமான தபால் பாடங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு சர்க்கார் விதி ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினர். மேலும் பேசிய அவர் அலோபதி மருந்துகள் எத்தனை அபாயம் விளைவிக்கின்றன என்பதை விளக்கி, அம்முறை மருந்துகளை ஹோமியோபதியர்கள் கையாளக் கூடாது என்ருர்.

## தனிக் கல்லூரி தேவை

மகாநாட்டுத் தொடக்கத்தில் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் டாக்டர் டி. வி. ராஜகோபால் பேசுகையில் சென்னை ராஜ்ய சர்க்காரும் ஹோமியோபதி வைத்திய முறைக்கு இதர ராஜ்யங்களைப்போல் அங்கீகாரமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தமிழ் நாட்டில் ஹோமியோபதி முறை வளர்ச்சி அடைய ஹோமியோபதி டாக்டர்களைக் கொண்ட ஒரு கௌன்சில் ஏற்படுத்தும்படியும் ஹோமியோபதிக்கென அரசாங்கம் ஒரு தனிக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்றும் கோரினர்.



மகாநாட்டை மதுரை முனிசிபல் சேர்மன் ஸ்ரீ எஸ். தேவசகாயம் ஆரம்பித்து வைத்தார். நமது நாட்டில் வைத்திய வசதி அதிகமாக தேவைப் படுவதாயும் இங்கிலையில் அலோபதி முறையை மட்டுமே ஆதரிக்காமல் ஹோமியோபதிக்கும் சர்க்கார் ஊக்கமளிக்க வேண்டுமென்றும் தங்களால் செய்ய முடியாமலிருக்கும் பட்சத்தில் ஹோமியோபதியைப் பரப்பும் வேலையை ஏற்கெனவே ஏற்று செயலாற்றிவரும் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்காவது அரசாங்கம் ஊக்கமளிக்கவேண்டுமென்றும் அவர் கூறினர். படித்து முடிந்ததும் தொழில் நடத்த முற்படாமல் டாக்டர் வி. ஆர். மூர்த்தி போன்ற நல்ல தேர்ச்சி பெற்ற டாக்டர்களிடம் சிறிது காலம் பயிற்சி பெற்று தொழில் நடத்தத் தொடங்க வேண்டுமென்றும் சேர்மன் கேட்டுக் கொண்டார்.

பின்னர் டாக்டர் ஹானிமன் படத்தை நமது ஆசிரியர் டாக்டர் வி. எஸ். சுப்ரமண்யம் திறந்து வைத்தார். பொள்ளாச்சி டாக்டர் கே. டி. தாமஸ் மற்றும் மேற்படி மகாநாட்டு அமைப்பாளரான டாக்டர் யு. பாக்கியநாதன், திரு. காவேரிமணியன் முதலியோரும் பேசினர்.

## தீர்மானங்கள்

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

ஹோமியோபதி சம்பந்தமான சட்டங்களை அமைப்பதற்கு முன் உண்மையான ஹோமியோபதியர்களடங்கிய கமிட்டியை அமைத்து அதனிடமிருந்து தக்க ஆலோசனைகளைப் பெற்று பின் சட்டம் இயற்றும்படி மகாநாடு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

ஹோமியோபதி டாக்டர்களும் இரண்டு பவுண்டு வரை 20 சதவிகித சாராயம் கலந்த டானிக் போன்ற திரவ மருந்து

களை வைத்துக் கொள்வதற்கு மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் செய்யும்படி கேட்டுக் கொள்கிறது.

ஹோமியோபதி டாக்டர்களாக விரும்புகிறவர்கள் இரண்டு வருடத் தபால் பயிற்சியும் ஒரு வருட அப்ரெண்டிஸ் பயிற்சியும் பெறவேண்டுமென்று குறிப்பிட்டு சட்டம் இயற்றுவதுடன் கடைசியில் சர்க்கார் தேர்வுவைத்து அதில் வெற்றிபெறுபவர்களை சட்டபூர்வமாகத் தேர்ச்சி பெற்ற டாக்டர்களாகக் கருத வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

தற்போது தொழில் செய்துவரும் ஹோமியோபதியர்கள் அனைவரையும் அங்கீகரிக்கும்படியும் ஹோமியோபதிக்கென் ஒரு தனிக் கல்லூரி அமைக்கும்படியும் சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

## மகிழ்ச்சி தரும் செய்தி

பெரும்பான்மையான ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகள் தற்சமயம் நமது லாபரெட்டரியிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மருந்துகளின் உற்பத்திச் செலவு குறைந்துவிட்டது. ஆதலால் 1-12-60 முதல் ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகளின் விலைகளில் கணிசமான குறைவு செய்யப்பட்டுள்ளன. புதிய விலை விவரங்களுக்கு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.

**நுண்ணிய மருந்தினால் எண்ணிய பயனுற கண்ணிய மில்லையேல் புண்ணிய மில்லையே**

தாய்த்திரவம், வீரியத்திரவம், மாத்திரை, இஞ்சக்ஷன் டியூபு முதலிய எந்த உருவில் இருந்தாலும் ஹோமியோபதி மருந்தின் தூய்மையை விஞ்ஞான முறையிலோ அல்லது வேறு எந்த முறையிலும் கண்டறிய முடியாது. அதைத் தயாரித்து விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் கண்ணியத்தைப் பொறுத்த விஷயம் அது.

சென்ற 13 ஆண்டுகளுக்கும் மேலாக ஹோமியோபதி மருந்துகளின் தயாரிப்பு—விற்பனையில் ஈடுபட்டுள்ளது நமது ஸ்தாபனம். எங்களிடம் ஒருமுறை மருந்துகளை வாங்கியவர் மீண்டும் எங்களையே நாடி வருகின்றனர். அத்துடன் தங்கள் நண்பர்களுக்கு எங்கள் மருந்துகளைச் சிபாரிசுசெய்கின்றனர். எங்கள் மருந்துகளின் தூய்மைக்கு வேறு அத்தாட்சி தேவையில்லையல்லவா!

ஹோமியோபதி—பயோகெமிஸ்டிரி மருந்துகள் யாவும் எல்லா உருவங்களிலும் எங்களிடம் கிடைக்கும். அத்துடன் ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் அபிமானிகளுக்கும் சேவை செய்யும் நோக்கத்துடன் எங்கள் தலைவர் டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்களின் தொழில் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டு 52 வகை விசேஷ மருந்துகளையும் 30 வகை ஹோமிக்ஸ் மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

முழு விபரக் கேட்லாக் தேவையெனில் அனுப்புகிறோம்

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.

# சில விசேஷத் தயாரிப்புகள்

★

சில நோய்களுக்கு மருந்தே கிடையாது என்று பெயர். ஆனல், அனுபவ ரீதியாகப் பார்க்கும் பொழுது, நோயுற்ற உடனேயே தொடங்கி நீடித்த காலத்திற்கு விடாமல் கீழ்க் கண்ட மருந்துகளை உபயோகித்து வந்தால், உடல் வாகிற் கேற்ப நலன் காண்கிறது.

| | |
|---|---|
| * யானைக்காலுக்கு | ஸீஹெம் |
| * இரத்தக் கொதிப்புக்கு | ஸர்போமியா |
| * குஷ்ட நோய்க்கு | ஹைமிகால் |
| * வலிப்புகளுக்கு | ஐலேக் |
| * நீரழிவுக்கு | ஜம்போஸைம் |
| * இருதய நோய்களுக்கு | ராக்டோடோன் |
| * மன நோய்களுக்கு | மிஸ்கோ |
| * காச நோய்க்கு | நில்கோஸா |

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28


# நோய் வராமல் பாதுகாப்பது எப்படி?

Dr. V. S. ஸுப்ரமண்யம்

நான்கே நான்கு வார்த்தைகள் உள்ள மிகச்சிறிய கேள்வி இது. ஆனல் இம்மிகச்சிறிய கேள்விக்கு விடையோ கோடிக் கணக்கான வார்த்தைகளில் கூட அடங்காது. எனக்கு இவ் விஷயமாய்ப் பேச அளிக்கப் பட்டிருக்கும் நேரம் மிகக் குறை வாய்த்தான் இருக்கும். ஆதலால் என்னல் முடிந்தவரை விஷ யத்தைச் சுருக்கமாகவும் அதே சமயத்தில் உங்களுக்கு விளங் கும் படியும் சொல்ல முயற்சிக்கிறேன்.

வெவ்வேறு ஊர்களில் இருந்த பழைய நண்பர்ளான இரண்டு வைத்தியர்கள் ஒருவரையொருவர் சந்தித்தனர். ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் சந்திக்கும்போது அவர் களுடைய தொழிலைப் பற்றிய பேச்சு வராமல் இருக்குமா? "உங்கள் பிராக்டீஸ் எப்படி இருக்கிறது; ஊர் எப்படி இருக் கிறது?" என்று ஒருவர் மற்றவரைக் கேட்டார். "அந்த வயிற் றெரிச்சலை ஏன் கிளப்பறீங்க; ஊர்லே எல்லோரும் சௌக் கியமா நோவு நொடியில்லாமே இருந்துட்டு வராங்களே, எப் படி ப்ராக்டீஸ் நடக்கும்" என்று மற்றவர் பதில் கொடுத்தார்.

தகப்பனர் பெரிய டாக்டராகப் பேரும் புகழும் பணமும் சம்பாதித்து விட்டார். தன் மகனையும் வைத்தியக் கல்லூரி யில் சேர்த்து பட்டம் பெற்றவுடன் தன்னிடமே வைத்துப் பழக்கி ஓரளவு அனுபவம் பெற்றவுடன், ரிடையராகி விட்டார். ஒரு நாள் குட்டி டாக்டர் மிகமிகச் சந்தோஷமாய் குதித்தோடி வந்தார் தன் தந்தையிடம். மகத்தானதோர் செயல் புரிந்து விட்ட மகிழ்ச்சியும் பெருமையும் அவர் முகத்தில் தாண்டவ மாடின. "அப்பா, நீங்கள் 25 வருஷங்களாக சிகிட்சை செய்து வந்த அந்த...அம்மாவின் நோயை ஒரே வாரத்தில் குணம் செய்து விட்டேன்" என்று பொறிந்து தள்ளினர். தகப்பனர் தன்னை மெச்சுவார் என்ற நம்பிக்கையுடன் வந்தவர் அவரு டைய முகச்சுளிப்பைக் கண்டு தன் மேல் பொறாமை வந்து விட்டதோ என்றுகூட நினைத்தார். தகப்பனர் சொன்னர்:

"குழந்தாய் அந்த....அம்மாவின் நோயை உன்னைப்போல் ஒரே வாரத்தில் குணம் செய்ய என்னாலும் முடியும். ஆனால் அவ்வாறு செய்திருந்தால் இன்று நீ டாக்டர் ஆகி இருக்க முடியாது" என்றார்!

பழைய காலத்தில் சைனா தேசத்தில் சிகிச்சைக் காலத்தில் நோயாளியின் தலையிலும் உடலிலும் வளர்ந்துள்ள மயிரின் நீளத்தைக் கொண்டுதான் வைத்தியருக்குப் பீசு கொடுத்து வந்தார்களாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நோயை சீக்கிரம் குணம் செய்ய வேண்டுமென்ற அக்கரை டாக்டருக்கு ஏற்படுமா ? நண்டுக்குத் திண்டாட்டம், நரிக்குக் கொண்டாட்டம் என்ற பழமொழியைப்போல மக்களுக்கு நோய் வந்தால் அவை நீடித்திருந்தால் தான் டாக்டருக்கு வருவாய் வரும். ஆகையால் நோய் வராமல் பாதுகாப்பது எப்படி என்ற வழியை மக்களுக்குச் சொல்லிவிட்டால் டாக்டர் பிழைப்புக் கெட்டுப்போகும் என்ற எண்ணமெல்லாம் அந்தப் பொல்லாத பழைய காலத்தில் தான் இருந்திருக்கலாம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது இயற்கை நியதிகளில் ஒன்று. எந்த விஷயமும் அதற்கு விலக்கில்லை. வைத்திய உலகிலும் பழைய கொள்கைகள், கோட்பாடுகள் மறைந்து புதியவை இடம் பெற்று வருகின்றன. உளுத்துப் போன பழைய கோட்பாடுகளிலும் மூட நம்பிக்கைகளிலும் சிக்கித் தவித்த வைத்தியமுறைக்குப் புத்துணர்ச்சியைப் புகுத்தியவர் டாக்டர் ஹானிமன். நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் விஷயமாக அவர் தேடிக் கண்டுபிடித்த புதிய பாதைக்குத்தான் ஹோமியோபதி என்று பெயர். அம்முறையின் தத்துவங்களை ஆர்கனன் ஆஃப் மெடிஸின் என்ற நூலில் ஹானிமனே விளக்கியிருக்கிறார். உண்மையான வைத்தியர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதை அவர் வாயிலாகவே கூறுகிறேன்.

"ஒவ்வொரு நோயிலும் என்னென்ன கோளாறுகளுக்கு சிகிச்சை செய்ய வேண்டும்? ஒவ்வொரு மருந்திலும் என்னென்ன கோளாறுகளை நீக்கும் சக்தி இருக்கிறது ? நோயாளியின் உடம்பில் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் கண்டு பிடிக்கப்பட்ட கோளாறுகளைப் போக்கி நோயற்ற நிலையை மீண்டும் ஏற்படுத்தக் கூடிய மருந்துகளை தேர்ந்தெடுப்பது எப்படி? அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளில் சிகிச்சைக்கு வந்துள்ள நோய்க்கு மிகச்சரியானது எது ? அதை எப்படித் தயாரிப்பது ? எந்த அளவில் எவ்வளவு வேளைகள் எந்தெந்த நேரங்களில் கொடுப்பது? ஒவ்வொரு நோயிலும் குணம் ஏற்படுவதைத் தடை செய்யக்கூடியவை எவை ? அத்தடைகளை நீக்கி நிரந்தர குணம் ஏற்படும்படிச் செய்வது எப்படி ? ஆகிய எல்லா விஷயங்களையும் அறிந்தவரே உண்மையான வைத்தியராவார். ஆரோக்கியத்தைக் குலைத்து நோய்களை உண்டாக்கும் காரணங்களையும் அக்காரணங்களை நீக்கும் வகையையும் வைத்தியர் அறிந்திருக்க வேண்டும்." ஆகவே முன்னேற்றக் கருத்துக்கள் அமைந்த ஹோமியோபதி வைத்திய முறையைப் பின்பற்றும் நாம் நோய் வராமல் பாதுகாப்பது எப்படி என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுவது முற்றிலும் பொருத்தமே ஆகும்.



நோய்கள் தோன்றக் காரணங்கள் என்னென்ன என்பதை அறிந்து கொள்வது முதல் காரியமாகும். காரணங்களைத் தெரிந்து கொண்டு அவைகளை விலக்கினால் நோய் வராமல் பாதுகாப்பது எளிதல்லவா. இவ்விஷயத்திற்கும் நமது டாக்டர் ஹானிமன் நமக்கு வழிகாட்டியாய் இருக்கிறார்.

மனிதனைப் பீடிக்கக் கூடிய நோய்களைத் திடீர்வகை, நீடிக்கும் வகை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார் அவர்.

அளவு மீறிய உணவு, அளவு குறைந்த உணவு, கடுமையான உடல் உழைப்பு, குளிரில் அடிபடுதல், அதிக வெப்பமுள்ள இடங்களில் வேலை செய்தல், அளவு மீறிய கள்குடி, சிற்றின்பத்தில் ஈடுபாடு, ஆரோக்கியக் குறைவான பிரதேசங்களிலும் காற்றோட்டம் இல்லாத வீடுகளிலும் வசிப்பது, போதிய அளவு உடல் பயிற்சி செய்யாமை, நல்ல காற்றை சுவாசிக்காமை, வருத்தம், கவலை, பயம், கோபம், பொறாமை முதலிய பல காரணங்களால் தான் திடீர் வகை நோய்கள் தோன்றுகின்றன.

மேலுள்ள காரணங்களை எவ்வளவுக்கெவ்வளவு விலக்கு கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நோய்களிலிருந்து விடுதலை கிடைக்கும் என்பதில் ஐயமில்லையல்லவா ? சுருக்கமாக நமது உணவு, உறைவிடம், தொழில், பழக்க வழக்கங்கள், மன உணர்ச்சிகள் ஆகிய விஷயங்களில் ஏற்படும் குற்றங்களால் தான் நோய்கள் பெரும்பாலும் தோன்றுகின்றன. ஆகவே, இந்த நான்கு விஷயங்களிலும் உங்கள் சிந்தனையை இடைவிடாது செலுத்தி வாழ்க்கை முறையை ஒழுங்குற வைத்துக் கொண்டீர்களேயானால் நோய் வராமல் பாதுகாப்பது எப்படி என்ற விஷயம் உங்களுக்குத் தலைகீழ்ப் பாடமாகி விட்டது என்று சொல்லலாம்.

நீடிக்கும் வகை நோய்களைப் பற்றி ஒரு குழப்பம் இருக்கிறது. சரியானபடி சிகிச்சை செய்யப்படாத காரணத்தினால் மாதக் கணக்கிலும், வருஷக் கணக்கிலும் இழுபட்டுக் கொண்டிருக்கும் நோய்களை நீடிக்கும் வகை நோய்கள் என்பது சகஜம். ஆனால் அது தவறு. உண்மையான நீடிக்கும் வகை நோய்கள் நமது முன்னோர்களாக இருந்தவர்களின் கெட்ட எண்ணங்களாலும், கெட்ட செயல்களாலும் தான் தோன்றியுள்ளன. பரம்பரை பரம்பரையாக சந்ததிகளைத் தொடர்ந்து பிடித்து வருகின்றன., இவ்வகையான நோய்களைக் கணக்கிட்டுச் சொல்வது மிகவும் கஷ்டம். நரம்புத் தளர்ச்சி, சங்காதோஷம், காரணமில்லாத ஏக்கம், பைத்தியம், அறிவு மங்குதல், காக்கை வலிப்பு, மற்ற பல வலிப்புகள், எலும்புகள் உறுதி குறைதல், புற்று, சதைக் கட்டி, வாதரோகம், மூலம், மஞ்சட்காமாலை, உடல் நீல நிறமடைதல், நீர்ச் சுரப்பு, மாதவிடாய் வெளியாகாமை, வயிறு, மூக்கு, சுவாச கோசங்கள், மூத்திரப்பை, கருப்பை ஆகிய உறுப்புக்களிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து வெளியேறுதல், காசம், சுவாச கோசங்களில் வேக்காடு, ஆண் தன்மைக் குறைவு, பெண்களின் மலட்டுத் தன்மை, ஒற்றைத் தலைவலி, காது கேளாமை, கண்களில் சதை வளருதல், கண்பார்வை மங்குதல், குருடாகுதல், மூத்திரக் கற்கள், பாரிசவாயு ஆகியவைகளை முக்கியமாகச் சொல்லலாம். நல்ல பழக்க வழக்கங்களைக் கையாள்வதுடன் அறிவும் அனுபவமும் வாய்ந்த ஹோமியோபதி டாக்டர்களிடம் சிகிச்சை செய்து வந்தால் தான் இந்தவகை வியாதிகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.



(மதுரை மாநில மகாநாட்டில் நமது ஆசிரியர் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் பேசியது.)


## டீலர்கள் தேவை

ஒவ்வொரு நகரத்திலும் எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகளை விற்பனை செய்ய டீலர்களை நியமித்து வருகிறோம். டீலர்களுக்குத் தாராளமான கமிஷனும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும். ஒவ்வொரு மாதமும் ரூ. 200-க்குக் குறையாமல் மருந்துகளை விற்பனை செய்யக் கூடியவர்கள் மட்டும் முழு விவரங்களுக்குக், கீழுள்ளபடி விலாசமிட்டு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

(" பாலநிலையம் "

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.

## எங்கள் விசேஷ ஹோமியோபதி டானிக்குகள்

* அல்பாவீனு : அல்பால்பா, அவீனு ஸடீவா மற்றும் உயிர் உப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பசியை வளர்த்து, உண்ணும் உணவை உடலில் சேர்த்து உரமூட்டும் டானிக்.

* கல்கால் பாஸ் : சீரணக்கோளாறுகளுக்கும் பல வீனத்துக்கும்.

* கெடோஸான் : நரம்புத்தளர்ச்சி, மன, உடல் உறுதிக் குறைவு முதலியவைகளை நீக்கி, உடலுக்குத் தெம்பூட்டுகிறது.

* நீல்வம் டானிக் : கடுமையான நோய்களினாலும், அதிக உழைப்பினாலும், அளவுக்கு மிஞ்சிய சிற்றின்பத்தாலும் உண்டாகும் பலவீனத்திற்கும் மிகச் சிறந்த டானிக்.

* பாஸ்பேடால் : ஐந்துவித பாஸ்பேட்டுகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. நரம்புகளுக்கும் மூளைக்கும் மிகச் சிறந்தது.

* பைடோன் : 12 வித உயிர் உப்புகளும் சேர்த்து தயார் செய்த டானிக்.

* வைரோஜன் : போட்டியும் அவசரமும் மிகுந்துள்ள இந்நாளில் மனிதனின் நரம்பு மண்டலம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. யௌவனத்திமிரினாலும் சிலர் நரம்புத் தளர்ச்சி அடைகின்றனர். இக்காரணங்களால் தூக்கமில்லாமையும் ஓயாத மனக்கவலையும் உண்டாகின்றன. இத்தகையவர்களுக்குப் புத்துயிரூட்டி வாழ்க்கையில் குதூகலமாய் ஈடுபட வைரோஜன் உதவுகிறது.

* ஜெல்ஸாவீனு : ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமுன் தன்னம்பிக்கை இழந்து உடம்பில் பரபரப்பும் நடுக்கமும் ஏற்படுகிறவர்களுக்கு இன்றியமையாத விசேஷ டானிக். மாணவர்கள், வக்கீல்கள், டாகடர்கள், பிரசங்கிகள், பாடகர்கள், நடிகர்கள் உபயோகிக்கலாம்.

* ஸார்பாரி : இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்யும் உன்னத டானிக்.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.**

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதருஸ்-28.

---

### பன்னிரெண்டாவது

# நேர்முக வகுப்பு அறிக்கை

## 1. வகுப்பு நாட்கள்

வகுப்புகள் 1961-ம் வருஷம் மே மாதம் ஏழாம் தேதி ஆரம்பமாகி சுமார் 2 வாரங்கள் நடைபெறும். மாணவர்கள் விரும்பினால் சனி, ஞாயிறு ஆகிய லீவு நாட்களிலும் நடத்தி வகுப்புகளை சீக்கிரம் முடிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

## 2. போதிக்கப்படும் விஷயங்கள்

1. இஞ்சக்ஷன் செய்தல்.
2. வியாதியஸ்தர்களைப் பரிசோதனை செய்தல்.
3. தர்மாமீட்டரை உபயோகிக்கும் விதம்.
4. ஸ்டெதாஸ்கோப்பினால் இருதயத்தைப் பரிசோதித்து இருதய வியாதிகளை ஆராயும் விதம்.
5. ,, சுவாச கோச வியாதிகளை ஆராயும் விதம்.
6. மல, மூத்திரப் பரிசோதனை.
7. இரத்த விசை கண்டு பிடித்தல் (Blood Pressure.)
8. வைத்தியத் தொழிலின் நுணுக்கங்கள்.
9. ஹோமியோபதி தத்துவ விளக்கம்.
10. இவை போன்ற பல முக்கிய விஷயங்களும் முடிந்த வரை தமிழில் போதிக்கப்படும்.

## ச ம் ப ள ம்

பிரவேசக் கட்டணம் ரூ. 5
சம்பளம் ரூ. 50.

## சம்பளம் செலுத்தும் வகை

வகுப்பில் சேர விரும்பும் மாணவர் 1961 ஏப்ரல் மாதம் பத்தாம் தேதிக்குள் பிரவேசக் கட்டணத்துடன் சம்பளம் பூராவையும் செலுத்த வேண்டும்.

**ஏப்ரல் மாதம் பத்தாம் தேதிக்குப் பிறகு ரூ. 65- செலுத்தினால் தான் சேர்த்துக் கொள்ள முடியும்.**

தொகை வந்தவுடன் விண்ணப்பப் பாரம் அனுப்புவோம். அதைப் பூர்த்தி செய்து மறு தபாலில் அனுப்ப வேண்டும்.

## ச ர் டி பி கே ட்

நேர்முக வகுப்பில் சேர்ந்த மாணவர்களுக்கு "நேர்முக வகுப்பில் சேர்ந்து இஞ்சக்ஷன் செய்தல் முதலிய விஷயங்களில் தேர்ச்சி பெற்றார்" என்று சர்டிபிகேட் வழங்கப்படும்.

## அனுசரிக்க வேண்டிய விதிகள்

ஷரா 1. எமது தபால் வகுப்பில் சேர்ந்து தேர்ச்சிப் பெற்று சர்டிபிகேட் வைத்திருப்போருக்கு முதல் இடம் அளிக்கப்படும். இப்பொழுது படித்துக் கொண்டிருப்பவர்கள் இவ்வகுப்பில் சேர விரும்பினால் இவ்வகுப்புக்கான சம்பளம் அனுப்பும் போது தபால் வகுப்பு விஷயமாக செலுத்த வேண்டிய சம்பளம், பரீக்ஷைக் கட்டணம் ஆகியவைகளையும் பாக்கியில்லாமல் செலுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் சேர்த்துக் கொள்ள முடியாது. வேறு ஸ்தாபனங்களில் ஹோமியோபதி படித்தவர்களுக்கும் எங்கள் நேர்முக வகுப்பில் இடம்



உண்டு. அவர்களும் பிரவேசக் கட்டணம் ரூ. 5, சம்பளம் ரூ. 50 ஆக ரூ. 55 செலுத்த வேண்டும். (1961 ஏப்ரல் பத்தாம் தேதிக்குள்).

2. சம்பளம் செலுத்திவிட்டு எக்காரணத்தினலாவது வகுப்பில் ஆஜராக முடியாமல் போய்விட்டால் அதற்காக அவர் செலுத்திய தொகையை திருப்பி அனுப்பவோ அல்லது வேறு காரியங்களுக்கு ஈடு செய்யவோ முடியாது.

3. வகுப்பு நடக்கும் இடத்திலும் தங்கும் இடங்களிலும் மாணவர்கள் ஒழுங்காகவும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். கௌரவமற்ற வகையிலும் விரும்பத்தகாத முறைகளிலும் நடப்போரை வகுப்பிலிருந்து நீக்கவும் தங்குமிடத்திலிருந்து வெளியேற்றவும் அவர்கள் அனுப்பிய தொகைகளைப் பறிமுதல் செய்யவும் கவர்னிங் டைரக்டருக்கு பூரண அதிகாரமுண்டு. எல்லா விஷயங்களிலும் அவர் தீர்ப்பு முடிவானதாகும்.

## தங்குவதற்கு இடம்

தங்குவதற்கு வேண்டிய இடவசதி விஷயமாக மயிலாப்பூரிலுள்ள ஒரு லாட்ஜிங் கம்பெனி நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் வாடகை பெற்றுக்கொண்டு இடம் அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். அறையின் பரப்புக்குத் தக்கபடி ஒவ்வொரு அறையிலும் 3, 4, அல்லது 5 நபர்களுக்கு இடம் இருக்கும். தனி அறை கிடைக்காது. இடவசதி தேவையானோர் சம்பளத்துடன் ரூ. 10 சேர்த்து அனுப்பவேண்டும். இன்னும் ஏதாவது கொடுக்க வேண்டியிருந்தால் லாட்ஜிங் கம்பெனியிடமே கொடுக்கலாம்.

மாணவிகளுக்கு கவர்னிங் டைரெக்டரின் மேற்பார்வையில் தகுந்த இட வசதி தங்குவதற்கு மட்டும் செய்து தரப்படும். ஆகவே இவ்விஷயமாய்க் கவலை வேண்டாம்.

## உணவு வசதி

மயிலாப்பூரில் பல நல்ல ஹோட்டல்கள் இருக்கின்றன. ஆகவே உணவு பற்றிக் கவலே இல்லே. நாளொன்றுக்கு இரண்டு வேளே உணவுக்கும், காபிக்கும் ரூ 1.50 ஆகலாம். அவரவர்களின் சக்தியைப் பொறுத்து அதிகமாகவோ குறைவாகவோ செலவிடலாம்.

## முடிவுரை

நேர்முக வகுப்பில் நிச்சயமாக இடம் கிடைக்க **ஏப்ரல் மாதம் பத்தாம் தேதிக்குள் சம்பளம் அனுப்ப வேண்டும்** என்பதை மீண்டும் ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

## முக்கியக் குறிப்பு

பல முக்கியமான விஷயங்களேத் தவிர இவ்வாண்டு பிரசவம், மாதவிடாய், கருஉருதல், பிள்ளேப்பேறு முதலிய பெண்களேப்பற்றிய நோய்களேயும் நிலேமைகளேயும் விவரமாகவும் தெளிவாகவும் போதிக்க 18 ஆண்டுகளுக்கும் மேலாக நேரிடையான அனுபவமுள்ள பெண்மணி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர். இவ்விஷயம் ஹோமியோபதி வைத்தியர்களுக்கு மிக மிக உபயோகமாயிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லே.

எக்காரணங் கொண்டும் நூறு மாணவர்களுக்குமேல் நேர்முக வகுப்பில் சேர்க்க முடியாது. ஆகவே, நிச்சயமாக இடம் வேண்டுவோர் ஏப்ரல் மாதம் பத்தாம் தேதிவரை காத்திருக்காமல் இவ்வறிக்கை கிடைத்தவுடனே தொகை அனுப்ப வேண்டும்.

# சண்டை

(ஸ்ரீ மேபூதருமன்: லக்காவல்லி, மைசூர் ஸ்டேட்)

ஹோமியோபதி வைத்தியரிடம் சிகிச்சைக்கு வந்தவர்கள் முருகன், வடிவேல் என்னும் இரு நண்பர்கள்.

முருகன் வரும்போதே கூட வந்த வடிவேலுவிடம் கோபமாகப் பேசிக் கொண்டு வந்தார்.

"வாருங்கள், என்ன சண்டை" என்று வரவேற்ருர் வைத்தியர்.

"பின்னே பாருங்கள் டாக்டர். இவர் எனக்கு எதிலும் போட்டியாக நிற்கிருர். நான் தான் முருகன் என்ருல் இவர் முருகனின் மறுபெயர்களில் ஒன்ருன வடிவேல். எனக்குத் தான் பல்வலி என்ருல் இவரும் தனக்கும் பல்வலி என்று உங்களிடம் சிகிச்சைக்கு வருகிருர் என் கூட" என்று கோபமாகப்பேசினுர் முருகன்.

வடிவேல் வாயைத் திறக்கவில்லே. இரு தாடைகளும் உப்பி இருந்தன. அவர் வாயினுள் என்ன இருக்கிறது? வீக்கமோ? அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது வைத்தியருக்கு. "பாவம் அவரைக் கோபிக்காதீர்கள் முருகன்" என்ருர் வைத்தியர்.

உடனே— "யோவ் உனக்கு என்னய்யா தெரியும்? அவன்...." என்று சிடு சிடுவென்று பேசினுர் முருகன். "வைத்தியம் செய்துகொள்ள வந்தீர்களா, என்னேக் கோபிக்க வந்தீர்களா?" என்று அன்பாகக் கேட்டார் வைத்தியர்.

"அடடா. மன்னித்துக் கொள்ளுங்கள் டாக்டர். வாய் தவறிப் பேசிவிட்டேன்! வடிவேல், நீ கூட என்னே மன்னிச்சுக்கப்பா. உனக்கும் என்னேப்போல் வலி இருக்கும்? நீ பேசாமல் இருக்கவில்லேயா? நான் மட்டும் கோபமாகப் பேசலாமா? இருந்தாலும் — எனக்கு என் வியாதியின் உபத்திரவத்தால் எல்லாம் மறந்து போய் — கோபம் தான் முன்வந்து விடுகிறது" என்று சொன்னுர் முருகன்.

இந்தச் சமயத்தில் வடிவேல் தமது வாயில் இருந்த தண்ணீரைக் கீழே உமிழ்ந்தார். இதைப் பார்த்ததும் முருகன் முன்னிலும் அதிகக் கோபத்துடன் "டேய்! மடையா, என்னைக் காரி துப்புகிறுயா ?"

"பாருங்கள் டாக்டர். வரும் வழியில் நான் காப்பி குடித்தேன். இவன் எப்போதும் காப்பி குடிக்கும் வழக்கமில்லை. அதற்காக ஒரு 'ஐஸ்' வாட்டர் கேட்டான். வாங்கி கொடுத்தேன். அதை அப்படியே வாயில் வைத்திருந்து இப்போது என் முகத்தில் உமிழாத குறையாகக் கீழே உமிழ்கிறுன்" என்று கோபம் பொங்கக் கத்தினுர் முருகன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, வைத்தியரே! குளிர்ந்த தண்ணீரை வாயில் வைத்திருக்கும் பொழுது வலியே இல்லாமலிருந்தது. இப்போது சற்று சூடடைந்து விட்டதால் வலி எடுக்கிறது, அதனுல் அதைக் கீழே உமிழ்ந்தேன்" என்றுர் வடிவேல்.

வைத்தியர் அவ்விரு நோயாளிகளையும் அவர்கள் உபாதியையும் கொடுக்க வேண்டிய மருந்தையும் புரிந்து கொண்டார். உடனே, முருகன் கையில் 'சாமேமில்லா' பாட்டிலை வைத்தார்.

மற்றெருவரான வடிவேலிடம்—'காபியாக்ரூடா' கொடுத்தார்.


தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்

**வெகுநாட்களாக எதிர்பார்த்த**

**தாய்த்திரவங்கள்**

**மெட்டீரியா மெடிகா**

இரண்டாம் பதிப்பு

**வெளிவந்து விட்டது**

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பஸ், ரயில்
பிரயாணமென்றுல்
தலை சுற்றல்,
வாந்தியென்று
மலைப்பாய் இருக்கிறதா ?

எங்கள்

**கோடிக்**

உங்களுக்கு உதவும்.

பனி பெய்ய, பயமா ?
குளிர் காண, கவலையா
ஆஸ்த்மா, இருமல்
அதிக்கத்தைப் போக்க

எங்கள்

**நில்கோஸா**

உங்களுக்கு உதவும்.

அசீரணம் வயிற்றுவலி
ஆகியவைகளுக்கு
அநேக மருந்துகள்
எம்மிடம் உள்ளன.

முதலில்

**இபில்கோ**

கொடுத்துப் பார்க்கலாம்.

பொல்லாத சுரங்கள்
எல்லாவற்றிற்கும்
ஒரே ஒரு மருந்தா ?
யாருமே கேட்டதில்லை !

ஆனுல்

**ஏக்வின்**

என்ற எம்மருந்து
முதலுதவிக்குப் பயன்படும்.

**தி. ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதருஸ்-28.**

# எங்கள் சொந்தத் தயாரிப்பு
# மகவிற்காம் மருந்துகள்

* **கிட்டிமிக்ஸ்**
  குழந்தைகளுக்கென்றே தயார் செய்யப்பட்ட டானிக் வயிற்று வலி, அசீரணம், சுரம், வயிற்றுபோக்கு முதலிய கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம்.
* **பயோலாக்ஸ்**
  சுகபேதி மருந்து.
* **ஹோலிஹோ**
  குழந்தைகளின் ஈரல், குலை கட்டிகளுக்கு.
* **ஸாண்டோஸின்**
  வயிற்றுப் பூச்சி, குடல் பூச்சிகளைக் கொல்வது மட்டுமின்றி பூச்சிகள் உற்பத்தியாகும் சரீர வாகையே மாற்றும்.
* **ஸில்டோனிஸ்**
  டான்சில் நோய்க்கு ஆபரேஷன் செய்வது மிகக் கெடுதல் என்று எல்லா டாக்டர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் வேறு ஒரு வைத்திய முறையிலும் இதற்கு மருந்து கிடையாது. நமது ஸில்டோனிஸ் சாப்பிட்டு வந்தால் ஆபரேஷனே தேவையாயிராது.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கை பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலையம்,"
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**
**சென்னை-28.**


# ஹோமியோபதித் துணுக்குகள்

காலையில் மூன்று மணிக்கு பொறுக்க முடியாத இருமலும், இழுப்பும் குறிகளாகக் கொண்டவை அம்மோனியம் கார்போனிகம், ரூமெக்ஸ், ஆன்டிமோனிடம் டார்டாரிகம், காஸ்டிகம், கூப்ரம், காலி நைட்ரிகம்: ஆனால், அதிகாலையில் இப்படிப்பட்ட இருமலுடன் ஒட்டும் குணமுள்ள கோழையும் வந்தால் ஹிப்பார் சல்பர், காலி ஐயோடேட்டம் கொடுக்க வேண்டும்.

**டாக்டர் கோஹ்லர்**

கண்ணுக்கும் எலும்புக்கும் காயம் பட்டால் ஸிம்பிடம் கொடுக்கிறோம். ஆனால், இம் மருந்தின் பூரண குணங்கள் அறியாமலிருக்கிறது ஒரு குறை தான். உதாரணமாக குதிரையின் குளம்பினால் வலது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்ட ஒரு கிழவருக்கு உள்ளூர ரத்தம் கசிந்து கண்ணே போய் விடும் போல் இருந்தது. கண் வைத்தியர்களும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பொழுது ஸிம்பிடம் கொண்டு மாத்திரமே அந்தக் கண்ணைக் காப்பாற்ற முடிந்தது. அது மாத்திரமல்லாமல் பல வருடங்களாக நோயாளியின் தலையிலும் முதுகிலும் இருந்த சதைக்கட்டிகள் மாயமாய் சில வாரங்களில் பறந்தன! நோயாளியின் உடம்பும் வலிவுற்றது.

**டாக்டர் ஜே. கிஷோர்**

நமது உயர்ந்த வீர்யங்கள் ஒன்றிரண்டு நாட்களுக்கு நோயை அதிகப்படுத்தி பிறகு பல நாட்களுக்கு சிறுகச்சிறுக குணமாக்குகிறது. குறைந்த வீர்யமோ குறுகிய காலத்திற்கு மேல் போக்காக வேலை செய்வதால் திரும்பித் திரும்பிக்கொடுக்க வேண்டி வருகிறது. ஆதலால் இரண்டு வீர்யத்தையும் கலந்து பிரயோகித்தால் போதிய அளவு வேலை செய்கிறது.

**டாக்டர் பெரோன்வின்**

ஆஸ்த்மா நோயில் முழு குணம் காண நேட்ரம் ஸல்ப்யூரிகம் கொடுக்காமல் முடியாது.

**டாக்டர் மி. சங்கரன்**

குழந்தைக்குப் பாலூட்டும் பெண்களுக்கு பால் சுரக்க ஸபால் செருலாடா கொடுக்க வேண்டும். பாலை வற்ற வைக்க லாக்கானினம் கொடுத்தால் போதும்.

# எங்கள் சொந்தத் தயாரிப்பு மாதர்க்காம் மருந்துகள்

* **ஆர்னிகா ஹேர் ஆயில்**
  தலை அரிப்பு, பேன் பிடித்தல், சிக்குப் பிடித்தல், மயிர் கொட்டுதல் முதலிய கோளாறுகளை நீக்கி, தலை மயிர் வளரச் செய்கிறது.
* **ஈடி டாப்லெட்ஸ்**
  சுக பிரசவ மாத்திரைகள்: ஏழாவது மாதத்திலிருந்து கொடுக்கலாம்.
* **க்ரெப்ஸீன்**
  கருப்ப ஸ்திரீகளுக்கும், தாய்ப் பால் கொடுக்கும் ஸ்திரீகளுக்கும் புஷ்டி யளிப்பது.
* **நிஸ்ஸானு**
  சங்கா தோஷ நிவாரணி
* **நோமோலெக்ஸ்**
  பெண்களின் மாதவிடாய், கருப்பைப் பற்றிய நோய்களுக்குச் சிறந்தது.
* **பைடோலெக்கா பெரி**
  உடல் பருமனைக் குறைப்பது.
* **மெஜித்**
  நோயினால் அமுக்கப்பட்ட மாதவிடாயை வெளிப்படுத்தும்.
* **மைலார்**
  வெட்டை ஒழுக்கை நீக்க தேக புஷ்டி தரும்.
* **ஸிபாரி டாப்லெட்ஸ்**
  அமித இரத்தப் பெருக்கு, வெள்ளைப்பாடு இவைகளை நீக்கி சுகம் கொடுக்கும்.
* **நீல்வம் டானிக்**
  கடுமையான நோயினாலும், அதிக உழைப்பினாலும், பல் வீனமடைந்த மாதர் மகிழ்வுற சிறந்த டானிக்.

விலை விவரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்

## தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை—28.**


# செய்திகள்

### நன்றி

ஆங்கிலப் புது வருடம், தமிழர் திருநாளான பொங்கல், ஆகிய நன்னாட்களில் எங்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய எல்லோருக்கும் இப்பத்திரிகையின் மூலம் நன்றியைத் செலுத்திக் கொள்கிறோம்.

### மகிழ்ச்சி

நமது டிசம்பர் மாத இதழில் எழுதியதற்கேற்பவும் அநேக சங்கப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்கியும் கும்பகோணத்தில் டிசம்பர் 18–ம் தேதியில் நடந்த பெடரேஷனின் விசேஷ பொதுக்கூட்டத்தில் பெடரேஷன் தலைவர் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள், பொதுக்காரியதரிசியின் பேரில் தான் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். இச்செய்தி ஒற்றுமையை நாடும் எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கும்.

### பாராட்டு

குடந்தை டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்களுக்கும், சென்னை டாகடர் வி. எஸ். சுப்ரமண்யம் அவர்களுக்கும், மதுரை வடக்கு வெளி வீதி அரசமரத்துச் சந்திலிருக்கும் பாலு ஹோமியோபதி க்ளினிக் சார்பில் 12-12-60ம் தேதி மாலை 4 மணிக்கு மேலூர் டாக்டர் பி. எஸ் முருகானந்தம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை நகர் மன்றத் துணைத் தலைவர் டாக்டர் என். ஆர். ராஜமாணிக்கம், டாக்டர் கே. கண்ணையாராஜ், டாக்டர் டி. வி. ராஜகோபால் ஆகியோர் ஹோமியோபதி வைத்திய முறையில் இவர்களின் சேவைகளைப் பற்றி பாராட்டிப் பேசினார்கள். கூட்டத்தின் முடிவில் புகைப்படம் பிடித்தார்கள். தேனீர் விருந்துடன் கூட்டம் முடிந்தது.

இதன் பிறகு மதுரை, பொன்னகரம் பிராட்வே ரோட்டில் உள்ள ஜெகநாத சித்த வைத்தியக் கல்லூரியில் மற்றொரு பாராட்டு விழாவும் நடைபெற்றது. இக்கல்லூரியின் பொறுப்பாளர் டாக்டர் ஏ. இடும்பன் அவர்கள் இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஹோமியோபதி ஹௌஸ் காரியதரிசி எழுதுகிறார் :—

நேயர்கள் எங்களுக்கு கடிதம் எழுதும்போது முகவரியில் "சென்னை" என்று மாத்திரம் எழுதாமல் "சென்னை—28." என்று எண்ணையும் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். அப்படி எழுதாவிட்டால் கடிதங்கள் மிகவும் தாமதிக்கப்படும்.

### மாதாந்திரக் கூட்டம்

வட சேலம் பதிவு பெற்ற ஹோமியோபதி மருத்துவர் கள் சங்கத்தின் 20வது மாதாந்திரக் கூட்டம் கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவி பால ஷண்முக வைத்தியசாலையில் 4—10—60 அன்று சிறப்பாக நடைபெற்றது. அடுத்ததாக ஜனவரி மாதம் 1-ம் தேதி மற்றொரு கூட்டம் நடைபெறும்.

### புது ஆஸ்பத்திரிகள்

எமது பழைய மாணவர் டாக்டர் எம். காமாட்சி அவர்கள் மதுரை விராட்டிப்பட்டு கிராமத்தில் "கமலா ஆஸ்பத்திரி" என்ற பெயரில் 11—9—60 அன்று மருத்துவமனை ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகிறார். அவரது தொண்டு சிறந்து விளங்க எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

அய்யலூர் மெயின்ரோட்டில் எமது மாணவர் டாக்டர் ஏ. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் ஹோமியோபதி வைத்திய சாலை ஒன்றை இம்மாதம் 14ம் தேதியன்று துவக்கியுள்ளார். இவர் தொண்டு சிறந்து விளங்க எங்கள் ஆசிகள்.

### கல்லூரி

டிசம்பர் 29-ம் தேதி ஸ்ரீ என். வெங்கட்டராமய்யர், டாக்டர் சங்கர் ராவ் கோபிகர், பி. வி. சேஷகிரி ராவ் ஆகி யோர் சென்னை சுகாதார மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலுவை பேட்டி கண்டு கூடிய சீக்கிரத்தில் ஒரு ஹோமியோபதி கல்லூரி துவக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அலோபதி எம். பி. பி. எஸ். தர 4½ வருடப் படிப்புக்கும், இரண்டு வருட டிப்ளோமா படிப்புக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

### திண்டுக்கல்

திண்டுக்கல் வட்டார பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்க கூட்டம் 25—12—60ல ஞாயிற்றுக்கிழமை



காலை திண்டுக்கல் மலை அடிவாரம் ஸ்ரீ ராமலிங்கசுவாமிகளின் ஆசிரமத்தில் டாக்டர் திரு. லோகநாதய்யர் அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. கூட்டத்தில் ஹோமியோபதி வைத்தி யத்தைப் பற்றியும், ஹோமியோபதி டாக்டர்கள் மக்களிடம் நம் முறையைப் புகுத்துவதற்கு எம்முறையில் பழக வேண்டும் என்பதைப் பற்றியும், மாநில சங்கம் ஹோமியோபதி டாக் டர்களுக்கு செய்து வரும் நல்ல காரியங்கள் பற்றியும் கூட் டத்தில் சிறுமலை டாக்டர் திரு. G. ராஜாராம், டாக்டர் திரு. E. சுப்ரமணியம், டாக்டர் திரு. ஹூசேன், அய்யலூர் டாக் டர் திரு. A. S. கிருஷ்ணசாமி முதலியவர்கள் பேசிமுடித்த பின் டாக்டர் ஜனாப் A. K. சம்சுதீன் நன்றி கூறி கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தில் கலந்து கொண்ட டாக்டர் களுக்கு மத்திய உணவு சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்டது.

### பவானி

பவானி தாலுக்கா பதிவு பெற்ற ஹோமியோபதி டாக் டர்கள் சங்கம் ஒன்று 21—12—60ல் அந்தியூரில், பவானி டாக்டர் C. K. சுவாமிநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட் டது. கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தற்காலிகமாக டாக்டர் J. தேவசகாயம், டாக்டர் J. N. இப் ராஹிம், டாக்டர் K. பொன்னேஸ் இவர்கள் சங்க அலுவலர் களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர் அவர்கள் முடி வுரைக்குப் பின்பு சிற்றுண்டியுடன் கூட்டம் இனிது முடிந்தது.

### ஊர்வலம்

மதுரையில் 11—12—60ல் நடந்த சென்னை மாநில ஹோமியோபதி டாக்டர்களின் இரண்டாவது மாநாடு முற் பகலில் முடிவடைந்ததும், பிற்பகலில் ஹோமியோபதியர்க ளின் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. மாலை ராஜாஜி திடலில் ஒரு பொதுக்கூட்டம் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர் கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் டாக்டர் வி. எஸ். சுப்ரமண்யம் பேசிய சொற்பொழிவை மற்றொரு பக்கத்தில் பார்க்கவும்.

## தென் சென்னை பதிவுற்ற ஹோமியோபதியர் சங்கம்.

இம்மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தி ஹோமியோபதி ஹௌஸில் ('பால நிலையம்' 77, ராமகிருஷ்ண மடம் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28) தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதியர்களின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதியர் சங்கம் ஒன்று ஏற்படுத்தி போதிய சட்ட திட்டங்களை அமுலாக்கி நிர்வாகஸ்தர்களையும் தேர்ந்தெடுக்கப்படும்.

எல்லோரும் வந்து கூட்டத்தைச் சிறப்பித்து சங்க வளர்ச்சிக்கும் முயற்சி செய்ய வேண்டிக் கொள்கிறோம்.

டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்.
கவர்னிங் டைரக்டர்.

தி ஹோமியோபதி ஹௌஸ்,
"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
(ராபர்ட்சன் பேட்டை பஸ் நிறுத்தம்)
சென்னை—28.

## ஹோமியோபதியின் கீதை

என்று பெயர் பெற்ற
டாக்டர் ஹானிமனின்
**"ஆர்கனு"வை**

**டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்**

தமிழாக்கி புத்தக ரூபமாக வெளிவந்துவிட்டது.

ஆங்கிலத்திலேயே எளிதில் புரியாத இப்புத்தகத்தை எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வேறு தமிழாக்கம் படித்துள்ளோரும் இதைப் படித்து நலம் பெறலாம்.

இதன் விலை ரூ. 3. அனுப்பும் செலவு தனி.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலையம்"
**77, ராமகிருஷ்ண மடம் ரோட், சென்னை-28.**

---

## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகளும்
* ஸினரேரியா மாரிடிமா கண் துளிகளும்
* அல்பால்பா டானிக்கும்
* டயகார்டு இருதய டானிக்கும்

எங்களிடம் கிடைக்கும்:

**தி ஹோமியோபதி ஹௌஸ்**
"பால நிலையம்"
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.**

# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்ப சிகிச்சை செய்வோரும் ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும் அதிக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விவரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

தி ஹோமியோபதி ஹௌஸ்,
"பால நிலையம்"
77, ராம்கிருஷ்ண மடம் ரோடு,
மதருஸ்-28.

| ஈறு வீக்கம் ?<br>**ஸால்கர் ஆயில்** | தேள் கடி ?<br>**ஸ்டிங்கீஸ்** |
|---|---|
| காது வலி ?<br>**நிம்டு ஆயில்** | கண் நோய் ?<br>**யூபோட்ராப்ஸ்** |

## மேல் பூச்சு மருந்துகள்

**நோஸின் ஆயிண்ட்மெண்ட்**
கரப்பான், படை முதலியவைகளுக்கு.

**மார்கேட் களிம்பு**
எல்லாவகை புண்களுக்கும்.

**ஹாடில் களிம்பு**
மூல நோய்களுக்கு.

இன்னும் அநேக களிம்புகளும், வெளிப் பூச்சு திரவங்களும் எங்களிடம் கிடைக்கும்.

தி ஹோமியோபதி ஹௌஸ்,
"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதருஸ்-28

Reg. No. M 6555 January 15, 1961.

## க்யூ-வரிசையில்

நோயாளிகள் நிற்கும் பொழுது
ஒரே மருந்தைத் தேடிப்பிடிப்பது
கஷ்டம் தான்; அதுவும்
ஆரம்ப டாக்டராயிருப்பின்!
உங்களுக்காகத்தான்
ஹோமிக்ஸ் ரெமடீஸ்
முப்பது மருந்துகளையும்,
எங்கள் கூட்டு மருந்துகள்
ஐம்பத்திரண்டையும்
தயார் செய்திருக்கிறோம்.
அவ்வளவையும் ஒரே தவணையில்
வாங்க முடியாவிட்டால்
வேண்டியவைகளை மாத்திரம்
வாங்கிக் கொள்ளலாம்.
புதிய, விபரமான இவ்வருட
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**
"விற்பனை இலாகா"
"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

Edited and Published by Dr. V. S. Subramanyam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1

நோயிலா வாழ்வே குறைவிலாச் செல்வம்

12/1/61

# ஹோமியோபதி மித்திரன்

LL N61
9-7 742

38 காசுகள்

## எங்கள் விசேஷ
## ஹோமியோபதி டானிக்குகள்

* அல்பாவீனு : அல்பால்பா, அவீனு ஸ்டீவா மற்றும் உயிர் உப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பசியை வளர்த்து, உண்ணும் உணவை உடலில் சேர்த்து உரமூட்டும் டானிக்.

* கல்கால் பாஸ் : சீரணக்கோளாறுகளுக்கும் பல வீனத்துக்கும்.

* கெடோஸான் : நரம்புத்தளர்ச்சி, மன, உடல் உறுதிக் குறைவு முதலியவைகளை நீக்கி, உடலுக்குத் தெம்பூட்டுகிறது.

* நீல்வம் டானிக் : கடுமையான நோய்களினலும், அதிக உழைப்பினுலும், அளவுக்கு மிஞ்சிய சிற்றின்பத்தாலும் உண்டாகும் பலவீனத்திற்கும் மிகச் சிறந்த டானிக்.

* பாஸ்பேடால் : ஐந்துவித பாஸ்பேட்டுகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. நரம்புகளுக்கும் மூளைக்கும் மிகச் சிறந்தது.

* பைடோன் : 12 வித உயிர் உப்புகளும் சேர்த்து தயார் செய்த டானிக்.

* வைரோஜன் : போட்டியும் அவசரமும் மிகுந்துள்ள இந்நாளில் மனிதனின் நரம்பு மண்டலம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. யௌவனத்திமிரினுலும் சிலர் நரம்புத் தளர்ச்சி அடைகின்றனர். இக்காரணங்களால் தூக்கமில்லாமையும் ஓயாத மனக்கவலையும் உண்டாகின்றன. இத்தகையவர்களுக்குப் புத்துயிரூட்டி வாழ்க்கையில் குதூகலமாய் ஈடுபட வைரோஜன் உதவுகிறது.

* ஜெல்ஸாவீனு : ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமுன் தன்னம்பிக்கை இழந்து உடம்பில் பரபரப்பும் நடுக்கமும் ஏற்படுகிறவர்களுக்கு இன்றியமையாத விசேஷ டானிக். மாணவர்கள், வக்கீல்கள், டாகடர்கள், பிரசங்கிகள், பாடகர்கள், நடிகர்கள் உபயோகிக்கலாம்.

* ஸார்பாரி : இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்யும் உன்னத டானிக்.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
" பால நிலையம் "
77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.

For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laborataty Only.

# ஹோமியோபதி மித்திரன்

நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8 பிப்ரவரி 1961 இதழ் 7

பொருள் அடக்கம் — பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கூட்டணி .... | 3 |
| 2. | ஹோமியோபதித் துணுக்குகள் .... | 8 |
| 3. | பிள்ளைப் பற்கள் ... | 9 |
| 4. | ஹோமியோபதித் தந்தை .... | 12 |
| 5. | மருத்துவத்தில் தேன் .... | 15 |
| 6. | ஹோமியோபதி டாக்டர்களின் சங்கம் .... | 21 |
| 7. | கேள்வியும் பதிலும் .... | 23 |
| 8. | மெடிகல் டிக்ஷனரி ... | 25 |
| 9. | செய்திகள் .... | 29 |


## மகிழ்ச்சி ஊட்டும் செய்தி

சென்ற மாத இதழில் வெளியான பன்னிரெண்டாவது நேர்முக வகுப்புப் பற்றிய அறிக்கையை எல்லோரும் படித்திருக்கலாம். அவ்வகுப்பில் போதிக்கப்படுவதாக வெளியிடப்பட்டுள்ள பல விஷயங்களுடன் தாய்மை, கருப்பம், பிரசவம், ஆகியவைகளும் போதிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறோம். ஆகவே, இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் எல்லோரும் வகுப்பில் சேர்ந்து நன்மை அடைவதை வரவேற்கிறோம்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
" பால நிலையம் "
77, ராமகிருஷ்ண மடம் ரோட், சென்னை-28.

தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்
வெகுநாட்களாக எதிர்பார்த்த
# தாய்த்திரவங்கள்
# மெட்டீரியா மெடிகா
97742
இரண்டாம் பதிப்பு
## வெளிவந்து விட்டது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## என்னம் டாப்லெட்ஸ்

எவ்விதக் கெடுதலையும் விளைவிக்காமல் தலைவலியை நீக்கும் பொருட்டுப் பல ஆண்டுகள் இடைவிடாமல் ஆராய்ச்சி நடத்தியதின் பேரில் கிடைத்த ஒப்பற்ற மருந்து.

"ஞாபகமிருக்கட்டும், இதுவே தலைவலிக்கு சிறந்த மருந்து"

## வைத்தியக் கருவிகள்

ஜெர்மன், சைனு, இந்தியன் ஸ்டெதாஸ் கோப்புகள், ஜெர்மன், ஜப்பான், இங்கிலீஷ் தர்மாமிட்டர்கள், இஞ்சக்ஷன் சிரஞ்சுகள், ஊசிகள் மற்றுமுள்ள வைத்திய கருவிகள் ஆகியவைகளுக்கு எங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள். "குறைந்த லாபம்! நிறைந்த விற்பனை" என்பது எங்கள் நெடு நாளையக் கொள்கை.

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ணு மடம் ரோட், சென்னை-28.

LL N.61 162361

# கூட்டணி

பற்பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக என்று ஆடம்பரத்துடனும் சுறுசுறுப்புடனும் ஆரம்பிக்கப்பட்ட பல சங்கங்களை நம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். தொடங்கிய ஒன்றல்லது இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அந்நோக்கங்களில் எவை எவை நிறைவேறின; அல்லது அவை நிறைவேறுவதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்று ஆராயும்போது உருப்படியாக ஒன்றுமே இராது. ஆரம்ப சூரத்தனம் என்பார்களே அதுதான் மிச்சம். இதே கதி நமது கூட்டணிக்கும் நேர்ந்திருப்பதுபற்றி நாம் உண்மையில் வருந்துகிறோம்.

பிள்ளைப்பிராயத்திலுள்ள நமது ஹோமியோபதி வைத்தியத்தொழில் நல்ல முறையில் நாள்தோறும் வளர்ந்து ஹோமியோபதியர்களுக்கு மதிப்பும் மரியாதையும் பேரும் புகழும் அறிவும் ஆற்றலும் பெருகவேண்டுமென்றால் அரசாங்கத்தை எதிர்பாராமல் எவ்வளவோ உபயோகமான நடவடிக்கைகள் நாமே எடுக்கலாமென்று எண்ணினோம். உதாரணமாக தொழில்புரியும் ஹோமியோபதியர்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒன்றுகூடி தொழில்புரி விதிகள் வகுக்க வேண்டும்; வைத்திய நுணுக்கங்களை விவாதிக்கவேண்டும்; ஒவ்வொரு சங்கத்திலும் ஹோமியோபதி நூலகம் அமைக்கப்பட வேண்டும்; பாடத்திட்டங்களை ஏற்படுத்தவேண்டும். ஆடிட்டர்கள், அலோபதி வைத்தியர்கள் ஆகியோர் அமைத்துள்ள சங்கங்களில் அங்கத்தினர்கள் அதன் சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடந்துகொள்வதால் அவர்களுடைய மதிப்பு பெருகியிருக்கிறது. அதேபோல் ஹோமியோபதியர்களுடைய மதிப்பைக் கூட்டணி உயர வழி செய்யும் என்றெல்லாம் நினைத்தோம். இவை யாவும் இன்று வரை ஊமை கண்ட கனவுபோல்தான் இருந்து வருகின்றன.

மேலுள்ள நம் நோக்கங்கள் குறைவற நிறைவேறவேண்டுமானுல், சங்கங்களில் ஹோமியோபதி வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு மட்டுமே இடம் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் கருத்து வேறுபாட்டுக்கு இடம் கொடுக்

காமல் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இவ்வாறு உழைக்கும் சங்கங்களை உறுப்புக்களாய் ஏற்றுக்கொண்டு அவைகளின் நடவடிக்கைகளை இணைத்துத் தக்க யோசனைகளைக் கூறிச் செயல் புரிவதே கூட்டணியின் முக்கிய தொண்டாக இருக்க வேண்டும். தம்முடைய சொந்த நலன்களைப் பெருக்கும் ஓர் ஏணியாகக் கூட்டணியைப் பயன்படுத்தக்கூடாது. தமிழ் நாட்டில் ஹோமியோபதி வைத்தியத்துறையில் உள்ள முக்கிய தலைவர்கள் தங்களிடம் பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வையே பெரிதாய் எண்ணி ஒரு மனத்துடன் அடிக்கடி சந்தித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிச் செய்துவந்தால் இன்று நம்மிடையே உள்ள பல ஊழல்கள், குற்றங்குறைகள், சண்டைப் பூசல்கள் ஆகிய யாவும் பஞ்சாய்ப்பறக்கும்.

சுயநலம் பேணுவோரும் தொழில்முறை ஒழுக்கத்தின் அவசியத்தை உணராதவர்களும் தொழிலில் முன்னேற்றமடைய ஏற்ற வழி தெரியாதவர்களும் ஒன்றுசேர்ந்து கூட்டணியைப் படுகுழியில் ஆழ்த்தி விட்டுள்ளனர். தொழில் முன்னேற்றத்துக்காக அமைக்கப்பட்ட ஒரு சங்கத்தில் அரசியல் கட்சிகள் கையாண்டுவரும் முறைகளைப் பின்பற்றிப் பலம் தேடுவோருக்கு இடம் கொடுத்தால் அச்சங்கம் எப்படிக் கெட்டுப்போகும் என்பதற்கு நமது கூட்டணியை விடச் சிறந்த உதாரணம் தேவை இல்லை.

பணத்தைப்பற்றி கூறுமிடத்து, ஸ்ரீ பாபுராவ் படேல் அவர்கள் சென்னை முதல் மகாநாட்டில் பேசியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். குறைந்தது 5,000 ரூபாயாவது மூலதனமாக கையிருப்பு இல்லாவிடில் நம் தொழில் முன்னேறுவது கடினம் என்று அபிப்பிராயப்பட்டார். அப்படிப்பட்ட அனுபவஸ்தர்கள் சொல்வதை நாம் விலை வைத்ததாகத் தெரியவில்லை. கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் மாதக்கட்டணங்களில் நாம் செய்யக் கூடியது மனஸ்தாபங்களை வளர்ப்பதுதான். கூட்டுறவு முறையில் நன்மைகள் செய்ய இக்கட்டணங்கள் போதாதே. இதைப்பற்றி நாம் நன்கு ஆலோசிக்கவேண்டியது நம் கடமை.

சென்ற 1960 நவம்பர் மாதம் கோவையில் கூடியபோது கூட்டணி காரியக்குழு பாடத்திட்டங்களை வகுப்பதற்காக



ஒரு உபகுழுவை அமைத்ததே. அந்த உப குழு இனியும் கூடக்கூடிய சூழ்நிலை இதுவரை உண்டாகாதது நமது துர்ப்பாக்கியமே. சென்னை சர்க்கார் நகல் மசோதா தயாராகு முன் நம் தலைவர்கள் நம் அபிப்பிராயங்களை எடுத்துக்கூற சுகாதார மந்திரியையும், முதல் மந்திரியையும் பேட்டி காண்பது அவசியமல்லவா. இதை நடத்தி வைக்கக்கூடிய திறமை கூட இல்லாமல் கூட்டணி தவிப்பானேன்.

மறுபடியும் கூறுகிறோம். "இட்டுண்டுறங்கு" வதற்கும் கோபதாபங்கள் வரும்பொழுது மாத்திரம் புத்துயிர் பெற்று எழுந்து ஊக்கவேலைகள் செய்யவும் கூட்டணி வேண்டுமா?

பணம் இல்லை. மனம் இல்லை, என்று மாத்திரமல்ல. காரியதரிசி ஒரு ஊரிலும், தலைவர் வேறோரூரிலும், காரியக்குழுவினர் மற்ற இடங்களிலும் சிதறிக்கிடப்பது அவர்கள் ஒன்றுசேர்ந்து, ஆலோசித்து எந்தக் காரியத்தையும் செய்ய முடியாமல் போகிறது. முக்கிய காரியஸ்தர்கள் ஒரே ஊரிலிருந்து, அடிக்கடி சந்தித்துப்பேச முடிந்திருந்தால், இரண்டு வருடத்தில் இரண்டு மனத்தாங்கல்கள் கிளம்ப சந்தர்ப்பம் இருந்திருக்காது.

இந்தக்குறைகளையெல்லாம் கூடிய சீக்கிரத்தில் தீர்த்து வைப்பது அங்கத்தினர்கள் கடமையாகும்.


## மகிழ்ச்சி தரும் செய்தி

பெரும்பான்மையான ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகள் தற்சமயம் நமது லாபரெட்டரியிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மருந்துகளின் உற்பத்திச் செலவு குறைந்துவிட்டது. ஆதலால் 1-12-60 முதல் ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகளின் விலைகளில் கணிசமான குறைவு செய்யப்பட்டுள்ளன. புதிய விலை விவரங்களுக்கு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

**77. ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.**

# டான்ஸில்ஸ்

இரட்டையர்களாவர். சுவாசகோசத்தில் புகையும் தூசியும் புகுந்து நோய்கள் உண்டாகாதபடித் தடுத்து, தாமே நோயுறும் தியாகிகள்!

அப்படிப்பட்ட தியாகிகளை வெட்டி எறிந்தால் உடலுக்கு ஆயுள் உள்ள வரை ஊனம்தான் என்று எல்லா டாக்டர்களும் ஒத்துக்கொள்கிறார்கள்: ஆனால், டான்ஸில் வீங்கி, சீழ்பிடித்தால் அதை குணமாக்க வழி யறியாது தான் கத்தியை தேடுகிறார்கள்.

அச் சமயத்தில் ஹோமியோபதியின் பெயரை நிலை நாட்ட, எங்கள்

## ஸில்டோஸிஸ்

உபயோகித்தால் போதும்.

* * *

இந்த இனிய மருந்தினால், டான்ஸில் குணமடைந்து சுய வடிவுக்குச் சுருங்கி தன் சேவையைச் சரிவர செய்கிறது.

விலை : 50 மாத்திரைகள் கொண்ட ஒரு பாட்டில் : ரூ. 2-25.

500 ,, ,, ரூ. 18-00.

(அனுப்பும் செலவு தனி.)

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.


## பன்னிரெண்டாவது நேர்முக வகுப்பு

இவ்வாண்டு மே மாதம் நடைபெற இருக்கும் பன்னிரெண்டாவது நேர்முக வகுப்பின் முழு விவரங்கள் சென்ற மாதம் அனுப்பப்பட்டன. கிடைத்திருக்கலாம்.

மே மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வகுப்பு ஆரம்பமாகிறது. பிரவேசக் கட்டணம் ரூ. 5/- சம்பளம் ரூ. 50/- ஆக ரூ. 55/- ஏப்ரல் மாதம் 10-ம் தேதிக்குள் அனுப்பவேண்டும். இந்தத் தேதிக்கு பிறகு ரூ. 65/- அனுப்பினால் இடம் கிடைக்கலாம். ஆனால் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆகவே மேலே கண்ட தேதிக்குள் சம்பளத்தை அனுப்பிவிடுவது நல்லது.

வகுப்பு சுமார் இரண்டு வாரங்கள் நடைபெறும். தொழிலுக்குத் தேவைப் படும் விஷயங்களை மட்டும் தெளிவாய்ப் போதித்துக் குறுகிய நாட்களில் வகுப்பை பூர்த்தி செய்து மாணவர்களுக்கு அதிகச் செலவோ, சிரமமோ ஏற்படாமல் செய்வது எங்கள் நேர்முக வகுப்பு ஒன்றே. ஆகவே நீங்கள் சேர்வதோடல்லாமல் உங்கள் நண்பர்களையும் சேரத் தூண்டுங்கள்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை—28.

---


## டீலர்கள் தேவை

ஒவ்வொரு நகரத்திலும் எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகளை விற்பனை செய்ய டீலர்களை நியமித்து வருகிறோம். டீலர்களுக்குத் தாராளமான கமிஷனும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும். ஒவ்வொரு மாதமும் ரூ. 200-க்குக் குறையாமல் மருந்துகளை விற்பனை செய்யக் கூடியவர்கள் மட்டும் முழு விவரங்களுக்குக் கீழுள்ளபடி விலாசமிட்டு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பாலநிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.

# ஹோமியோபதித் துணுக்குகள்

உடம்பெல்லாம் வலி, உள்ளங்கையிலும் கால் பாதத்திலும் எரிச்சல், இக்குறிகளுள்ள சுரத்தில் யூபடோரியம் பர்போலியேட்டம் நல்ல குணம் தரும்.

—டாக்டர் பட்டாசாரி.

மூளையும் மனதும் நன்ருக வேலை செய்து, சரீரபலமும், தசை பலமும் குறைந்தவர்களுக்கு லைகபோடியம் கொடுக்கலாம்.

—டாக்டர் விட்மாண்ட்.

ஆர்ஜென்டம் நைட்ரிகம் கொடுக்கும்பொழுது தித்திப்பு தின்னலாகாது என்று சொல்வது நலம். கல்கேரியா, சைனு, கோனியம், ஸிபியா இவைகளுடன் பால் சேர்க்கலாகாது. கார்போ விஜி, பல்ஸடில்லா, பெர்ரம் முதலியவைகள் கொழுப்புள்ள பண்டங்களுடன் சேர மாட்டா. ஆர்ஸ் ஆல்ப், பிரையோனியா, சைனு, கோலோஸிந்த் - இம்மருந்துகளுடன் பழங்கள் சேர்க்கலாகாது.

—டாக்டர் வர்மா.

வேனல்கட்டிகளுக்கு பிரையோனியா கொடுத்துப் பார்த்திருக்கிறீர்களா? குழந்தைகள் வயிற்றுப் போக்குக்கு போடோபில்லம் சிறந்தது. முழங்கையில் நீர் வழியும் எக்ஸிமாவுக்கு கிராபைடிஸ், ஸல்பர் குணம் தராதிருக்க, குப்ரம் மெட்டாலிகம் பலன் அளித்தது.

—டாக்டர் பானுதேசாய்.

நோய்க்குறிகள் நோக்குமிடத்து, பொதுக் குறி எது, தனிக் குறி எது என்று நிர்ணயிப்பது கடினம். 'நான்' என்று ஆரம்பிக்கும் குறிகள் பொதுக் குறிகளாகும். 'என்னுடைய' என்று தொடங்கும் குறிகளெல்லாம் தனிக்குறிகளாகும். உதாரணமாக, 'நடக்கும்பொழுது நான் சுகமாயிருக்கிறேன்' என்றால் பொதுக்குறி தொனிக்கிறது. 'என்னுடைய தோள் பட்டை இரவில் வலிக்கிறது' என்பது தனிக்குறியாகும்.

—டாக்டர் ஏ. யூ. நடராஜன்.

வெய்யலில் வெகுதூரம் அலைந்த அலுப்பு தீர காபியாவைக் கொடுக்கவேண்டும்.

இறக்கும் தருவாயிலுள்ள நோயாளியின் வலிகளைப் போக்க டாரண்டுலா கொடுத்துப் பார்க்கலாம்.

காதிலிருந்து சீழ் கொட்டுவதற்கு டெல்லூரியம் கொடுக்கலாம்.

—தீ டார்ச்.

# பிள்ளைப் பற்கள்

குழந்தைக்குப் பல் முளைக்கத் தொடங்கும்போது பெற்றோருக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

சாதாரணமாக முதலில் கீழ் வாயில் இரு பற்கள் முளைக்கின்றன. ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களில் மேல் வாயில் நான்கு பற்கள் முளைக்கின்றன. குழந்தைக்கு ஒரு வயதாகும்போது அதற்கு ஆறு அல்லது எட்டு பற்கள் முளைத்திருக்க வேண்டும்.

குழந்தைக்குத் தக்க காலத்தில் பற்கள் முளைக்கின்றனவா என்று தெரிந்து கொள்வதற்கு எளிதான வழி ஒன்று கூறுகிறேன், ஒரு வயதானபின், குழந்தையின் வயதை மாதங்களாக மாற்றி அதிலிருந்து 6–ஐ கழித்து மீதி வரும் எண்தான் குழந்தைக்கு முளைத்திருக்க வேண்டிய பற்களின் எண்ணிக்கையாகும். உதாரணமாக குழந்தைக்கு 19 மாதங்களானால், அதற்கு 13 பற்கள் முளைத்திருக்க வேண்டும்.

பல் முளைக்கும்போது குழந்தைக்கு வலி ஏற்படலாமென்று சில தாயார்கள் நினைக்கிறார்கள். இது சரியல்ல. இருமல், சளி அல்லது காய்ச்சல் ஏற்பட்டால், பல் முளைப்பதால் அவை ஏற்படுவதாக எண்ண வேண்டாம். இரண்டுக்கும் சம்பந்தமில்லை. குழந்தையை டாக்டரிடம் காட்டி இந்தக் கோளாறு ஏற்படக் காரணம் என்ன என்பதுபற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

முதலில் முளைக்கும் பற்கள் யாவும் குழந்தைக்கு 6 வயதானதும் ஒவ்வொன்ருக விழத் தொடங்குகின்றன. 12-வது வயதுக்குள் இந்த முதல் பற்கள் யாவும் விழுந்து விடுகின்றன. பிள்ளைப் பற்கள் விழ விழ அவைகளுக்குப் பதிலாக நிலையான பற்கள் முளைக்கின்றன. 14 வயதானதும் மேல் வாயில் 14 பற்களும் கீழ் வாயில் 14 பற்களும் முளைத்திருக்க வேண்டும்.

பிள்ளைப் பற்கள் விழுந்துவிடும் தற்காலிக பற்கள் என்பதால் அவற்றைக் கவனமுடன் பாதுகாக்க வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல.

13 வயதான சிறுவன் சாஷா எங்கள் நோய்ச் சோதனை சாலைக்கு வந்தான். பற்கள் சரிவர முளைக்கவில்லை என்றும் அடிக்கடி வலி எடுப்பதாகவும் கூறினான்.

சோதனை செய்து பார்த்தபோது பிள்ளைப் பற்கள் காலத்துக்கு முன்னதாகவே பிடுங்கப்பட்டு விட்டன என்பது தெரிந்தது. இதுபற்றி நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. திரும்பவும் சிறுவனுக்குப் பல் முளைப்பதற்கு அதிக கால மாகியதால் அவனுக்குப் பல தொல்லைகளும் ஏற்படலாயின. பல நாட்கள் நாங்கள் அவனுக்கு சிகிச்சை செய்யும்படி ஆயிற்று. பிள்ளைப் பற்களை அவன் சரிவர கவனித்திருந்தால், அடிக்கடி அவன் பல் டாக்டரிடம் பற்களைக் காட்டி சிகிச்சை பெற்றிருந்தால் இந்தத் தொல்லைகள் ஏற்பட்டிருக்காது.

சிறுபிள்ளைகள் அடிக்கடி ஏதாவது சாப்பிடுவதால் வாயில் எச்சில் அதிகமாக ஊறிக்கொண்டிருக்கிறது. ஆகவே ஆரம்பத்தில் பற்களைப்பற்றி அதிக கவலைப்பட வேண்டிய தில்லை. குழந்தைக்கு ஐந்து அல்லது ஆறு வயதானதும் பல் துலக்குவதற்காக அதற்கு மிருதுவான சிறிய பிரஷ் ஒன்று கொடுத்து அதனால் பல் துலக்குவதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும் கீழுமாக பிரஷைத் தேய்த்து பல் துலக்குவதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். ஏழாவது வயது வரை பற்பசை அல்லது பற்பொடி வேண்டியதில்லை.

எப்பொழுது பல் துலக்க வேண்டும், காலையிலா, மாலையிலா, என்று சிலர் கேட்கிறார்கள். காலையில் துலக்குவது தான் சிறந்தது. இரவில் பற்கள்மீது ஒருவகைப் படலம் படர்ந்து விடுகிறது. இதைக் காலையில் எழுந்ததும் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்தாக வேண்டும். சாப்பாட்டிற்குப் பிறகு குழந்தைக்கு ஆப்பிள் அல்லது காரட் கொடுப்பது நல்லது. பற்களையும் வாயையும் சுத்தம் செய்வதற்கு இது மிகவும் சிறந்த வழியாகும்.

பிள்ளைப் பற்களில் சொத்தை ஏற்படுவதற்கான முதல் அறிகுறிகள் என்ன? முதலில் கறை தென்படுகிறது. இது கருப்பாகவும் இருக்கலாம்; சுண்ணாம்பு தடவியது மாதிரியும்



இருக்கலாம். பிறகு எனமல் தேய்ந்து மறையத் தொடங்குகிறது. சிகிச்சை செய்தாலொழிய பல்லில் குழி விழுந்து விடும். சூடான அல்லது குளிரான உணவு அப் பல்லில் பட்டதும் வலிக்கும். பிறகு சொத்தை பல்லில் உட்பகுதிக்குப் பரவிவிடும். உடனே அதிலுள்ள இரத்தக் குழாய்களிலும் நரம்புகளிலும் வீக்கம் ஏற்பட்டு முக்கியமாக இரவு நேரத்தில் மிகுந்த வலி உண்டாகும். மருந்தினால் இந்த வலி நின்று விட்டாலுங்கூட, நீங்கள் இனி கவலை இல்லை என்று சும்மா யிருந்துவிடக் கூடாது. டாக்டரிடம் காட்டி சிகிச்சை செய்வது அவசியமாகும். இல்லையேல் பல் முழுதும் கெட்டுப் போய் அதைப் பிடுங்கி எடுக்கும்படி ஆகிவிடும். சிறுவன் சாஷாவுக்கு இந்த நிலைமைதான் ஏற்பட்டது.

சொத்தைப் பற்களால் பல் கெடுவதுடன் கூட, வாயில் பல கிருமிகளும் தோன்றி தொண்டைச் சதை, புண் (டான்சிலிடிஸ்) முதலியவற்றைத் தோற்றுவிக்கலாம். பல் சுத்தமாகப் பாதுகாக்கப்படுவது குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு முக்கியமானதாகும்.

—'சோவியத் நாடு'.


## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகள்,
* ஸினரேரியா மாரிடிமா கண் துளி,
* அல்பால்பா டானிக்,
* டயகார்டு இருதய டானிக் ஆகியவைகள்

எங்களிடம் கிடைக்கும் :

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலயம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.**

# 'ஹோமியோபதித் தந்தை'

## மகளுக்கு எழுதிய கடிதங்கள்—V

M. N. R.

நோயாளியைப் பரிசோதிக்கும் விஷயத்தில், நீ கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகங்களில் உள்ள விஷயங்களைத் திருப்பிச் சொல்வது என் நோக்கம் அல்ல. அப்புத்தகங்களை இதுவரை படிக்காவிட்டால் அப்படிச் செய்யவேண்டியது உன் கடமை. சந்தேகமில்லாமல், அப்படிப்பட்ட புத்தகங்களில் முதன்மையானதும், நம் வேதபுத்தகம் போலுள்ளதும், டாக்டர் ஹானிமனால் எழுதப்பட்டதுமான 'ஆர்கனான்' என்ற ஹோமியோபதி வைத்தியமுறை புத்தகமாகும். இது முதலில் ஜெர்மன் பாஷையிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பண்டைகாலப் புத்தகங்களைப்போல் இதுவும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத கரடு முரடான நடையில் எழுதப்பட்டுள்ளது. அந்த ஆங்கிலத்திலிருந்து ஒன்றிரண்டு பேர்கள் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்றாலும் அப்புத்தகங்களையும் வாசித்து அறிவது கடினமான கார்யமாய்த்தான் இருக்கிறது.

ஆனால், கூடிய சீக்கிரத்தில் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்களால் இயற்றப்பட்ட 'ஹோமியோபதித் தத்துவங்கள்' வெளிவருகிறது. மொழிபெயர்ப்பு என்பதை வாசகர்கள் உணரா வண்ணம் எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய நடையில் 'ஆர்கனானி'ல் உள்ள ஹோமியோபதி வைத்திய தத்துவங்களை எழுதியுள்ளார்; இது வெளிவந்தவுடன் நான் உனக்கு அனுப்புகிறேன். அதில் பக்கங்கள் 60-73க்குள் நோயாளியைப் பரிசோதிக்கும் முறையைப் பற்றி விரிவாக டாக்டர் ஹானிமன் எழுதியுள்ளார்.

நோயாளி வந்து உட்கார்ந்து சற்று அமைதி அடைந்தவுடன் நோயாளியைப்பற்றி அவர் இஷ்டம் போலவே பேசவிட்டு, அவர் கூறுவதைக் குறித்துக்கொள்ளவும். நடுவில் கேள்விகள் கேட்கலாகாது. அவருடைய பெயர், விலாசம், முதலியவைகளைக் கூட பின்னர் எழுதிக்கொள்ளலாம். தன் குறைகளை அவர் சொல்லி முடித்தபிறகு, அதற்குமேல் நம்



முறைப்படி நாம் அறியவேண்டிய விவரங்களுக்குக் கேள்விகள் கேட்டு பதிலை குறித்துக்கொள்ளவும். நமக்கு உபயோகப்படக்கூடிய பதில்கள் கிடைக்கவேண்டுமென்றால், நோயாளி—டாக்டர் முறையை நோயாளி மறந்து, தன் சிநேகிதருடன் பேசுவதுபோல், நம்மிடம் பேசும் வண்ணம் நாம் நடந்துகொள்ளவேண்டும். உண்டு—இல்லை என்று பதில் வரக்கூடிய ரீதியில் கேள்விகள் கேட்கலாகாது.

நோயாளியைப்பற்றி மேலும் நாம் உணரவேண்டியது பல இருக்கின்றன: உதாரணமாக, அவருக்கு மருந்து கொடுத்து குணமாக்கக்கூடிய நோய் உள்ளதா, அல்லது அவருடைய நடை, உடை, ஊண், உரக்கம் முதலிய காரணங்களை மாற்றிக்கொண்டால் போதுமா என்று அறியவேண்டும். இதற்கு நம்முறையில் வெளிக்காரணங்கள் என்று கூறுகிறோம். இதைப்பற்றி சற்று ஆலோசிக்கலாம்.

இரண்டு நாட்களாக ஒரு குழந்தை வீறிட்டுக் கத்த காரணம் தெரியாத தாயார் ஒரு டாக்டரைப் பார்க்க, அவர் மலச்சிக்கலென்றும், வாயு என்றும் இரண்டு நாட்களுக்கு மருந்து கொடுத்தும், அழுகை நிற்காததால், இரவாவது குழந்தை உறங்கட்டும் என்று கடுகளவு ஓபியம் கொடுத்து குழந்தையைத் தூங்கவைத்தார். இதற்குள் நான்கு, ஐந்து நாட்களாகவே, குழந்தையும் அழுகையை மறந்துவிட்டது. சில நாட்களுக்குப் பிறகு தாயார் குழந்தைக்கு எண்ணை தேய்க்கும்பொழுது, காதில் எண்ணை ஊற்ற, குழந்தையின் தலையை ஒரு பக்கமாக சரித்தாள். 'இது என்ன இது' என்று மெதுவாக சாமணத்தால் பிடித்திழுக்க காதுக்குரும்பையுடன் ஒரு செத்த எரும்பும் வெளிவந்தது. குழந்தை அன்று கத்தியதின் காரணம் இப்பொழுது தான் வெளிவந்தது!

இதேபோல அழுது கொண்டிருந்த வேறொரு குழந்தையைப் பரிசோதித்த டாக்டர், அக்குழந்தையின் வயிற்று மடிப்பிலிருந்து ஒரு குண்டூசியை எடுத்தார்!

தீராத இருமல், கபம் என்று குளிர்-பனி காலத்தில் வரும் நோயாளிகளில் பலபேர், சிவபெருமான் தலையில் ஜடையும், கங்கையும் சுமப்பதுபோல், மிகவும் குளிர்ச்சி தரும் பெரில்க்ரீம் (Berylcream), அரைக்கீரை தைலம்,

நெல்லிக்காய் (அம்லா) தைலம், பிரம்மி தைலம், எலுமிச்சம் பழம் முதலியவைகளைத் தேய்த்துக்கொண்டு, தலையில் மயிர் படிய தண்ணீரையும் தெளித்துக் கொண்டிருப்பார்கள். இப்பழக்கத்தை விட்டாலொழிய மருந்துகள் கொடுப்பதால் என்ன பயன் ?

நிமோனியா சுரத்தால் பல நாட்களாக அவதிப்படும் ஒரு பணக்கார ஜமீன்தாருக்கு சிகிச்சை செய்யும் ஒரு டாக்டர் எத்தனையோ மருந்துகள் கொடுத்தும் சுரம் இறங்காததால், சந்தேகப்பட்டு, ஒருவருக்கும் தெரியாமல் இரவு விளக்குகளை அணைத்துவிட்டு நோயாளியின் அறையில் ஒளிந்து கொண்டிருந்தார். இரவு இரண்டு மணிக்குமேல் திருட்டுத்தனமாக ஒருவர் அறையில் நுழைந்து, நோயாளியின் தலைப் பக்கமுள்ள ஜன்னலைத் திறந்துவைத்து அருகிலேயே நின்று கொண்டிருந்தார். இளங் குளிர் காற்று உறங்கும் நோயாளியின் மார்பில் அடித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் கழிந்தபிறகு, ஜன்னலை மெதுவாகச் சாத்தப் போகும் பொழுது, டாக்டர் அவரைப் பிடித்துக்கொண்டு விளக்கை ஏற்ற, நோயாளியின் சொந்தக்காரப் பெண்மணி காட்சியளித்தாள்! அவளை வீட்டிலிருந்து அனுப்பியபிறகு தான் நோயாளி குணமடைந்தார்.

---


## மேல் பூச்சு மருந்துகள்

**நோஸின் ஆயிண்ட்மெண்ட்**
கரப்பான், படை முதலியவைகளுக்கு.

**மார்கேட் களிம்பு**
எல்லாவகை புண்களுக்கும்.

**ஹாடில் களிம்பு**
மூல நோய்களுக்கு.

இன்னும் அநேக களிம்புகளும், வெளிப் பூச்சு திரவங்களும் எங்களிடம் கிடைக்கும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்.**
"பால நிலையம்!"
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**
**மதருஸ்-28**


# மருத்துவத்தில் தேன்

Dr. K. M. A, வஹாப்.

தேனைப் பற்றி எழுத முயன்ற நான், 'தேனும் நாமும்' என்று இரண்டொரு வார்த்தை எழுதலாம் என்று எண்ணுகிறேன். இல்லாவிட்டால், நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன், சுதேச வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளுவதில் அருத்தமே இல்லை தான்! அப்படி என்ன என்று கேட்கிறீர்களா ?

இதோ! தேனைப் பற்றி தற்போது நான் எழுதத் துணிந்தது தேன் பிற நாட்டில் பிற மருத்துவரால் எங்ஙனம் கையாளப் படுகிறது - பயன் படுத்தப்படுகிறது - ஆராய்ச்சிக்குட்பட்டுள்ளது என்பது பற்றிதான். ஆனல் பிற வைத்திய முறையார் ஏன், வெளிப்படையாக சொல்லவேண்டுமானல், நவீன மருத்துவ விஞ்ஞானிகள் எனப் படுவோர் தேனின் குணம் அறியு முன்னரே, நம் தேச - சுதேச முறை வைத்தியர்கள் அதன் பலன் பற்றி நன்கே அறிந்திருந்தார்கள். இன்றும்கூட, சுதேச வைத்தியர்கள் தேனைக் கையாளாமலில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிற நாட்டினர் மேலும் மேலும் ஆராய்ந்து தேனின் குணம் கூறும் இந்நாளில், நம் நாட்டில் பிரிட்டிஷார் ஆட்சி ஏற்படாதிருந்தால், இன்றைக்கு மட்டுமல்ல நாளைக்கும் கூட நம் நாட்டினரே மேலும் மேலும் ஆராய்ச்சிக்குறிய வழிகாட்டிகளாகவே இருப்பர் என்பது என்னவோ நிச்சயம் எனக் கூற விரும்புகிறேன்.

இதற்குமேல் நான் எழுதத் துவங்கியமைக்கு வருகிறேன். இன்று உலகிலே தேனைப் பற்றி ஆராய்ச்சிகள் ரஷ்யாவிலேதான் அதிக மிருப்பதாய் தெரிகிறது. ரஷ்யத் தேன் தான் சிறந்தது என்றும் அறியப்படுகிறது. ரஷ்யாவில் ஒரு சில கலர்களில் கூட - பச்சை, சிகப்பு, ஊதா போன்ற நிறங்களில் கூட தேன் கிடைப்பதாய் ஒரு பத்திரிகையில் படித்ததாய் நினைவிருக்கிறது. ஒவ்வொரு நிறமுள்ள தேனுக்கும் ஒவ்வொரு குணம் இருக்கிறதாம். அந்நாட்டில் வெறும் தேனைக்கொண்டே மருத்துவம் செய்யப்படுகிறதாம்.

அந்நாட்டில் விஞ்ஞானி **டாக்டர் ஐயோரிஷ்** என்பவர் தேனைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றியும் கண்டிருக்கிறார்.

1. மனிதனின் விருப்பப்படி வெவ்வெறு வகையான தேன்களைத் தயாரிக்கும்படி தேனீக்களைப் பணிக்க முடியுமா ?
2. ஒரு குறிப்பிட்ட அளவு மருந்துப் பொருள்களும் விட்டமின்களும் சேர்ந்த கலவையாக தேன் அமைய முடியமா ?

இந்த இரண்டுவித கேள்விக்குறிகளை தன் மூளையிலே பொருத்திக்கொண்டு, ஆராய்ச்சிகள் நடத்தினார் அந்த விஞ்ஞானி. இந்த ஆராய்ச்சியின் விளைவாக பலதரப்பட்ட விட்டமின்களை உடைய மருந்து வகைத் தேனை உற்பத்தி செய்யும் எளிய முறையை அவர் கண்டுபிடித்தார். இந்த முறைப்படி பல ஆண்டுகள் உழைத்து, 'ஏ', 'பி', 'சி', விட்டமின்களையும், **'அடோபோனே'**, **'தைரோடுன்'** ஆகிய மருந்துப் பொருள்களையும் உடைய 83 புதிய தேன் வகைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேன் கூட்டில், முட்டை, பால், பழ வகைகள், காய்கறிகள், பல்வேறு மருந்துப் பொருள்களைக் கொண்ட இனிப்பான கலவையை வைப்பதன் மூலம் மேற்படிப் புதிய தேன் வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

## தேன் ஒரு பரிசுத்த உணவு

'தேனைத் தொட்டவன் விரலை நக்காமல் விடுவானா ?' என்று சொல்லுவர். தேனை அப்படி ருசிக்கும் நபர்களிலே கூட, தேன் கூட்டின் அமைப்புக் கண்டு அருசைப் படுவோரும் உண்டு. அவர்களுக்காகவே இதை எழுதப் புகுகிறேன்.

தேனீக்கள் தங்கள் கூட்டை எப்பொழுதும் தூய்மையாகவும் காற்றோட்டமாகவும் வைத்துக் கொள்கின்றன. கூட்டின் வாயிலில் சில தொழிலாளி ஈக்கள் மிகவும் வேகமாகச் சிறகை அடித்து அடித்து காற்று விசிறிக் கொண்டே இருக்கும். இது கூட்டுக்குள் புதிய காற்று வருமாறு செய்வதும் அன்றி, தேன் சரியான வெப்ப நிலையில் இருக்குமாறும் செய்கிறது. வேறு சில ஈக்கள் கூட்டினுள் இறந்துபோகும்



ஈ முதலிய கழிவுகளை உடனுக்குடன் வெளியே இழுத்துக் கொண்டு வந்து தள்ளிவிடும். கூட்டின் உள்ளறைகள் அமைந்திருக்கும் முறையும் பேராச்சரியம் தான்! ஒரு கிருமியும் உள்ளே நுழைய முடியாது ! தேன் தூய்மையான உணவு தானே !

## தேனின் பயன்

தேனின் பெரும்பான்மைச் சத்து ஒருவித சர்க்கரை. இச்சர்க்கரை உண்ட சிறிது நேரத்தில் சக்தி தரக்கூடியது. இது ஏன் தெரியுமா ? அது ஏற்கனவே, தேனீக்களால் ஜீரணம் செய்யப்பட்டிருக்கிறது. இத்துடன் தேனில் **இரும்பும், செம்பும் வைடமின் 'சி'-ம்**, வைட்டமின் **பி–2-ம், நிக்கோடினிக் ஆஸிட்டும்** சொற்ப அளவில் இருக்கின்றன. சாதாரண இனிப்புப் பண்டங்களை அளவுகடந்து உண்பதால் உடல் மிஞ்சிப் பருக்கும்; முகப்பரு உண்டாகும்; உடல் நிறம் கெடும். ஆனால் தேனைத் தாராளமாய் சாப்பிடலாம். தேனில் **'பார்மிக் ஆஸிட்'** டும் இருப்பதால் ஒருசிலர் உடலுக்கு ஒத்துக்கொள்ளாது. அவர்கள் இதை மட்டாக உபயோகிக்க வேண்டும். தேன் உடனே செரிக்கும்; விரைவில் களை நீக்கும்; மலத்தை இளக்கும்.

## தீராத நோய்கள் தீர்ந்தன !

குடல் அழலை, காச நோய், நெஞ்சு அரிப்பு, வயிற்று வலி, வாய்க்குமட்டல் முதலான நோய்களுக்கு மட்டுமல்ல; புரையோடிப்போன புண்களையும், தீக்கொப்புளங்களையும் தேனினால் குணப்படுத்தலாம் என்பது அறியக்கிடக்கிறது. முன்பு, தேன் எவ்வாறு மனிதனின் உடல் உறுப்புகளை பாதிக்கிறது என்பது பரிபூரணமானதோர் ஆராய்ச்சியை மேற்கொண்ட சோவியத் விஞ்ஞானிகள், தேனைக்கொண்டு பல்வேறு வியாதிகளையும் குணப்படுத்துவதில் அற்புத சாதனைகளை இந்நாளில் கண்டனர்.

பேராசிரியர் **உடின் சேயின்** தலைமையில் இயங்கும் மருத்துவமனையில் சுவாசகோசக் காச நோயால் வாடிய வியாதிஸ்தர்களுக்கு 'தேன் வைத்தியம்' அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நோயாளிக்கும் நாள் ஒன்றிற்கு 100 முதல் 150 கிராம் தேன் வீதம் ஒரு மாதத்திற்கு அளிக்கப்பட்டது.

இதன் விளைவாக அந்நோயாளிகளின் எடை அதிகரித்தது; இருமல் குறைந்தது; பொதுவான உடல்நிலை மிகவும் முன்னேறியது. இவையன்றி, அவர்களின் இரத்த சேர்க்கையிலும் பெரும் அபிவிருத்தி காணப்பட்டது. தேனானது இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் பிராணவாயு அளவைப் பெரிதும் உயர்த்துகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேபோல், குடல் அழலைகளைக் குணப்படுத்துவதற்கும் தேன் உபயோகிக்கப்பட்டு நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. குடல் அழலைகளுக்குரிய அபரிமித அமிலங்களைத் தேனானது குறைத்துவிடுகிறது. மாஸ்கோவில் "உணவே சிறந்த மருந்து மருத்துவ மனை"யில் குடல் அழலையால் அவதியுறும் நோயாளிகளுக்கு நாள் ஒன்றுக்கு 600 கிராம் தேன் அளிக்கப்பட்டது. இதனால், நோயாளிகளின் வயிற்று வலியும், நெஞ்சு அரிப்பும், வாய்க்குமட்டலும் மறைந்தன. தேனில் பல வகைகள் உண்டு. எந்த தாவரங்களிலிருந்து எடுக்கப்பட்டவை என்பதைப்பொருத்து தேன்வகைகள் மாறுபடுகின்றன.

காயங்கள் மீதும்; புண்கள் மீதும் தேனை வைத்துக் கட்டினால் அவை துரிதமாக ஆறி விடுகின்றன. 1923-ல் எகிப்திய நாட்டில் ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள், 3300 ஆண்டுகளுக்கு முன் அங்கு வைக்கப்பட்டிருந்த தேன் சட்டியைக் கண்டெடுத்தனர். இதற்குக் காரணம் தேனில் அடங்கியுள்ள அற்புத பாக்டீரியாக்களின் தன்மையேயாகும். புரையோடிப் போன காயங்களையும், திக்கொப்புளங்களையும் தேன் மூலம் குணப்படுத்தலாம் என்று நிலை நாட்டப்பட்டுள்ளது.

### தேனின் பெருமை

புரான இதிகாசங்கள் கூட தேனைப்பற்றி பெரிதும் புகழ்ந்துள்ளன. பண்டைய எகிப்து நாட்டு மக்கள், 'ஆண்டவன் உண்ணும் அமுதம், தேனிலிருந்து தயாரானது' என்று கருதினர்.

போர்க்களங்களில் படுகாயமுற்று ரொமியக் கதைகளில் வரும் கதாநாயகர்களுக்குப் 'பல நூற்றுண்டுகளாகத் தேக்கி வைக்கப்பட்ட' தேன் அளிக்கப்பட்டு, அவர்கள் எவ்வாறு



பூரண குணம் அடைந்தனர் என்பதுபற்றி ரஷ்ய இலக்கியங்களிலே படிக்க நேரிடுகிறது. பழைய காலத்தில் பாலஸ்தீனத்தைப் புகழ்ந்த வரலாற்றினர், 'பாலும் தேனும் ஓடும் நாடு' என்று புகழுவார்களாம்.

பண்டைய காலத்தில் 'மருத்துவத்தின் தந்தை' என்று போற்றப்பட்ட மாபெரும் மருத்துவர் ஹிப்போக்ரேடஸ் என்பவர் 107 ஆண்டுகள் வாழ்ந்தாராம். அவர் எப்பொழுதும் தேனையே உணவாக அருந்தினர் என்றும், பல வியாதிகளையும் தேன் மூலம் குணப்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது.

திரு நபி முஹம்மது (ஸல்) அவர்களும் தேனைப் பிரியமாக அருந்தி வந்தார்கள் என்ற உண்மையும் கவனிக்கத்தக்கது.

### கெடாத பொருள்

எந்த உணவுப்பண்டத்தையும் சேமித்து வைத்தால், அது எப்பொழுதாவது கெட்டுப்போய் விடத்தான் செய்யும். ஆனால் ஒரே ஒரு உணவுப்பொருளை மட்டும் ஓராயிரம் ஆண்டுகளுக்குமேலும் கெடாமல் வைத்திருக்க முடியும்! அப்பொருள் எப்பொருள்? அதுதான் தேன்! ஏன்? அதில் 'பார்மிக் ஆஸிட்' எனும் அமிலப் பொருள் இருப்பதாய் முன்பே எழுதினேன் அல்லவா? இந்த அமிலப்பொருள் இருக்கும் காரணத்தாலேதான் அது சீக்கிரத்தில் கெடாது; அதில் கிருமிகள் வளர முடியாது!

### தேன் உண்ணுங்கள்

இக்கட்டுரையினின்றும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சர்வரோக நிவாரணியாக மக்களால் கருதப்பட்டு வந்த மாமருந்து தேன் என்பது புரிந்துவிட்டதல்லவா. எனவே, தேன் உண்ணுங்கள்; உங்கள் குழந்தைகளுக்கும் கொடுங்கள். முக்கியமாக மெலிந்தவர்களுக்கும், வலுவற்றவர்களுக்கும் நோய் தேறுவோர்களுக்கும் தேன் ஒரு சிறந்த டானிக் என்று கூற விரும்புகிறேன்.

நமது

"ஹோமிஞ்சக்ஷன்"

## ஹோமியோபதி டாக்டருக்கு உகந்த நேசன்

நமது லாபரெட்டரியில் நவீன இயந்திரங்களைக் கொண்டு சாஸ்திரீயமான முறையில் எல்லா ஹோமியோபதி மருந்துகளும் இஞ்சக்ஷன் ட்யூபுகளாகத் தயாரிக்கப்படுகின்றன. நமது கவர்னிங் டைரக்டர், டாக்டர் வி. எஸ். ஸுப்ரமணியம் அவர்களின் சொந்த மேற்பார்வையில் தக்க அனுபவமுள்ளவர்களைக்கொண்டு டியூபுகள் தயாரிக்கப்படுவதால் ஒவ்வொரு டியூபிலுள்ள மருந்தின் சுத்தத்திற்கும் உத்திரவாதம் அளிக்கமுடியும். டியூபை உடைத்து அப்படியே ஸிரிஞ்சில் எடுத்து இஞ்சக்ஷன் செய்யவேண்டியதுதான்.

விபரங்களுக்கு எங்கள் "இஞ்சக்ஷனும் ஹோமியோபதியும்" என்ற புத்தகத்துக்கு எழுதுங்கள்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

" பால நிலையம் "

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**

**மதருஸ்-28.**

தென் சென்னை

# பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்களின் சங்கம்.

(நமது நிருபர்)

சென்னை—22.

இன்று தி ஹோமியோபதி ஹௌஸ் ஸ்தாபனத்தின் அலுவலகத்தில் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து ஹோமியோபதியர்கள் ஒன்று கூடி "தென் சென்னை ஹோமியோபதி டாக்டர்களின் சங்கத்தை" நிறுவினார்கள்.

முதலில் ஹோமியோபதி ஹௌஸ், கவர்னிங் டைரக்டர், டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் எல்லோரையும் வரவேற்று பேசுகையில், சென்னையில் ஹோமியோபதிக்காகவும், ஹோமியோபதியர்களுக்கு நன்மை செய்யவும் உண்மையில் பாடுபடும் சங்கங்கள் இல்லை என்றும், இதை நினைவில் வைத்துக் கொண்டுதான் இச்சங்கம் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டது என்றும், ஹோமியோபதியர்களின் ஒத்துழைப்பு மிக முக்கியமென்றும் சொன்னார். மேலும் பேசுகையில், தனி ஒரு ஹோமியோபதி டாக்டர், சர்க்காருடன், ஹோமியோபதி சம்பந்தமாக இருக்கவேண்டிய சட்டதிட்டங்கள் தற்காலம் தொழில்புரியும் ஹோமியோபதி டாக்டர்களுக்கு அனுகூலமாக இருக்கவேண்டும் என்று வாதாடினால் நடைபெறாது. அதற்கு வலுவான ஒரு சங்கம் தேவை என்று குறிப்பிட்டு சென்னை மாநில கூட்டணி ஏற்படுத்தப்பட்டதை விரிவாகப்பேசி அதில் இச்சங்கத்தை இணைக்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினர்.

பிறகு சங்கத்தின் சட்ட திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கீழ்க்கண்ட ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் 1961-62 வருடத்திற்கு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் : டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்.
உபதலைவர் : டாக்டர் வி. எஸ். ஸ்ரீனிவாசன்
காரியதரிசி : டாக்டர் ஆர். ஈ. தாஸன்

கமிட்டி அங்கத்தினர்கள்: டாக்டர் எம். என். ராஜன்
டாக்டர் டி. ஆர். வி. ராமன்
டாக்டர் ராஜரத்தினம் பிள்ளை
டாக்டர் வி எஸ். பாலசுப்ரமணியம்
டாக்டர் பி. எஸ். ராமஸ்வாமி
டாக்டர் ஈ. தளசயனன்

பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. மற்றுமுள்ள எல்லா இராச்சியங்களைக் காட்டிலும் சென்னை இராச்சியத்தில் தபால் பாடம் மூலம் ஹோமியோபதி படித்து பல ஆண்டுகளாக வெற்றியுடன் வைத்தியம் செய்யும் ஹோமியோபதியர்கள் இருபதினாயிரத்திற்கு மேல் இருப்பதாலும், அவர்கள் மற்ற டாக்டர்களே இல்லாத கிராமங்களில் பொது ஜன வைத்திய சேவை திறம்படச் செய்து வருவதாலும் ஹோமியோபதி நன்மை செய்யுமே தவிர கெடுதல் செய்யாததாலும், சென்னை சர்க்கார் கொண்டு வரவிருக்கும் மசோதாவில், அம்மசோதா அமுலுக்கு வரும் நாளன்று தொழில் புரியும் ஹோமியோபதியரெல்லோரையும் பதிவு செய்ய வேண்டும்.

2. இனிமேலாக தொழில் புரிய விரும்புவோருக்கு, சர்க்கார் பாட திட்டங்களை ஏற்படுத்தி, வருடத்திற்கு இரு முறைகள் தேர்வு நடத்தி, தேர்ச்சி பெற்றவர்களுக்கு பதிவு கொடுக்கலாம். அப்படி பதிவு கொடுக்கு முன் ஆறுமாதகாலமாவது தொழில் புரியும் ஒரு ஹோமியோபதி டாக்டரிடம் பயிற்சி பெற வேண்டுமென்று நிச்சயிக்கலாம். முழு நேர தொழில் புரிபவர்களுக்கல்லாது மற்றவர்களுக்கு பதிவு கொடுப்பது நல்லதல்ல.

3. கேரள, ஆந்திரா,பம்பாய், பீஹார் முதலிய இராச்சியங்களில் ஹோமியோபதி கல்லூரிகளும், ஆஸ்பத்திரிகளும் இருப்பது போல, சென்னை இராச்சியத்திலும் தொடங்க வேண்டிய நடவடிக்கைகள் சென்னை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. கேரளாவில் அநேகம் ஹோமியோபதி டிஸ்பென்ஸரிகள் தொடங்கியுள்ளது போல் சென்னை இராச்சியத்திலும் தொடங்குவது மிக அவசியம்.

தேனீர் விருந்திற்குப் பின் கூட்டம் இனிது முடிவடைந்தது.

# கேள்வியும் பதிலும்

**கேள்வி:** குழந்தைகள் பிறந்தது முதல் சுமார் 6 வருடம் வரை நோய்நொடி வராமல் ஆரோக்கியமாயும், உடல் வளர்ச்சியோடுமிருக்க, தினசரியோ, அல்லது வாரம் ஒரு முறையோ உபயோகப்படுத்தும் மருந்துகள் உண்டா? அவை எவை?

**பதில்:** எங்களது சொந்தத்தயாரிப்பு கிட்டிமிக்ஸ் கொடுக்கலாம். நோய் இல்லாதிருக்க ஆகார விஷயத்தில் முக்கிய கவனிப்பு அவசியம்.

**கேள்வி:** சில குழந்தைகள் பிறக்கும்போதே புஷ்டியுள்ளவையாயும், சில நோஞ்சான்களாகவும் பிறப்பதேன்?

**பதில்:** குழந்தையின் தாய்தந்தையர், தாயின் தாய் தந்தையர், தந்தையின் தாய்தந்தையர், இவ்வளவு பேர்களையும் பொருத்தது குழந்தை எப்படி இருக்குமென்பது. இவர்களில் யாராவது ஒருவரை ஒத்திருக்கும் குழந்தையின் அமைப்பு. அதுவுமல்லாமல், கருத்தரித்த காலத்தில் தாயின் மனநிலை, தேக சுகம், ஊட்டம் இவைகளையும் பொருத்திருக்கும்.

**கேள்வி:** சாதாரணமாக நம்முறையில் உடல் வளர்ச்சிக்கும், மூளை சக்தி பெருகவும் டானிக் மருந்துகள் உண்டா?

**பதில்:** மித்திரனை மாதாமாதம் சரியாகப் படிக்கிறீர்களா? எங்கள் தயாரிப்பு டானிக்குகளின் விவரங்கள் மித்திரனில் வருகின்றன. அல்பால்பா, அவீனு ஸடீவா, பாஸ்பரஸ், கால்கேரியா பாஸ், காலி பாஸ், பெர்ரம் முதலியவைகளெல்லாம் மற்ற குறிகளோடு டானிக்குகளாகவும் இருக்கின்றன. பொதுவில், நோயை அறவே நீக்கி, போதிய, சரியான உணவுகளை அளிப்பின் அதுவே சிறந்த டானிக்காகும்.

**கேள்வி:** கருப்ப காலங்களில், கர்ப்பிணியும், குழந்தையும் ஆரோக்கியமாயும், குழந்தை சதைப்பிடிப்புடனும் இருக்க கருப்பிணி எவ்வித ஹோமியோபதி மருந்துகளைச் சாப்பிட்டு வரலாம்?

**பதில்:** ஈடி டாப்லட்ஸ், க்ரப்ஸீன், நீல்வம் டானிக், பாஸ்பேடால், பைடோன் முதலிய மருந்துகள் சாப்பிடலாம்.

**கேள்வி:** வைடமின் சத்து மனித சரீரத்திற்கு அவசியமா? புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைடமின்கள் யாவை? வைடமின்களை அதிகமாக உபயோகப்படுத்துவதில் தவறு ஏதாவது உண்டா?

**பதில்:** மற்றும் பல வஸ்துக்களைப்போல, வைடமினும் நமது உடம்பிற்கு இன்றியமையாததுதான். பி காம்ப்லெக்ஸ் வகையில் தினம் ஏதாவது புது வைடமின் கண்டுபிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்பொழுது எல்லா நோய்களுக்கும் பி-12 வைடமின்தான் டாக்டர்கள் கொடுக்கிறார்கள். மொத்தத்தில், டானிக்காக உபயோகப்படுகிறது. வைடமின்கள் கூட அதிகமானல் வைடமினேஸிஸ் என்ற நோய் உண்டாகிறது.

---


# ஹோமியோபதியின் கீதை

என்று பெயர் பெற்ற

டாக்டர் ஹானிமனின்

## “ஆர்கனு”னை

### டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

தமிழாக்கி புத்தக ரூபமாக வெளிவந்துவிட்டது.

ஆங்கிலத்திலேயே எளிதில் புரியாத இப்புத்தகத்தை எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வேறு தமிழாக்கம் படித்துள்ளோரும் இதைப் படித்து பலன் பெறலாம்.

இதன் விலை ரூ. 3. அனுப்பும் செலவு தனி.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

“பால நிலையம்”

**77. ராமகிருஷ்ண மடம் ரோட், சென்னை-28.**


# மெடிகல் டிக்ஷனரி

(ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பும் பொருளும்)

Rigor (ரைகா அல்லது ரைகார்):—உடலில் திடீர் என்று உண்டாகும் குளிர்; முக்கியமாகக் கடுமையான உடல் நடுக்கத்துடன் ஏற்படும் குளிர். உடல் சூடு மிக வேகமாக அதிகமாகி, ஏராளமான வியர்வை பொழிந்து அதன்பிறகு உடல் சூடு தணிந்து பலவீனம் தோன்றும். குளிருக்குப்பின் பல சமயங்களிலும் சுரம் உண்டாகும். உடலினுள் விஷப் பொருள்களோ, சீழ்ப்பொருள்களோ உற்பத்தியாகி இரத்தத்துடன் சேரும்போதும் குளிர் தோன்றும்.

Rigor Mortis (ரைகா மாடிஸ்):—இறந்தபிறகு விரைத்துப்போகுதல்.

Ringworm (ரிங்-வர்ம்):—கடி; படர்தாமரை.

Ricus Sardonicus (ரிஸஸ் ஸார்டோனிகஸ்):—தனுர்வாதம் எனப்படும் இரண சன்னி நோயில் முகத்தசைகளில் ஏற்படும் கடுமையான வலிப்பினல் நோயாளி பற்களைக் கடித்துக்கொண்டிருப்பார்.

Rodent Ulcer (ரோடெண்ட் அல்ஸர்):—மெதுவாக வளரும் குணமுள்ள புற்றுநோய்.

Roseola (ரோஸியோலா):—சென்னிறமுள்ள சருமத் தடிப்பு. தொற்றும் குணமில்லாதது.

Rubella (ரூபெலா):—ஒருவகையான சின்னம்மை.

Rubeola (ரூபியோலா):—சின்னம்மை, நீர்க்கோர்வை, சுரம், சருமத்தில் செந்நிறமான அடையடையான தடிப்புகள் ஆகியவை முக்கிய குறிகளாகும். நோயின் அடைகாக்கும் காலம் 10 முதல் 12 நாட்கள். சுரம் கண்ட நான்கு நாட்களில் சருமத்தடிப்புத் தோன்றும்.

Rugae (ரூகி):—சுருக்கங்கள்.

Rupia (ரூபியா):—மேகக்கிரந்தி நோயில் கெட்ட நாற்றம் வீசும், பொறுக்குகளால் மூடப்பட்டுள்ள புண்கள்.

Rupture (ரப்டியூர்) :—வெடித்துப்போகுதல், பிளந்து போகுதல் என்று சாதாரணமாகப் பொருள்படும் இச்சொல் குடல் பிதுக்கத்தைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. Perinal Rupture (பெரீனியல் ரப்ட்யுர்)—யோனிக்கும் ஆசன வாய்க்கும் இடையே உள்ள தோல் கிழிந்து போகுதல். Rupture of the Uterus (ரப்ட்யுர் ஆ.:ப் தி யூடிரஸ்) :—பிள்ளை பெறும்போது கருப்பைத்தசை கிழிபடுதல்.

## S

Sac (ஸாக்) :—சிறிய பை அல்லது நீருள்ள கட்டி போன்ற குழி. Hernial Sac (ஹெரனியல் ஸாக்):—பிதுங்கிய குடல்பகுதியை மூடிக்கொண்டு பைபோலத் தோற்றமளிக்கும் பெரிடோனியத்தசை.

Sacchariferous (ஸகரி.:பெரஸ்) :—சர்க்கரை கலந்துள்ள.

Saccharin (ஸகரின்) :— நிலக்கரியிலிருந்து தயாரிக்கப்படும் செயற்கைச் சர்க்கரை.

Succharose (ஸகரோஸ்) :—கரும்புச் சர்க்கரை.

Saccharum (ஸகரம்) :—சர்க்கரை, Saccharum Lactis (ஸகரம் லாக்டிஸ்) பாலிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை.

Sacral (ஸேக்ரல்) :—ஸேக்ரம் (Sacrum) எனப்படும் முதுகெலும்பைப்பற்றிய.

Sacrum (ஸேக்ரம்):—முதுகெலும்பின் கீழ்பகுதியில் முக்கோண வடிவுள்ள பாகம்.

Saddle-Nose (ஸாடில் நோஸ்) :—சப்பையான மூக்கு பிறவியிலிருந்தே மேகக்கிரந்தி நோய் இருக்கிறதென்பதற்கு இது பல சமயங்களில் முக்கிய குறியாய் அமைகிறது.

Sadism (ஸாடிஸம்):—தன்னுடைய பிறப்பு உறுப்பைப் பல விதங்களில் துன்பப்படுத்தி வலியுண்டாகச்செய்து அதில் இன்பத்தை நுகரும் ஒருவகைக் காமப்பைத்தியம். மற்றவர்களின் பிறப்பு உறுப்புக்களையும் அவ்விதமேசெய்ய ஆவல் ஏற்படும்.



St. Anthony's Fire(ஸெயிண்ட் அந்தோணீஸ் .:பயர்):- அக்கிப்படுவன், எரிஸிபலாஸ் (Erysipelas) என்ற பெயரும் உண்டு.

Saline (ஸலைன்) :—உப்புள்ள, உப்பும் தண்ணீரும் கலந்த திரவம். Normal Saline (நார்மல் ஸலைன்) :—ஒரு பைண்ட் அளவு தண்ணீரில் 1 டிராம் அளவு உப்புக்கலந்தது.

Salisbury Diet (ஸாலிஸ்பரி டயட்) :—உடலில் அளவு மீறிச் சதை இருப்பதைக் குறைப்பதற்காக உணவு விஷயத்தில் அனுசரிக்கப்படும் பத்திய முறை.

Saliva (ஸலைவா) :—எச்சில் உமிழ்நீர்.

Salivary (ஸலைவரி) :—உமிழ்நீரைப்பற்றிய.

Salivation (ஸலிவேஷன்) :—உமிழ்நீர் ஏராளமாய் ஊறுதல்.

Sulpingectomy (ஸல்பிஞ்ஜக்டமி) :—.:பெலோபியன் குழாய்களை வெட்டி எடுத்துவிடுதல்.

Salpingitis (ஸல்பிஞ்ஜைடிஸ்) :-.:பெலோபியன் குழாயில் வேக்காடு.

Salpingotomy (ஸால்பிங்கடமி) :- .:பெலோபியன் குழாயிலுள்ள துவாரம்.

Salpinx (ஸல்பிங்ஸ்) :- 1. .:பெலோபியன் குழாய்கள். 2. யூஸ்டேஷியன் குழாய்கள்.

Salvarsan (ஸல்வர்ஸான்) :- வெள்ளைப் பாஷாணத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒரு மருந்து. மேகக்கிரந்திநோய்க்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

Salve (ஸால்வ்) :- களிம்பு.

San (ஸேன்) :- சுயபுத்தியுடன்கூடிய.

Sanguine (ஸாங்வின்) :- 1. இரத்தத்தைப்பற்றிய, 2. நம்பிக்கையுள்ள.

Sanious (ஸேனியஸ்) :- நீர்போலுள்ள, நாற்றமுள்ள பச்சை நிறமுள்ள. (உடலிலிருந்து வெளியாகும் கழிவுகளின் தன்மையைக்குறிக்கும் சொல்)

Sanitary (ஸானிடரி) :- ஆரோக்கியத்தை பற்றிய.

Sanitation (ஸானிடேஷன்) :- ஆரோக்கியத்தை வளர்த்து நோய்களைத்தடுக்கும் வழிமுறைகள்.

Sanity (ஸேனிடி) :- சுய அறிவுடன் கூடிய நிலைமை.

Santonin (ஸண்டோனின்) .- பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஒன்று.

Saphenous (ஸ.ீபீனஸ்) :- காலிலுள்ள இரண்டு பெரிய அசுத்த இரத்தக்குழாய்களைக் குறிக்கும் சொல்.

Saponaceous (ஸபோனேஷியஸ்) :- சோப்பைப்போல் தோற்றமுள்ள.

Saponification (ஸபோனி.ீபிகேஷன்) :- சோப்புப் பொருளாக மாற்றுதல்.

Sapraemia(ஸாப்ரேமியா) ;- ஸாப்ரோ.ீபிட் எனப்படும் விஷக்கிருமிகளால் உற்பத்தியாக்கப்படும் விஷப்பொருள்கள் இரத்தத்துடன் கலப்பதனுல் ஏற்படும் நிலைமை.

Saprophyte (ஸாப்ரோ.ீபிட்) :- அழிவுபட்ட உடல் அணுக்களில் காணப்படும் விஷக்கிருமி.

Sarcocele (ஸார்கோஸீல்):-விரையில் ஏற்படும் சதைக் கட்டி.

Sarcoid (ஸார்காய்ட்) :- சதையைப்போலுள்ள, புற்றுநோயில் காணப்படும் சதைக்கட்டியைப்போல் தோற்றமளிக்கும் கட்டி.

Sarcoma (ஸார்கோமா) :- விஷத்தன்மையுள்ள சதை வளர்ச்சி.

Sarcomatous (ஸார்கோமேடெஸ்):—சதை வளர்ச்சியைப் போல் தோற்றமளிக்கிற.

Satyriasis (ஸடிரீயஸிஸ்) :- அளவு மீறிய சிற்றின்ப ஆசை.

# செய்திகள்

## சென்னை சுகாதார மந்திரி

ஹோமியோபதி மருந்து இஞ்சக்ஷன் தயாரிப்புக் கூடமான பஹோலா பார்மசூடிகல்ஸ் (கும்பகோணம் இந்தியன் ஹோமியோபதி ஸ்தாபனத்தின் ஒரு பிரிவு) புதிய லாபரேட்டரி கட்டிடங்களை குடந்தையில் ஜனவரி 12-ம் தேதி சென்னை சுகாதாரமந்திரி ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு திறந்து வைத்தார். அச்சமயம் பேசுகையில், எல்லா வைத்திய முறைகளிலும் மருந்துகள் உற்பத்தி தேவைக்கு அதிகமாகச் செய்யவேண்டும். மருந்துகளின் விலைகளோ அளவுக்கு அதிகமாக இருக்கிறது. இதைக்குறைக்க வழிகான அரசாங்கம் கவலைப்படுகிறது, யோசித்து வருகிறது என்று கூறினுர்.

## மதுரைச் செய்தி

சென்ற 1960 நவம்பர் மாதத்தில் மதுரையில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சிகிச்சை செய்த சென்னை மாநில கூட்டணி காரியதரிசி அவர்களுக்கும் அவருடன் ஒத்துழைத்த மற்ற டாக்டர்களுக்கும் ஜனவரி மாதம் 6-ம் தேதி மதுரை உடுப்பி ரோடரி ஹாலில் ஒரு பாராட்டு விழா நடந்தது.

## தென்காசி

தென்காசி தாலூக்கா பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மகாசபைக் கூட்டம் 8-1-61-ம் தேதி நடந்ததாக அதன் காரியதரிசி அறிவிக்கிருர்.

## புதிய ஆஸ்பத்திரி

நமது மாணவி ஸ்ரீமதி ராஜம் அவர்கள் 25-12-60-ம் தேதி முதல் ராஜம் நர்ஸிங் ஹோம் என்ற ஒரு டிஸ்பன்ஸரியை ஆரம்பித்து நடத்திவருகிருர். டிஸ்பென்ஸரி மிகவும் நல்ல முறையில் வளர்ந்து பொதுமக்களுக்கு தொண்டாற்ற இறைவனை இறைஞ்சுகிரோம்.

## புற்றுநோய்க்குப் புதிய மருந்து

புற்றுநோய் சிகிச்சைக்கு ஜப்பானிய டாக்டர் ஒருவர் புதிய ரசாயன மருந்து ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். புற்றுநோய்க் கோசங்களைத் தாக்க இதற்கு முன்பு பயன்படுத்தப்பட்டுவந்த எரிவாயு மாத்திரைகளால் எழும் பிரதிகூலப் பின்விளைவுகள் இந்த மருந்துகளால் ஏற்படுவதில்லை என்று எலிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்ததில் தெரியவந்தது.

## குழந்தைகள்

ஒரு சிறந்த மேதாவியின் கணக்குப்படி நம் நாட்டிலே ஒரு மணி நேரத்தில் ஐந்து ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. இச்செய்தியை சென்னை மாநில சுகாதார அமைச்சர் ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

## குடிக்கும் தண்ணீர்

மனிதன் இருபது நாட்களில் தன் சொந்த எடையளவான தண்ணீர் குடிக்கிறான். நல்ல தேகாரோக்கியமான மனிதனுக்கு இவ்வளவு தண்ணீர் அவசியமே என்று கூறுகிறார் அமெரிக்க இராணுவ டாக்டர் டி. எச் ஆலன்.

## உப்பில்லாப் பண்டம்

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்றனர் நம் முன்னோர். 'உப்பில்லா உடல் இடுகாட்டிலே' என்று கண்டுபிடித்துள்ளனர் அறிவியலார். உப்பு மட்டும் சேர்த்துக் கொள்ளவில்லையெனில் மனித இனமும், விலங்கினத்தில் பெரும்பகுதியும் அழிந்துவிடுமாம். பெரும்பாலான மனிதர்கள் ஒரு திங்களுக்கு மேல் உப்பின்றி உயிருடன் இருக்க முடியாதாம்.

## சிறு மா மனிதன்

உலகத்திலேயே மிகக்கனமான குழந்தை 1879-ல் பிறந்ததாம். பிறக்கும்போது எடை 32¾ பவுண்டு.



## நோய்க்கூறு அறிய 'விழுங்கும்' ரேடியோ

விழுங்கக்கூடிய சிறிய உறைக்குள் அடங்கிய ரேடியோ சாதனத்தை ஷெப்பீல்டு ரேடியோ தெரபி சென்டரில் கண்டுபிடித்துள்ளனர். இதன் உதவியால் குடலில் தோன்றும் நோய்களின் இயல்புகளை அறியமுடியும். இத்துடன் தொடர்புள்ள ஓர் ஒலி வாங்கியை நோயாளியின் படுக்கையில் வைத்துக் கொண்டால் ஜீரண கோசத்தில் சுரக்கும் அமிலம் அல்லது காரத்தன்மை பற்றித் தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும். பாட்டரி உள்பட இந்த ரேடியோ டிரான்ஸ்மிட்டர் அரையங்குல நீளமும் காலங்குல அகலமும் உடையது. இதன்மூலம் ஜீரண உறுப்புக்களிலுள்ள வெப்ப நிலை, அமுத்தம், அமிலத்தன்மை முதலியவற்றை அளவிடலாம்.

வெப்பநிலையையும் அழுத்தத்தையும் அளவிடும் (உரையில் அடங்கிய) மாத்திரைபோன்ற கருவியை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தயாரித்திருக்கிறார்கள். ஷெப்பீல்டு விஞ்ஞானிகள் அத்தகைய மாத்திரையொன்றை ஒலி வாங்கியுடன்இணைத்து செயலாற்றச்செய்து சோதனை நடத்தினர்கள். இப்போது ஒலிபெருக்கி தரும் தகவல்களைக் கொண்டு நோயின் நிலைமையை அளவிடுவது பற்றி சிந்தித்து வருகிறார்கள்.

உடல்நலமுள்ள ஒருவனுக்கு இந்த 'ரேடியோ மாத்திரையை' கொடுத்து விழுங்கச்செய்து, அவனுடைய இரைப்பையும் குடல்களும் எப்படி இயங்குகின்றன என்று தெரிந்து கொண்டு குடல் நோயுள்ளவர்களையும் குடலில் அறுவைச் சிகிச்சை செய்தவர்களையும் 'ரேடியோ மாத்திரைகளை' விழுங்கச் செய்து கிடைக்கும் தகவல்களை ஒப்புநோக்கி நோய்க்கூறை அளவிட ஓர் வழியை நிர்ணயிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இந்த முயற்சி வெற்றிபெற்றுவிட்டால் குடல்நோய்களை சோதித்து அறிய தற்சமயம் கையாளப்படும் தொல்லை தரும்-சில சமயங்களில் வாதை மிக்க-முறைகளை விட்டு விடலாம்.

## வாழ்த்துகிறோம்

எமது மாணவர் டாக்டர் இ. ஆ. சங்கரன் அவர்களுக்கும் ஸ்ரீமதி மு. இராஜேசுவரி அவர்களுக்கும் சென்ற 5-ம்

LL N61



தேதியன்று வடஆற்காடு மாவட்டம் ராணிப்பேட்டை அச்சு நானந்தர் மடத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. புதுமணத்தம்பதிகளுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களை உவகையுடன் அளிக்கிறோம்.

### தஞ்சை

கீழ்த்தஞ்சை பதிவு பெற்ற ஹோமியோ மருந்துவர்கள் சங்கத்தின் ஆதரவில் தஞ்சை மாவட்ட பதிவுபெற்ற ஹோமியோபதி மருத்துவர்களின் மாநாடு வலங்கைமான் விக்டரி டாக்கீசில் ஜனவரி 22-ம் தேதி நடைபெற்றது. மாநாட்டை திருக்குறள் திரு. வி. முனிசாமி துவக்கிவைத்தார்.

மாநாட்டிற்கு தலைமைவகித்த டாக்டர் எஸ். சீனிவாசன் பேசுகையில் குறைந்த செலவில் மக்களுக்கு பயனளிக்கின்ற இவ்வைத்தியமுறையை அரசாங்கம் அங்கீகரித்து நாடெங்கும் ஹோமியோ வைத்தியசாலைகளை துவக்கினால் வைத்தியர்கள் பஞ்சம் நீங்குவதுடன் அரசாங்கத்திற்கும் குறைந்த சிலவில் நிறைந்த பலன் கிட்டும் என்றார்.

திருவாளர்கள் எஸ். சுயம்பிரகாசம், இரா. புவனேஸ்வரன், ப. க. ஈ. அப்துல்லா, என். வி. சீனிவாசன், டாக்டர் ராஜன் மற்றும் பலரும் பேசினார்கள்.

இந்நாட்டில் சேவை புரிந்து வருகிற ஹோமியோபதி டாக்டர்கள் அனைவரையும் உடனடியாக பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும், வைத்திய பற்றுக்குறைகளைப் போக்க ஹோமியோபதி டாக்டர்களை நியமிக்கவேண்டுமென்றும், ஸ்தலஸ்தாபனங்களில் ஹோமியோபதி டாக்டர்களை நிரந்தரமாக நியமிக்க ஸ்தலஸ்தாபனங்கள் இஷ்டப்பட்டால் அனுமதிக்க வேண்டுமென்றும், ஆல்கஹால் கலந்த ஹோமியோ மருந்துகளுக்குள்ள கட்டுப்பாடு விதியைத் தளர்த்த வேண்டுமென்றும் சென்னை சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொண்டது. பெடரேஷன் ஒரு விசேஷ கோஷ்டியை அமைத்து அமைச்சர்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பேட்டிகண்டு ஆவன செய்யுமாறு மாநாடு பெடரேஷனை வேண்டிக்கொண்டது.

97742

பஸ், ரயில்
பிரயாணமென்றால்
தலை சுற்றல்,
வாந்தியென்று
மலைப்பாய் இருக்கிறதா ?
எங்கள்
**கோடிக்**
உங்களுக்கு உதவும்.

பனி பெய்ய, பயமா ?
குளிர் காண, கவலையா ?
ஆஸ்த்மா, இருமல்
ஆதிக்கத்தைப் போக்க
எங்கள்
**நில்கோஸா**
உங்களுக்கு உதவும்.

அசீரணம், வயிற்றுவலி
ஆகியவைகளுக்கு
அநேக மருந்துகள்
எம்மிடம் உள்ளன.
முதலில்
**இபில்கோ**
கொடுத்துப் பார்க்கலாம்.

பொல்லாத சுரங்கள்
எல்லாவற்றிற்கும்
ஒரே ஒரு மருந்தா ?
யாருமே கேட்டதில்லை !
ஆனால்
**ஏக்வின்**
என்ற எம்மருந்து
முதலுதவிக்குப் பயன்படும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**
"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.

## எங்கள் விசேஷ
## ஹோமியோபதி டானிக்குகள்

* **அல்பாவீனு :** அல்பால்பா, அவீனு ஸ்டீவா மற்றும் உயிர் உப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பசியை வளர்த்து, உண்ணும் உணவை உடலில் சேர்த்து உரமூட்டும் டானிக்.
* **கல்கால் பாஸ் :** சீரணக்கோளாறுகளுக்கும் பலவீனத்துக்கும்.
* **கெடோஸான் :** நரம்புத்தளர்ச்சி, மன, உடல் உறுதிக் குறைவு முதலியவைகளை நீக்கி, உடலுக்குத் தெம்பூட்டுகிறது.
* **நீல்வம் டானிக் :** கடுமையான நோய்களினாலும், அதிக உழைப்பினாலும், அளவுக்கு மிஞ்சிய சிற்றின்பத்தாலும் உண்டாகும் பலவீனத்திற்கும் மிகச் சிறந்த டானிக்.
* **பாஸ்பேடால் :** ஐந்துவித பாஸ்பேட்டுகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. நரம்புகளுக்கும் மூளைக்கும் மிகச் சிறந்தது.
* **பைடோன் :** 12 வித உயிர் உப்புகளும் சேர்த்து தயார் செய்த டானிக்.
* **வைரோஜன் :** போட்டியும் அவசரமும் மிகுந்துள்ள இந்நாளில் மனிதனின் நரம்பு மண்டலம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. யௌவனத்திமிரினாலும் சிலர் நரம்புத் தளர்ச்சி அடைகின்றனர். இக்காரணங்களால் தூக்கமில்லாமையும் ஓயாத மனக்கவலையும் உண்டாகின்றன. இத்தகையவர்களுக்குப் புத்துயிரூட்டி வாழ்க்கையில் குதூகலமாய் ஈடுபட வைரோஜன் உதவுகிறது.
* **ஜெல்ஸாவீனு :** ஒரு முக்கியமான வேலையைச் செய்யு முன் தன்னம்பிக்கை இழந்து உடம்பில் பரபரப்பும் நடுக்கமும் ஏற்படுகிறவர்களுக்கு இன்றியமையாத விசேஷ டானிக். மாணவர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், பிரசங்கிகள், பாடகர்கள், நடிகர்கள் உபயோகிக்கலாம்.
* **ஸார்பாரி :** இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்யும் உன்னத டானிக்.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலையம்"
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.**

நோயிலா வாழ்வே குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

மார்ச் 1961

38 காசுகள்

தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்

வெகுநாட்களாக எதிர்பார்த்த

## தாய்த்திரவங்கள்

## மெட்டீரியா மெடிகா

இரண்டாம் பதிப்பு

வெளிவந்து விட்டது

விலை ரூ. 1—50. :: அனுப்பும் செலவு ரூ. 0—75.

## என்னம் டாப்லெட்ஸ்

எவ்விதக் கெடுதலையும் விளைவிக்காமல் தலைவலியை நீக்கும் பொருட்டுப் பல ஆண்டுகள் இடைவிடாமல் ஆராய்ச்சி நடத்தியதின் பேரில் கிடைத்த ஒப்பற்ற மருந்து.

"ஞாபகமிருக்கட்டும். இதுவே தலைவலிக்கு சிறந்த மருந்து"

## வைத்தியக் கருவிகள்

ஜெர்மன், சைனு, இந்தியன் ஸ்டெதாஸ் கோப்புகள், ஜெர்மன், ஜப்பான், இங்கிலீஷ் தர்மாமீட்டர்கள், இஞ்சக்ஷன் சிரஞ்சுகள், ஊசிகள் மற்றுமுள்ள வைத்திய கருவிகள் ஆகியவைகளுக்கு எங்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுங்கள். "குறைந்த லாபம்! நிறைந்த விற்பனை" என்பது எங்கள் நெடு நாளையக் கொள்கை.

### தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோட்,
சென்னை-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
சென்னை-1.



For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratary Only.


# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8 பிப்ரவரி 1961 இதழ் 8


பொருள் அடக்கம் — பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மேலும் ஒரு தொண்டு .... | 3 |
| 2. | ஹோமியோபதியில் விசேஷ மருந்துகள் ... | 7 |
| 3. | ஹோமியோபதித் துணுக்குகள் .... | 14 |
| 4. | உடற் பயிற்சி .... | 18 |
| 5. | செய்திகள் .... | 29 |


## பன்னிரெண்டாவது நேர்முக வகுப்பு

இவ்வாண்டு மே மாதம் நடைபெற இருக்கும் பன்னிரெண்டாவது நேர்முக வகுப்பின் முழு விவரங்கள் ஜனவரி மாதம் அனுப்பப்பட்டன.

மே மாதம் 7-ம் தேதி வகுப்பு ஆரம்பமாகிறது. பிரவேசக் கட்டணம் ரூ. 5/- சம்பளம் ரூ. 50/- ஆக ரூ. 55/- ஏப்ரல் மாதம் 10-ம் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

வகுப்பு சுமார் இரண்டு வாரங்கள் நடைபெறும். தொழிலுக்குத் தேவைப் படும் விஷயங்களை மட்டும் தெளிவாய்ப் போதித்துக் குறுகிய நாட்களில் வகுப்பை பூர்த்தி செய்வது எங்கள் நேர்முக வகுப்பு ஒன்றே. ஆகவே நீங்கள் சேர்வதோடல்லாமல் உங்கள் நண்பர்களையும் சேரத் தூண்டுங்கள்.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை—28.

## ஓர் நற்செய்தி

எமது ஸ்தாபனத்தின் விற்பனே இலாகாவின் கிளை ஒன்று ஏப்ரல் மாதம் 3ஆம் தேதி முதல் சென்னே, ஜார்ஜ் டவுன் பிருட்வேயில், லோன்ஸ் ஸ்கொயர் பகுதிக்குக் கிழக்கே அமைந்துள்ள **செம்பு தாஸ் தெரு, 9 ஆம் நம்பர்** கட்டிடத்தில் திறக்கப்படும்.

நேயர்கள் பல வருஷங்களாய் நேரிலும் தபாலிலும் வேண்டுகோள்களை விடுத்தனர். அவ் வேண்டுகோள்களை இப்பொழுது நிறைவேற்ற முடிந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி, எங்கள் விசேஷத் தயாரிப்பு மருந்துகள். இஞ்சக்ஷன்கள், வைத்தியக் கருவிகள், புத்தகங்கள் முதலியவற்றை சென்னே பிருட்வே வழியாக வரும் நேயர்கள் மேலே கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நம் விற்பனே இலாகாவின் கிளை வெற்றியுடன் நடைபெற நேயர்கள் தங்கள் பூரண ஆதரவை அளிப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

மானேஜர்
**விற்பனே இலாகா.**
**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
**மதராஸ்-28.**

## மேலும் ஓர் தொண்டு

இந்நாட்டிலே, முக்கியமாகத் தென்னாட்டிலே ஹோமியோபதியும் ஹோமியோபதி வைத்தியர்களும் வளமுடன் வளர்ந்தோங்க வேண்டு மென்ற நோக்கத்துடன் சென்ற சுமார் 22 ஆண்டுகளாக நம் தலைவர் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துத்தொண்டு செய்து வருவது நேயர்கள் அறிந்ததே. உன்னதமான இந்நோக்கம் ஈடேறச் சிறந்த முறையில் ஹோமியோபதி வைத்தியப் பாடங்களைத் தயாரித்துப் பயிற்சி அளித்து வருகிறோம். பிற பாடங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தவர்கள் நம் பாடங்கள் அதிக விஷயங்கள் உள்ளதாகவும் சுலபமாய்ப் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றன வென்று பாராட்டியுள்ளனர். தரத்தில் சிறந்த இப்பாடங்களைப் படித்துத் தேர்ச்சிபெற்றோர் ஹோமியோபதி வைத்தியர்களாய்த் திறம்படத் தொழில் நடத்தவும் சென்னை மாநிலத்தில் தற்சமயம் உள்ள சட்டத்திட்டங்களின்படி ரிஜிஸ்டர் செய்யப்படவும் தகுதிவாய்ந்தவர்களாய் விளங்கி வருகின்றனர்.

ஹோமியோபதி வைத்திய அறிவைப் புகட்டுவதுடன் நின்றுவிடவில்லை நாம். பிற ராச்சியங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் ஹோமியோபதி மருந்துகளைப் பெறுவதில் நமது மாணவர்கள் அடைந்த அல்லல்களைக் கண்ணுற்று அவைகளை நீக்க வியாபார இலாக்காவைத் தொடங்கினோம். ஹோமியோபதி, பயோ கெமிஸ்டிரி மருந்துகளுடன் வைத்தியக்கருவிகளையும் மற்றும் வைத்தியர்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் தருவித்து நியாயமான விலைகளில் வினியோகம் செய்துவருகிறோம். எங்களிடம் இல்லாதவைகளைக்கூட நேயர்களுக்குத் தேவைப்பட்டால் முயற்சி செய்து வாங்கி அனுப்புகிறோம்.

நம் தலைவரின் சொந்த மேற்பார்வையில் லாபரெட்டரி ஒன்று கடந்த பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. ஹோமியோபதி வைத்தியத் தொழிலில் ஈடுபடுவோருக்கு ஆரம்பக்

காலத்தில் துணைபுரிய 30 வகை ஹோமிக்ஸ் மருந்துகளையும் எல்லோருக்குமே தேவைப்படக்கூடிய 50 வகை அனுபவ விசேஷ மருந்துகளையும் விசேஷ இஞ்சக்ஷன் டியூபுகளையும் நம் லாபரெட்டரியில் தயாரிக்கிறோம்.

நாள்பட்ட, சிக்கல் நிறைந்த நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் விஷயமாக நேயர்களுக்கு உதவும் பொருட்டுத் தபால் மூலமும் நேரிலும் தக்க ஆலோசனை அளிக்க ஓர் தனி இலாக்காவை நிறுவி அதில் நம் தலைவரும் அவர் கீழ் அனுபவம் பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் பலரும் பணி புரிந்து வருகின்றனர். தபால் முதலிய செலவுகளுக்காகச் சிறு தொகை மட்டுமே வசூலிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்படுகிறது.

ஹோமியோபதி வைத்திய விஷயமாக நமது தலைவர் உபயோகமுள்ள பல நூல்களைத் தமிழில் வெளியிட்டுள்ளார். அவைகளில் **மாஸ்டர்-கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மேடிகா, குடும்ப சிகிச்சை, நோய்களும் சிகிச்சையும், மெடிகல் டிக்ஷனரி** ஆகியவை தலை சிறந்தவை என்று பலராலும் பாராட்டுக்களைப் பெற்று விரும்பி வாங்கப் படுகின்றன. சமீபத்திலே ஹோமியோபதியின் வேதம் என்று அழைக்கப் படும் **ஆர்கனுன் ஆஃப் மெடிஸின்** என்ற நூலைத் தமிழாக்கியுள்ளார் நம் தலைவர். டாக்டர் ஹானிமனால் விவரிக்கப் பட்ட ஹோமியோபதித் தத்துவங்களை மிக எளிய தமிழ் நடையில் விளக்கியிருக்கிறார். **"இந்நூலைப் படிக்காதவர்களை ஹோமியோபதி டாக்டர்களாக மதிக்க முடியாது"** என்று ஒரு நேயர் மதிப்புரை வழங்கியுள்ளார். நூலின் பெருமையைக்கூற இதைவிட வேறு என்ன வேண்டும்.

இம்மாதத் துவக்கத்திலிருந்து ஹோமியோபதிக்கும் ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் சேவை செய்ய மற்றுமோர் ஏற்பாடு செய்திருக்கிறோம். சென்னை, ஜார்ஜ்டவுன் பிருட்வேயில் லோன்ஸ் ஸ்கொயர் பகுதிக்குக் கிழக்கே அமைந்துள்ள செம்புதாஸ் தெரு 9-ம் நம்பர் கட்டிடத்தில் நமது ஸ்தாபனத்தின் விற்பனை இலாகாவின் கிளை யொன்றைத் திறந்திருக்கிறோம். ஹோமியோபதி, **பயோகெமிஸ்டிரி** மருந்துகளும், புத்தகங்களும் மற்றவைகளும் அக்கிளையிலே கிடைக்கும். வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வந்தால் நமது தலைமை அலுவலகத்துக்கு வந்து போவது சிரமமாய் இருப்பதாகவும் நகரத்தின் மய்யமான ஜார்ஜ் டவுனில் கிளையொன்றை ஏற்படுத்தினால் வேண்டிய மருந்துகளை அங்கிருந்து பெற்றுக்கொள்ள வசதியாய் இருக்கு மென்றும் நேயர்கள் பல வருஷங்களாய் நேரிலும் தபாலிலும் வேண்டுகோள்களை விடுத்துள்ளனர். அவ்வேண்டுகோள்களை இப்பொழுது நிறைவேற்ற முடிந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறோம்.



நம் கிளை அலுவலகம் வெற்றியுடன் நடைபெற நேயர்கள் தங்கள் பூரண ஆதரவை அளிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். இக்கிளை செழித்தோங்கி, மேலும் பல கிளைகளைத் திறந்து ஹோமியோபதி வைத்தியர்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பைப் பெருக்கு மென்று நம்புகிறோம்.

## மகிழ்ச்சி தரும் செய்தி

பெரும்பான்மையான ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகள் தற்சமயம் நமது லாபரெட்டரியிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் மருந்துகளின் உற்பத்திச் செலவு குறைந்துவிட்டது. ஆதலால் 1-12-60 முதல் ஹோமியோபதி, பயோகெமிஸ்டிரி மருந்துகளின் விலைகளில் கணிசமான குறைவு செய்யப்பட்டுள்ளன. புதிய விலை விவரங்களுக்கு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28.**

## PRESS & REGISTRATION OF BOOKS ACT

**REGISTRATION OF NEWSPAPERS (CENTRAL) RULES, 1956**

FORM IV (See Rule 8)

**Statement about ownership and other particulars about Newspaper HOMOEOPATHY MITHIRAN**

1. Place of Publication .... 77, Ramakrishna Mutt Road, Madras-28
2. Periodicity of its Publication .... Monthly
3. Printer's Name .... V. Kuppuswamy Chetty, Bharathamatha Press
   Nationality .... Indian
   Address .... 39, Anderson St., Madras-1.
4. Publisher's Name .... Dr. V. S. Subramaniam
   Nationality .... Indian
   Address .... 77, Ramakrishna Mutt Road, Madras-28.
5. Editor's Name .... Dr. V. S. Subramaniam
   Nationality .... Indian
   Address .... 77, Ramakrishna Mutt Road, Madras-28.
6. Name & Addresses of individuals who own the Newspaper and partner or shareholders holding more than one per cent of the total capital. } Dr. V. S. Subramaniam (Sole Owner)

I, Dr. V. S. Subramaniam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) V. S. SUBRAMANIAM.

Dated 15—3—61

*Signature of Publisher.*


# ஹோமியோபதியில் விசேஷ மருந்துகள்.

***டாக்டர் எச். ஹெண்டர்ஸன் பாட்ரிக், எம். பி. பி. ஸ்.***

*ஹோமியோபதி ஃபாகல்டியின்* (Faculty of Homoeopathy) *ஆதரவில் சமீபத்தில் நடைபெற்ற கூட்ட மொன்றில் ஸர் ஜான் வீர்* (Sir John Weir) *உரை நிகழ்த்தினார். அப்போது ரஷ்யாவில் ஆல் யூனியன் இன்ஸ்டிட்யூட்* (All Union Institute) *அனுபவ வைத்திய விஷயமாய்ச் செய்து வரும் வேலையைக் குறிப்பிட்டார். நோயின் காரணம் பற்றி ஆராய்ந்து வரும் அந்த இன்ஸ்டிட்யூட்டின் முதல் முடிவு பின் வருமாறு:—*

*"ஸர்வ ரோக நிவாரணி என்று கருதக் கூடிய மருந்து எதுவுமே இல்லை. ஏதோ ஒரு நோயை மட்டும் எல்லாச் சமயங்களிலும் நீக்கக்கூடிய மருந்தும் கிடையாது."*

*நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்* **டாக்டர் ஹானிமனும்** *மேலுள்ளதையே நமக்குக் கூறினார். இக்கூற்று முற்றிலும் உண்மையென்பதைச் சீரியமுறையில் தொழில் புரியும் ஹோமியோபதியர்கள் அனைவரும் அறிவர். அப்படியிருக்கும் போது ஹோமியோபதியில்* **"விசேஷமருந்துகளை"** *ப் பற்றி நாம் பேசலாமா என்ற கேள்வி எழுகிறது. எந்த ஒரு மருந்தும் குறிப்பிட்ட ஒரு நோயை அல்லது நிலைமையை நூற்றுக்கு நூறு பங்கு குணம் செய்வதில்லை. செய்யவும் முடியாது என்பது உண்மையே ஆயினும் ஒரு சில நோய்களில் அல்லது நிலைமைகளில் நோய்க்குறிகளின் சேர்க்கை நன்கு தெரிந்த மருந்தொன்றின் குறிச் சித்திரத்துடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறது. இதனால் அந் நோய்க்கு அம்மருந்து உபயோகமில்லாமல் போவது ஒரு சில சமயங்களில் மட்டுமே. ஆதலால் அந்நோயும் மருந்தும் வைத்தியரின் மனதிலே ஆழமாய்ப் பதிந்து விட்டால் அம் மருந்தை அந்நோய்க்கு* **"விசேஷ மருந்து"** *என்று நினைக்கத்தோன்றுகிறது. இதற்கு மிகப் பொருத்தமானதோர் உதாரணமாக ஸ்கார்லேடினா சுரத்தையும்* (Scarlet Fever) *பெலா*

டொனுவையும் கூறலாம். ஒருவர் உடலில் பெலாடொனு விஷத்தை (Belladonna) உட்கொண்ட பிறகும் ஸ்கார்லேடினு சுரத்திலும் தோன்றும் நோய்க்குறிகள் ஒன்று போலவே தோற்றமளிக்கின்றன. இரண்டில் எது காரண மென்று எளிதில் முடிவு கூற முடியாது. ஆதலால் ஸ்கார்லேடினு சுரக்கேசுகளில் பெரும்பாலானவை பெலாடொனுவினுல் விரைவில் குணம் செய்யப்படுகின்றன. விஷத்தன்மை வாய்ந்துள்ள ஒரு சில ஸ்கார்லேடினுக் கேசுகளில் பெலாடொனுவினுல் குணம் ஏற்படுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆனுல் இவ்வகை ஸ்கார்லேடினு மிகமிக அபூர்வமாகவே தோன்றுகிறது. ஒரே ஒரு கேசைத்தான் நான் பார்த்திருக்கிறேன். சரும வெடிப்புக்களிலிருந்து இரத்தப் பெருக்கெடுக்கும் குண முள்ளதாய் இருந்த அக்கேசில் லாகெஸிஸ் (Lachesis) என்ற மருந்தினுல் நன்மை உண்டாகியது.

கக்குவாய் இருமலுக்கும் ட்ரோஸெரா (Drosera) வுக்கும் உள்ள தொடர்பை மற்றுமோர் உதாரணமாகக் கூறலாம். ஆனுல் என் அனுபவத்தில் கக்குவாய் இருமல் கேசுகளில் ட்ரோஸெரா தேவைப்படும் சந்தர்ப்பங்களை விட ஸ்கார்லேடினுக் கேசுகளில் பெலாடொனு தேவைப்படும் சந்தர்ப்பங்களே அதிகமாய் இருக்கின்றன.

உடலின் மென்மையான தசைகளில் எதிர்பாராத விபத்துக்களால் நேரும் சேதங்களில் நூற்றுக்கு நூறு கேசுகளிலும் ஆர்னிகாவே மருந்தாய் விளங்குகிறது. இவ்வாறு இருப்பது இயற்கையே. ஏனெனில் விபத்துக்களால் நேரும் தசைச் சேதம் உண்மையான நோய் அல்ல. ஆதலால் வேறு மருந்தை நாடவேண்டியதில்லை. ஆர்னிகாவை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுக்கலாம். அல்லது அடிபட்ட இடத்தின் மேலே தடவலாம். உள்ளுக்குச் சாப்பிடுவதே மேலானது என்பது என் அபிப்பிராயம். நல்ல ஆரோக்கிய நிலையில் இருந்தவர்களுக்கு எதிர்பாராத கெட்ட செய்தியைக் கேட்டதால் மூளையில் அதிர்ச்சி தாக்கி ஏற்படும் கோளாறுகளில் நூற்றுக்கு நூறு கேசுகளிலும் இக்னேஷியா பயன்படும்.



குழந்தைக்குத் தாய்ப் பால் ஊட்டிவரும் தாய்மார்கள் எக்காரணத்தினுலாவது உரிய காலத்துக்கு முன்னதாகப் பாலை வற்றச் செய்ய நேரிட்டால் அதற்கு லாக் கனேனம் (Lac Caninum) ஓர் சஞ்சீவியே போல் வேலை செய்து பாலை வற்றடிக்கும்.

விரைவில் குணமாகாமல் வைத்தியருக்கு மிகுந்த தொந்தரவை அளிக்கும் நோய்களில் முகப்பருவும் ஒன்று. இக்கோளாறு உள்ள நோயாளிகளில் பெரும்பாலோரிடம் ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுக்க உதவக்கூடிய வேறு குறிகள் எதுவுமே இருப்பதில்லை. உடல் வாகைக் குறிகள் காணப்பட்டால் அவைகளை ஆதாரமாய் வைத்து ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுப்பது நல்லதுதான். ஆனுல் வேறு குறிகள் எதுவும் தென்படாத போது ஸல்பர், ஸிலிகா, கார்போ வெஜி ஆகிய இம்மூன்று மருந்துகளும் ஒன்று சேர்க்கப்பட்ட கூட்டு மருந்தை 6 வீரியத்தில் தினம் மூன்று வேளைகள் வீதம் மூன்று நாட்கள் கொடுத்து நின்றுவிடுவேன். இச்சிகிச்சைக்குக் கட்டுப் படாத கேசுகள் மிகச் சொற்பமே.

விசேஷ மருந்துகளை ஆராயும் போது நோய்த்தடுப்பு மருந்துகளின் விஷயம் கவனத்துக்கு வருவது இயற்கையே. நோய்த்தடுப்பு வைத்தியமே எதிர்கால வைத்தியமாய் இருக்கு மென்று பிரிட்டிஷ் மெடிகல் அஸோஸியேஷன் ஹோமியோபதி பாகுல்டிக்குச் சமீபத்தில் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர். இக்குறிப்பிலிருந்து நோய்த்தடுப்பு வைத்திய முறை அலோபதி முறையின் ஏக போக உரிமை என்றும் ஹோமியோபதிக்கு அதில் சம்பந்தம் இல்லை யென்றும் அவர்கள் கருதுவதாய்த் தோன்றுகிறது. ஆனுல் உண்மை அவர்கள் கருத்துக்கு நேர்மாருக இருக்கிறது.

ஆரோக்கிய நிலையிலும் சரி, நோயுற்ற போதும் சரி நோயாளியின் உடலில் நோய், தொற்றுவதைத் தடுக்கும் வல்லமையை வளர்ப்பதையே தன்

வாழ்வின் பணியாகக் கொண்டுள்ள ஹோமியோபதி டாக்டருக்கு நோய்த்தடுப்பு வைத்திய முறையைக் கையாள அலோபதி டாக்டரைவிட அதிகத் தகுதி உண்டு. நோய்த் தடுப்பு முறையும் நோய் தோன்றாதபடி உடலுக்கு வலிமை அளிப்பதும் ஒன்றுதானே. பிறகு நோய் வந்தபின் குணம் செய்வதைவிட வராமலேயே காப்பது நல்ல தல்லவா. அது எளிதும் கூட. ஏனென்றால் அது வழக்கத்தை ஒட்டியதாக ஏற்பட்டு விடும். ஏதோ ஒரு நோய்க்கிருமிகள் உடலில் தொற்றிய பிறகு அதனால் தோன்றக்கூடிய நோய்க்குறிகள் எப்படியெப்படி இருக்கு மென்று சிறிதுகூட உறுதியாகச் சொல்ல முடியாது. ஆதலால் நோய் தொற்றாதபடி பாது காக்க அந்நோய்க்குறிகளை ஆரோக்கிய நிலையிலுள்ள ஒருவர் உடலில் தோற்றுவித்த மருந்தையே உபயோகிக்க வேண்டும்.

இளங் குழந்தைகளிடையே க்ஷயரோகம், முற்காலத்தில் இருந்ததைப்போல் அவ்வளவு அதிகமாய் இப்போது இல்லை யென்று நான் நினைக்கிறேன். ஆயினும் வேண்டிய அளவுக்குக் குறைந்து போகவில்லை. என் அனுபவத்தில் பல்லாண்டுகளுக்கு முன் நான் கண்ட ஒரு கேஸை என்றும் என்னால் மறக்க முடியாது. அக்குழந்தையின் தந்தை அந்தாட்சி பெற்ற தூய பாலை உற்பத்தி செய்கிறவர்களில் ஒருவர். தன்னிட மிருந்த மாடுகளைப்பற்றி உண்மையிலேயே அவர் பெருமைப்பட இடமிருந்தது. அந்தப்பையன் நல்ல சூழ்நிலையிலே வளர்க்கப்பட்டான். பால் பண்ணையை விட்டு ஒரு சமயம் கூட அவன் வெளியே சென்றது கிடையாது. நோய் என்று ஒரு நாள் கூடக் கீழே படுத்தது கிடையாது. சுமார் மூன்று வயதில் தாய் தந்தையர் நாட்டின் வேறொரு பகுதியிலிருந்த தங்கள் நண்பர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர். இதற்குப் பிறகு சில நாட்களுக்குள் அப்பையனுக்கு நோய் கண்டது. க்ஷய சம்பந்த முள்ள மூளை வேக்காடாகத் தோற்றமளித்துப் பையன் இறந்தான். பச்சைப்பாலைக் குடிப்பதற்கு முன் எல்லாக் குழந்தைகளுக்கும் ட்யுபர்குலினம் பொவினத்தை 12 அல்லது 30 வீரியத்தில் குறைந்தது இரண்டு வேளைகளாவது கொடுக்கவேண்டு மென்று நான் நினைக்கிறேன். பாலி



லுள்ள நோய்க்கிருமிகள் சாகும்படி அதை **பாஸ்டுரைஸ்** (Pasteurise) செய்வது தான் வழி என்று சிலர் கூறலாம். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாதாயினும் விவாதம் செய்ய இது சமயமில்லை.

பசு மாட்டிலிருந்து தயாரிக்கப்படும் அம்மைப்பாலுக்கு பெரியம்மையைத் தடுக்கும் வல்லமை இருக்கிறதென்று நான் நம்பவில்லை. அது மட்டுமல்ல. அம்மைப்பால் சில சமயங்களில் திட்டவட்டமான கெடுதல்களைச் செய்கிறது. மரணத்துக்குக் காரணமும் ஆகிறது. **வாரியோலினம்** இயற்கையான பெரியம்மைத் தடுப்பு மருந்து. அம்மைப் பாலைவிட அது இருமடங்கு சிறந்தது. பெரியம்மையுடன் உண்மையான தொடர்பு உள்ளது. கெடுதலை விளைவிப்பதில்லை. க்ளாஸ்கோவில் (Glasgow) பெரியம்மை கொள்ளை நோயாய்த் தோன்றிய இரண்டு சமயங்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் அம்மைப்பாலைக் குத்திக்கொள்வதற்கும் பதிலாக வாரியோலினத்தை உட்கொண்டனர். அவர்களில் ஒருவருக்குக் கூடப் பெரியம்மை ஏற்படவில்லை. ஆயினும் கேசுகளின் மொத்த எண்ணிக்கை அதிகமில்லையாதலால் இவ்விஷயத்தைப் பெரியதாக மதிக்க முடியாது. இருந்தாலும் இதன் உண்மையைப் புறக்கணிக்கமுடியாது. அதேபோல, சமீபத்தில் அம்மைப்பாலைக் குத்திக்கொண்ட பலருக்கும் பெரியம்மை ஏற்பட்டது என்ற உண்மையையும் கவனிக்கத்தான் வேண்டும்.

குடல் நோயில் காணப்படும் வேதனைக்குறிகளைப் போன்ற குறிகள் **டபாகம்** என்னும் மருந்தில் காணப்படுகின்றன. கடல் பயணம் தொடங்குவதற்கு முதல் நாள் சில மணி நேரங்களுக்கு ஒரு முறையாக 30 வீரியத்தில் இம்மருந்தைச் சாப்பிட்டு வந்தால் பல சமயங்களிலும் கடல் நோய் வராமல் பாதுகாப்பு ஏற்படும்.

பரீக்ஷை எழுதப் போகும் போதும் பொதுக்கூட்டங்களில் பேசும் போதும் இவை போன்ற சமயங்களிலும் தோன்றக் கூடிய அச்சத்தை **அர்ஜண்டம் நைட்ரிகம்**.

ஜெல்ஸிமியம் ஆகிய ஒன்றிரண்டு மருந்துகளால் நடை செய்துவிடலாம். குறிப்பிட்ட ஒரு நோயாளிக்கு இவ்விரண்டில் எது ஏற்றதென்பதை அனுபவமுள்ள டாக்டரால் சொல்ல முடியும்.

ஹோமியோபதி நோய்த்தடுப்பு மருந்துகளுக்கு ஆயுத சிகிச்சைத் துறையில் ஏராளமான வேலை இருக்கிறது. ஆபரேஷன் செய்வதற்கு முதல் நாளன்று **பாஸ்பரஸ்** 30 கொடுத்தால், **குளோரஃபாம்** (Chloroform) கொடுக்கப்பட்ட பிறகு சாதாரணமாகத் தோன்றும் வேதனைக்குறிகளைத் தடுத்து விடலாம். ஒழுங்காகக் கொடுக்கப்பட்டால் குளோரஃபாம் ஆபத்தை உண்டாக்குவதில்லை. சென்ற முப்பது ஆண்டுகளாக க்ளாஸ்கோ ஹோமியோபதி ஆஸ்பத்திரியில் குளோரஃபாரத்தைத்தவிர வேறு மயக்க மருந்துகள் எதுவும் உபயோகிக்கப்பட்டதில்லை. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கேசுகளில் ஒன்றே ஒன்று தான் சாவில் முடிந்தது. மயக்க மருந்தாக ஈதரை (Ether) உபயோகிக்கும் போது **ஆண்டிமோனியம் டார்ட்டாரிகம்** கொடுக்கப்பட வேண்டும். புண்கள் விரைவில் ஆறுவதற்கு ஆபரேஷன் செய்யும் போது **காலெண்டுலாவைப்** பயன் படுத்தவேண்டும். புண் வேகமாக ஆறவேண்டுமென்றால் புண் உள்ள இடத்தில் எவ்வகையான நசை இருந்தாலும் ஒரு பைண்ட் (Pint) தண்ணீரில் 20 சொட்டுக் காலெண்டுலா தாய்த்திரவம் கலந்து உபயோகிப்பது நலம். ஆபரேஷன் செய்த மறு கணமே ஏற்ற தடுப்பு மருந்தைக் கொடுக்கவேண்டும். தோன்றக்கூடிய நோய்க்குறிகளை எதிர்பார்த்து ஏற்ற மருந்தைக் கையில் வைத்திருக்க வேண்டும். அடிவயிற்றில் செய்யப்படும் சாதாரண ஆப்பரேஷன்களில், உதாரணமாக சாதாரண உபாங்க ஆப்பரேஷனில் **ரஸ்டாக்ஸ்** 1. M. அல்லது **ஆர்னிகாவைக்** கொடுக்க வேண்டும். உபாங்கம் கிழிந்துபோய் விஷப்பொருள் பரவுமோ என்று கவலை தரக்கூடிய சமயங்களில் **பைரோஜனை** (Pyrogen) கொடுக்க வேண்டும். கல்லீரலில் விஷப்பொருள்கள் பரவும் போது **க்ரொடேலஸ்** (Crotalus) பயன்படும். கைகள் கால்கள் மானியின் நுனித்தோல் நகங்கள் ஆகியவைகளை வெட்டி யெடுத்துவிடும் போது **ஹைபெரிகும்** (Hypericum) தேவைப்படுகிறது.



டான்ஸில் சுரப்பிகளை வெட்டி யெடுக்கும் போது **காலெண்டுலாவை** உள்ளுக்குச் சாப்பிடவும் அல்லது தொண்டையைக் கொப்பளிக்கவும் கொடுக்கலாம்.

மேலுள்ள மருந்துகளை நோய்த்தடுப்புக்கருவிகளாகப் பயன் படுத்துவதினால் ஆபரேஷன் செய்தபிறகு கோளாறுகள் நேராமல் காப்பாற்றி விடலாமென்று முடிவு செய்ய முடியாது. ஆயினும் அக் கோளாறுகளைப் பெரும் அளவில் தடை செய்ய முடியுமென்று உறுதியாய்க் கூறலாம்.

துளை விழும் காயங்களில் ஆண்டி-டெடானிக்-ஸீரம் (A. T. S.) வேண்டு மென்று ஓடாதீர்கள். லேடம் 30-ஐ ஒரு சில வேளைகள் கொடுத்தால் கவலைக்குச் சிறிதும் இடம் ஏற்படாது.

''ஜர்னல் ஆஃப் ஹோமியோபதிக்'' மெடிஸின்

---


# ஹோமியோபதியின் கீதை

என்று பெயர் பெற்ற

டாக்டர் ஹானிமனின்

## ''ஆர்கனை''

## டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

தமிழாக்கிப் புத்தக ரூபமாக வெளிவந்துவிட்டது.

ஆங்கிலத்திலேயே எளிதில் புரியாத இப்புத்தகத்தை எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வேறு தமிழாக்கம் படித்துள்ளோரும் இதைப் படித்து நலம் பெறலாம்.

இதன் விலை ரூ. 3. அனுப்பும் செலவு தனி.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

''பால நிலையம்''

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

சென்னை—28.

# ஹோமியோபதித் துணுக்குகள்

1. சுத்த இரத்தக்குழாய்களுக்கு அகோனைட்; தசைக் கோளாறுகளுக்கு ஆர்னிகா; நரம்புகளுக்கு ஹைபிரிகம்; அதே போல அசுத்த இரத்தக்குழாய்களுக்கு ஹமாமலிஸ்.

டாக்டர் பஞ்சா.

2. சாதாரணமாக மார்பெலும்புக்குக் கீழ் உண்டாகும் வயிற்றுவலி சாப்பிட்டவுடன் குறையும். அப்படிப்பட்ட நோயாளிக்கு வயிற்றில் புளிப்பு அதிகம் என்று கருத வேண்டும். இதற்கு மாறாக உண்டவுடன் வயிற்றுவலி அதிகம் என்றால் வயிற்றில் புளிப்புச்சத்துக் குறைவு என்று அறிய வேண்டும். அப்படிப்பட்டவர்கள் காபி, டீ, குடிக்கலாகாது; புகை பிடிக்கலாகாது; வயிற்றைப் பொறுத்த உடற்பயிற்சியையும் தவிர்க்கவேண்டும்.

3. வயிற்று உப்பிசம் இல்லாதிருக்க, பாலில் கொஞ்சம் மிளகுப் பொடியைத் தூவிக் காய்ச்சி உட்கொள்ளவும்.

4. 1960-ம் வருடத்தில் ஒரு சாதாரண அமெரிக்கன் 1,488 ராத்தல் உணவு உட்கொண்டானும். அதில் பால், வெண்ணை முதலியன 414 ராத்தல்; மீன், கோழி, மாமிசம் முதலியன 409 ராத்தல்; கோதுமையும் தானியமும் 146 ராத்தல்; சர்க்கரையும், பாகும் 108 ராத்தல்; எண்ணையும் கொழுப்புகளும் 67 ராத்தல்; முட்டைகள் 41 ராத்தல்; காபி, டீ, கோக்கோ முதலியன 17 ராத்தல் கலந்திருந்தன.

போன மகாயுத்தத்தில், கணக்குப் பார்த்தபோது, இந்தியன் சிப்பாய் உண்ணும் உணவைக் காட்டிலும் ஆங்கில சைனிகன் மூன்று மடங்கு அதிகமாக உண்டானும். அமெரிக்க சைனிகனே ஆங்கில சைனிகனைவிட மூன்று மடங்கு அதிகம் உண்டிருக்கிறன்.

5. பிக்ரிக் ஆஸிட் பார்ப்பதற்கு மஞ்சள் ஊசிகள் போலிருக்கும். இம்மருந்து வேண்டிய நோயாளிக்கோ கண், சர்மம், மூத்திரம் எல்லாம் மஞ்சளாயிருக்கும்.



6. வயதாக ஆக, ஆண்களின் விரை சுருங்குவதற்கேற்ப சுக்கில சுரப்பி வீங்க ஆரம்பிக்கிறது. அறுபது வயதிற்கு மேல் ஆனவர்களில் நூற்றுக்கு 30 பேருக்கு சுக்கில சுரப்பிகள் வீங்கி இருக்கும். வீங்கிய சுக்கில சுரப்பிகள் அதிக நீரை உற்பத்தி செய்கின்றன. இக்காரணத்தால் தான் சில தொண்டு கிழவர்கள் மெத்த அறிவாளிகள் கூட இயற்கைக்கு மாறாக போகிக்க விரும்புகிறார்கள்.

டாக்டர் ப்ளாக்வுட்.

7. ஹோமியோபதி மருந்தைத் தேடிக்கொடுப்பது எப்படி என்பதைப்பற்றி டாக்டர் ஈ. ஈ. கேஸ் என்ற பிரபல அமெரிக்க ஹோமியோபதி டாக்டர் தன் பல வருட அனுபவத்தில் இருந்து சில சட்டங்களை இயற்றி இருக்கிறார். அவையாவன:

(i) உடல் குறிகளைக் காட்டிலும், மனக்குறிகளே முக்கியம்.

(ii) விசேஷ மனக்குறிகள் அகப்படா விட்டால், விசேஷ உடல் குறியையே எடுத்துக் கொள்ள வேண்டும்.

(iii) ஒரு பொதுக் குறியானது மற்ற குறிகளுடன் சேரும்போது ஒரு விசேஷக் குறியாக மாறலாம்.

(iv) திரும்ப மருந்து கொடுக்க வேண்டி வந்தால், அச்சமயத்தில் உள்ள குறிகளுக்கு ஒத்த மருந்தைக் கொடுக்க வேண்டும்.

வீரியம்

(v) அலோபதி மருந்து உட்கொண்டவருக்கும், குறைந்த வீரியத்தில் மருந்துண்பவருக்கும், உயர்ந்த வீரியத்தில் மருந்து கொடுக்க வேண்டும்.

(vi) உயர்ந்த வீரியத்தில் மருந்துண்போருக்கு அதைக் காட்டிலும் அதிகமான அல்லது குறைவான வீரியத்தில்

கொடுக்க வேண்டும். அதாவது, அந்நோயாளிக்கு மற்ற வீரியத்தில் மருந்து கொடுக்க வேண்டும்.

(vii) குணம் காணுவது நின்ற பிறகு, அதே மருந்தைக் கொடுக்க வேண்டும் என்ருல், சற்று உயர்ந்த வீரியத்தில் கொடுக்கவும்.

தவணை

(viii) ஏதாவது ஒரு நோய்க்குறி மிகவும் அதிகமாயிருப்பின் அச்சமயத்திலோ, சற்று குணம் கண்டவுடனே, ஒரு டோஸ் கொடுக்கவும்.

(ix) போதிய குறி மாற்றம் கிட்டும் வரை பொருக்கி எடுத்த மருந்தைத் திருப்பிக் கொடுக்கலாம். பின்னர், உடன் நிறுத்த வேண்டும்.

* காலதாமதம் ஏற்பட்டாலும், கொஞ்சமாவது குணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது மருந்தைத் திருப்பிக் கொடுக்கலாகாது.

''ஹோமியோபதி அவுட்லுக்''


## டீலர்கள் தேவை

ஒவ்வொரு நகரத்திலும் எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகளை விற்பனை செய்ய டீலர்களை நியமித்து வருகிறோம். டீலர்களுக்குத் தாராளமான கமிஷனும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும். ஒவ்வொரு மாதமும் ரூ. 200-க்குக் குறையாமல் மருந்துகளை விற்பனை செய்யக் கூடியவர்கள் மட்டும் முழு விவரங்களுக்குக் கீழுள்ளபடி விலாசமிட்டு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

'' பாலநிலையம் ''

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.



## டான்ஸில்ஸ்

இரட்டையர்களாவர். சுவாசகோசத்தில் புகையும் தூசியும் புகுந்து நோய்கள் உண்டாகாதபடித் தடுத்து, தாமே நோயுறும் தியாகிகள் !

அப்படிப்பட்ட தியாகிகளை வெட்டி எறிந்தால் உடலுக்கு ஆயுள் உள்ள வரை ஊனம்தான் என்று எல்லா டாக்டர்களும் ஒத்துக்கொள்கிருர்கள் : ஆனல், டான்ஸில் வீங்கி, சீழ்பிடித்தால் அதை குணமாக்க வழி யறியாது தான் கத்தியை தேடுகிருர்கள்.

அச் சமயத்தில் ஹோமியோபதியின் பெயரை நிலை நாட்ட, எங்கள்

## ஸில்டோனிஸ்

உபயோகித்தால் போதும்.

* * *

இந்த இனிய மருந்தினுல், டான்ஸில் குணமடைந்து சுய வடிவுக்குச் சுருங்கி தன் சேவையைச் சரிவர செய்கிறது.

விலை : 50 மாத்திரைகள் கொண்ட ஒரு பாட்டில் : ரூ. 2-25.
500 " " ரூ. 18-00.

(அனுப்பும் செலவு தனி.)

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

# உடற் பயிற்சி

குமாரி கா. சரஸ்வதி



நம் நாட்டு மக்களின் உடல் நலம் பெரும்பாலும் நாட்டின் செல்வச் சிறப்பு, மன அமைதி, சுகாதாரக்கல்வி, வைத்திய வசதி ஆகிய நான்கினையும் சார்ந்திருக்கிறது. இந்தியா பல வளங்களும் நிறைந்த குபேர நாடு. "தன் கையே தனக்கு உதவி" என்பது முதுமொழி. அமெரிக்காவில் தேகப்பயிற்சிக்கென்றே அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

உடற்பயிற்சி, நமது தேசம் ஒன்றுபட உதவியாய் இருக்கிறது. ஏனெனில் விளையாட்டில் இந்தியனென்றும் அமெரிக்கனென்றும், சிங்களனென்றும், ஆஸ்திரேலியனென்றும் வித்தியாச மில்லாமல் ஐக்கிய உணர்ச்சியோடு எல்லோரும் ஒன்று சேர ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. நாம் ஜப்பான், சீனு இன்னும் சில ஐரோப்பிய தேசங்களின் சரித்திரங்களை ஆராய்வோமானல் அவர்களது தேச முன்னேற்றத்திற்கு ஒரு காரணம் தேக அப்பியாசம் எனலாம். ஒவ்வொரு இந்தியனுடைய கடமை என்னவென்றால் தம் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதுமன்றி உடல் வலிமையின் அவசியத்தை சிறுவயதிலிருந்தே புகட்டவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு பயில்வான், நல்ல உடற் கட்டில் தேர்ந்தவர்கள் ஆகியோரின் படங்களைக்கொடுத்து தேகத்தை வளர்க்கிற பயிற்சியில் அவர்கள் ஈடுபடவேண்டிய அவசியத்தை நன்கு விளக்க வேண்டும். தாய்மார்கள் குழந்தைகள் ஏதாவது கதை சொல்லுமாறு வேண்டிக்கொண்டால் பண்டைக்காலத்து வீரர்கள் சரித்திரத்தை அவர்களுக்கு விளக்கம் செய்யவேண்டும். அதனால் வருங்கால இந்தியர் பலசாலிகளாக இருப்பர். மூன்று அல்லது நான்கு வயதிலிருந்தே பந்து விளையாடவும், கயிற்றின் மூலமாக தாண்டிப்போகவும் கற்றுக்கொடுக்கலாம். சிறு பிராயத்தில் ஒரு பெண் விளையாடும்போது தேகத்தைக் குலுக்கி முன்னும் பின்னும் வளையும்படி செய்வதால் அடிவயிற்று தசைகளும் மற்ற தசைகளைப்போல அப்பியசிக்கப்படுகின்றன. நடனமாடுவோர் எல்லா அங்கங்களுக்கும் வேலை கொடுக்கிருர்கள்; ஆதலின் அது உடற்பயிற்சிகளில் மிக சிறந்த பயிற்சியாம்.

ஆனல் வயது செல்லச் செல்ல இம்மாதிரி விளையாட்டுகளைக் கைவிடுவதால் அடிவயிற்றுத் தசைகளுக்குச் சுறுசுறுப்பான அப்பியாசம் எதுவும் இல்லாமற் போய்விடுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் கருப்பமாவதற்கு முன் உடற்பயிற்சி மிகவும் அவசியம். அடிவயிற்றின் தசைகளைப் பலப்படுத்தும்படியான விசேஷப்பயிற்சிகளைச் செய்து வந்தால் அச்சதைகளுக்கு நன்ருய்ச் சுருங்கும் சக்தி ஏற்பட்டு பிரசவகாலத்தில் குழந்தையை ஆயாசமின்றி வெளியேற்றவும் பிரசவம் வெகு சுலபமாக ஆகவும் உதவியாய் இருக்கும். நடனமாடும் போது அடிவயிற்று தசைகளுக்கு அப்பியாசம் அளிக்கப்படுகிறது. கருப்பிணிகள் சோம்பலுக்கு இடம் கொடுத்து பிணியாளிகளைப்போல் இருக்கக்கூடாது. மபக்கமானகாலம் தீர்ந்த பிறகு கருப்பிணியானவள் முன் போல தன் வேலைகளை கவனிக்கவேண்டும். கருப்பிணிகளுக்கு வீட்டு வேலைகளைச் செய்ய பிரியமில்லாவிட்டால் காலையிலும் மாலையிலும் நடப்பது நல்லது. செல்வமாக வளரும் பெண்களுக்கும் மூளை உழைப்பாளிகளுக்கும், தேகப்பயிற்சி அவசியம். தேகப்பயிற்சி ஆயுளை நீடிக்கச் செய்யும்; ஆனல் வீட்டு வேலைகளை வேறொரு பெண்ணின் உதவியின்றித் தானே செய்யும் ஒரு பெண்ணுக்கு தேகப்பயிற்சி அவசியமில்லை. ஒரு பெண் தன்வீட்டு வேலைகளைச் செய்யும்போது சுமார் பத்தாயிரம் அடி நடப்பதாக கணக்கிடப்படுகிறது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்தல், பாத்திரம் தேய்த்தல், மாவு அரைத்தல் அல்லது இடித்தல், அம்மியில் அரைத்தல், துணி துவைத்தல் ஆகிய உடற்பயிற்சிகளை செய்யும் பெண்களுக்கு வேறு உடற்பயிற்சி அவசியமில்லை. கருப்பிணிகள் களைப்பு ஏற்படும் அளவுக்கு வேலைசெய்வதோ தேக பயிற்சி செய்வதோ அபாயம் தரும். குள்ளமாகவுள்ள பெண்கள் கல்யாணமாவதற்கு முன்னிருந்தே தேகப்பயிற்சி செய்யவேண்டும். ஏனெனில் அவர்களுக்கு பிரசவம் சிறிது கடினமாய் இருக்கும்.

உடற்பயிற்சியினல் தேகத்தின் தசைகளும் அவயவங்களும் வன்மைபெற்று வளருகிறது. சிறு குழந்தையானது பிறந்தவுடன் தன் கைகளையும் கால்களையும் உதைத்துக் கொண்டு விளையாடி தேகப்பயிற்சி செய்கிறது மிருகங்

களும் தேக அப்பியாசம் செய்கிறது என்பதை நாம் கண்காட்சி சாலைக்குச் செல்லும் போது அவைகள் வேகமாக எழுந்து நடப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மிருகங்களுக்கும் உடற்பயிற்சி அவசியம். ஆதலின் அவைகளை இரண்டொரு நாளைக்குப் பட்டினியாக போட்டுவைப்பர், இல்லாவிட்டால் அவை எப்போதும் தூங்கிக்கொண்டே இருக்கும்.

நம் உடல் உரம் பெற்று ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் தேகப்பயிற்சி மிகவும் அவசியம். உபயோகப்படுத்தாத இயந்திரங்கள் துருப்பிடித்து சீக்கிரத்தில் பயனற்றுப் போகின்றன. அது போல உபயோகப்படாத அங்கங்கள் வாடி வலி குறைந்து போகும். அதுவே நமது உடம்பின் தன்மையாம். கால்களை உபயோகிக்காமல் நடு வயதைத் தாண்டியவர்கள் பல வாரங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தால் மூட்டுகளில் பிடிப்பு ஏற்படுகிறது. கைகால் உடைந்து போகும்போது கட்டு கட்டி வைக்கிறார்கள். கட்டை சிலவாரங்கள் கழித்து அவிழ்க்கும்போது பழையபடி கைகால்களை மடக்கமுடியாமல் வருந்துகிறோம். இளைஞர்கள் வாலிபம் நீடிக்க உடற்பயிற்சி செய்யவேண்டும். சைகிள் சவாரி செய்தல் தேக ஆரோக்கியத்திற்கு மிகச்சிறந்த ஒரு அப்பியாசம். சைகிள் விடுதல், சுவாசாசயங்கள், இருதயம் மார்பு. தோள், கழுத்து ஆகியவற்றின் தசைகளை விருத்தி செய்கிறது. சில சில முறைகளின்படி சைகிள் விட்டால் முதுகு, இடுப்பு, தொடையின் பின்புறம், கெண்டைக்காலின் பின்புறம் இவைகளின் தசைகளும் விருத்தி அடையும். சைகிள் ஓட்ட கடினமாக இருக்கும்போது இறங்கி சைகிளைத் தள்ளிக்கொண்டு போவதும் உடம்புக்கு நல்லது. சைகிள் விடுதல் மெலிந்தவர்களைப் பருக்கவும் ஸ்தூல சரீரிகளை மெலியவும் செய்யும். வாலிபர்கள் தங்கள் தேக ஆரோக்கியத்தை காத்துக்கொள்ள தினமும் ஐந்து மைல் சைகிள் சவாரி செய்யலாம். உடற்பயிற்சி இல்லாவிட்டால் தசைகள் சிறுத்துப் போகின்றன. ஜீரண சக்தி குறைந்து இரத்தாசயம் கெட்டு உடல் நோய்க்கிருமிகளை அழிக்கும் சக்தியை இழந்து விடுகிறது. உடற்பயிற்சி எடுத்துக்கொள்



ளும் போது இருதயம் வேகமாய் அடிக்கிறது. இதனால் உடம்பின் பலபாகங்களுக்கும் இரத்தம் கிடைக்கிறது. உடற்பயிற்சி செய்கையில் அதிகமாய் சுவாசிக்கிறோம். ஆதலின் பிராணவாயு உடம்பின் பலபாகங்களுக்கும் கிடைக்கிறது. உடம்பின் தசைகளுக்குப் பயிற்சி இல்லையேல் புத்தி மந்தமடைகிறது. ஞாபக சக்தி நன்றாக இருக்கவும் சுறுசுறுப்பாகப் படித்துப் பாடங்களை எழுதவும் உடற்பயிற்சி பள்ளி மாணவர் மாணவிகளுக்கும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் அவசியம். கொல்லனுக்கு புஜம் பருத்திருப்பதற்கு காரணம் அவன் அதை எப்போதும் உபயோகிக்கிறான். சரீர உழைப்பு மேன்மையானது, கண்ணியமானது. உடற்பயிற்சியின் போது உடம்பு வியர்த்து இரத்தத்திலுள்ள கழிவுநீர்களையெல்லாம் வியர்வைக் கோளங்கள் வெளித்தள்ளுகிறது. ஆகையால் உடம்பிலுள்ள வியர்வைச் சுரப்பிகளுக்கு வேலை ஏற்படுகிறது. ஜீரணம் சரியாய் நடக்கிறது.

நீங்கள் கொஞ்சமும் தேக அப்பியாசம் செய்வதில்லை என்றால் தேக எடையில் ஒரு இராத்தலுக்கு 14 முதல் 16 வரை உள்ள கனலிகள் (சூடு) என்ற அளவாக உண்ணவேண்டும். உதாரணமாக எடை 150 ராத்தல் ஆனால் 2100—2400 கனலிகள் வரையுள்ள உணவுகளை உண்ணவேண்டும். நீங்கள் லகுவாக அப்பியாசம் செய்தால் ராத்தலுக்கு 16 முதல் 18 வரை கனலிகள் உள்ள உணவைச் சாப்பிடவேண்டும். நீங்கள் மிதமான அப்பியாசம் செய்தால் 18 முதல் 20 வரை உள்ள கனலிகளும், கடினமான தசை உழைப்பு செய்தால் 20 முதல் 23 வரை உள்ள கனலிகளும் கடினமான உழைப்புச் செய்தால் 23 முதல் 26 உள்ள கனலிகளும் உள்ள உணவை பகுத்தறிந்து உண்ணவேண்டும். கனலிகள் எல்லாம் ஒரே வகையாக இருக்கத் தேவை இல்லை. அவை பின்வருமாறு உணவில் அமையவேண்டும். கரிநீர்வகைகள் (Carbohydrates) 65%, கொழுப்பு 25%, பிசிதம் 10%. அதிக மெலிவாகவோ அல்லது பருமனாகவோ இருப்பவர்கள் தங்கள் தங்கள் நிலைமைக்கு ஏற்ப மாறுதலைச் செய்து கொள்ள வேண்டியது.

## கனலி அடக்க வகுப்பு வாரி

| | | | |
|---|---|---|---|
| அரிசி | ஒரு ராத்தலில் | கனலிகள் | 1640 |
| ஆட்டிறைச்சி | .... | .... | 725 |
| அவரை | .... | .... | 1437 |
| ஆப்பிள் | ... | .... | 293 |
| அன்னாசிபழம் | .... | .... | 285 |
| ஆப்ரிகாட் | .... | .... | 233 |
| உருளைக்கிழங்கு | ... | .... | 387 |
| எலுமிச்சம்பழம் | ... | ... | 205 |
| கத்தரிக்காய் | ... | .... | 250 |
| காரட்டுக்கிழங்கு | ... | ... | 211 |
| கொய்யாப்பழம் | ... | .... | 300 |
| சர்க்கரை | .... | ... | 1856 |
| சீனிக்கிழங்கு | .... | ... | 501 |
| தேன் | ... | .... | 1515 |
| நிலக்கடலை | ... | .... | 2562 |
| பப்பாளிப்பழம் | .... | .... | 275 |
| பால் | .... | .... | 323 |
| பீட்டுக்கிழங்கு | .... | .... | 186 |
| பூக்கோசு | .... | .... | 140 |
| பேரீச்சம்பழம் | .... | .... | 1611 |
| ஆலிவ்பழம் | .... | .... | 947 |
| ஒலிவ் எண்ணெய் | .... | .... | 422 |
| காராமணி (பச்சை) | | .... | 603 |
| காராமணி உலர்த்தியது | | .... | 1550 |
| கோக்கோ | ... | .... | 815 |
| சாக்லெட் | .... | .... | 2768 |
| சேமியா | .... | .... | 1625 |
| தக்காளிப்பழம் | .... | .... | 438 |
| திராட்சை | ... | ... | 328 |
| மூலாம்பழம் | ... | .... | 800 |
| வெண்ணெய் | ... | .... | 3491 |
| மைதா | ... | .... | 1670 |
| ரவை | .... | .... | 1685 |
| வாதுமை பருப்பு | .... | ... | 1442 |



| | | | |
|---|---|---|---|
| மைசூர் பருப்பு | .... | .... | 1680 |
| வெங்காயம் | .... | ... | 225 |
| முட்டைக்கோசு | ... | .... | 145 |
| வாழைப்பழம் | .... | ... | 300 |
| ரொட்டி | ... | ... | 1442 |
| மாதுளை | .... | .... | 447 |
| பசலைக்கீரை | .... | .... | 109 |
| எலுமிச்சம்சாறு | .... | .... | 209 |
| ஈச்சம்பழம் | .... | .... | 1437 |
| வெள்ளரிக்காய் | .... | .... | 80 |
| அத்திப்பழம் வற்றல் | | .... | 590 |
| ஈரல் | .... | .... | 379 |
| கிரீம் | .... | .... | 883 |
| கோழிஇறைச்சி | .... | ... | 493 |
| சர்க்கரைபூசினி | .... | .... | 443 |
| கோதுமை மாவு | ... | .... | 2568 |
| பிஸ்த்தாக்கொட்டை | | .... | 2901 |

## பெண்களுக்கு அடிவயிற்றை பலப்படுத்த பயிற்சிகள்

1. இயற்கையான நிலையில் நின்றுகொண்டு கூடுமான வரையில் ஆழ்ந்த நீண்ட மூச்சு எடு. இடுப்பில் கையை வைத்து தோள்பட்டையை உயர்த்தி தலையை சற்றுப் பின்னால் சாய்த்துக்கொள். மார்புக்கூடு அடிவயிறு இவற்றை விசாலப்படுத்தப்போதுமானகாற்றைஉட்கொள்ளவேண்டும். நுரையீரலுக்குள் காற்றைச் சிறிது நேரம் தங்கும்படி செய்து பிறகு அதை ஸ்திரமாயும் மெதுவாயும் நெடும் சுவாசமாயும் வெளியேற்ற வேண்டும். அப்போது முகவாய்க் கட்டையையும் தோள்பட்டையையும் தாழ்த்த வேண்டும். காற்றை உட்கொள்ளும்போது கைகளை உயர்த்திப் பக்கங்களிலும் பின்னாலும் வைக்கவேண்டும். தோள்பட்டைகளைச் செவ்வையாய்ப் பின்னுக்குத் தள்ளு. சுவாசம் வெளிவிடும்போது கைகளை கீழே தொங்கவிட வேண்டும். இவ்வப்பியாசத்தில் அதிக பழக்கப்பட்டவர்கள் சுவாசம் உட்கொள்ளும்

போது குதிக்காலைத் தூக்கிக் கொண்டும் அதை வெளிவிடும் போது தாழ்த்தியும் வரலாம். இவ்வப்பியாசத்தை இருமுறை செய்யவேண்டும்.

2. கைகளை இடுப்பில் வைத்து கால்களை அழுத்தமாக தரையில் நிறுத்தி தேகத்தின் மேல்பாகத்தையும் தலையையும் அகன்ற வட்டமாகச் சுற்றிச் சுழற்ற வேண்டியது. முதலில் ஒரு பக்கமாக 5 முறையும் பிறகு மற்றொரு பக்கமாக 5 முறையும் செய்யவேண்டும். தோள்களைச் செவ்வையாய்ப் பின்னுக்கு வைத்துக்கொண்டு தலையை நிமிர்த்தி முதுகை கடைசி வரையிலும் நேராக வைத்திருக்கவேண்டும். முன்பக்கமாக ஊசலாடும்போது முதுகில் பள்ளம் விழவேண்டுமேயொழிய அது வளையக்கூடாது. பின் பக்கமாக ஊசலாடும்போது சுவாசத்தை உட்கொள்ளவேண்டும். முன்னால் சாயும்பொது வெளிவிடவேண்டும். இதை இரண்டுமுறை செய்யலாம்.

3. தரையில் படுத்துக்கொண்டு கால் கட்டை விரல்களை சுவற்றின் கீழ் வை. மறுபடியும் அதை பின் தாழ்த்து. தேகத்தை முன் உயர்த்தி உட்காரும் நிலையில் வை. மறுபடியும் அதை பின் தாழ்த்து. இவ்விதமாக இவ் வளைவுகளை 5 முறை செய்யவேண்டும். ஆரம்பத்தில் தேகத்தை உயர்த்தித் தாழ்த்தும்போது கையின் ஒத்தாசையால் செய்துகொள்ளலாம். சில நாட்கள் ஆன பிறகு கையை இடுப்பின்மேல் வைத்துச் செய்யவேண்டும். முன்னால் தேகத்தை உயர்த்தும் போது மூச்சு விடவேண்டும். பின்னால் குனிந்து சாயவேண்டும். அப்படி செய்தால் ஜீரணசக்தி அதிகமாகும். அடிவயிற்று தசைகளைக் கொண்டே தேகத்தை உயர்த்தவேண்டும். மேலே கூறப்பட்ட பயிற்சிகளை பெண்கள் 6 அல்லது 7 வயதிலிருந்து செய்யவேண்டும். பித்தக்கல் நோயாளிகளும் நீரிழிவு நோயாளிகளும் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

### மார்பைப் பலப்படுத்த வழி

1. படுக்கையிலாவது தரையிலாவது மல்லாந்து படு. கைகளை முன்னால் கட்டிக்கொள். மார்பை சாத்தியமான உயரத்துக்கு தூக்கு. தலையோடு கூட மேலே தள்ளிக்கொண்டு தூக்கு. ஒவ்வொரு இயக்கத்துக்கும் இடையில் ஆழ்ந்து சுவாசி.



2. வலது பக்கமாய் படு. இடது கை படுக்கையில் இருக்கவேண்டும். நன்ருக மூச்சை உள்ளுக்கு வாங்கி பிறகு மெதுவாக விடு. இடது பக்கத்திலும் இவ்வாறு செய்.

3. நிமிர்ந்து நில். கைகளை தொங்கபோடு. அப்புறம் அவைகளை ஒரே வீச்சாக மேல் நோக்கியும் பக்கவாட்டமாகவும் வீசி பின்புறத்தில் கட்டு.

4. முட்டிகளை மடக்கி நடுமார்புக்கு கொண்டுவா. இந்த நிலையிலிருந்து முழங்கைகளைப் பின்புறம் சாத்தியமான தூரத்துக்குத் தள்ளு. இப்படிச் செய்கையில் மார்பை முன்னுக்கும் தலையை நன்ருக பின்னுக்கும் தள்ளவேண்டும்.

**கழுத்தைப் பலப்படுத்த வழி:**—1. முதலாவதாக மல்லாந்து படு. பின்பு மெதுவாக 1 முதல் 4 வரை எண்ணு. ஒன்று என்றதும் தலையை உயர்த்து. தோள்களை உயர்த்தக்கூடாது. முடிந்தவரையில் தலையை முன்னுக்குக் கொண்டு வா. இரண்டு என்கிறபோது அது உயர்ந்திருக்க வேண்டும். 3,4, க்கு மெதுவாக தாழ்த்து.

2. நிமிர்ந்து நில்லு. 1 முதல் 4 வரை எண்ணு. தீர்க்கமாக மூச்சு இழுத்துக்கொண்டே முடிந்த வரை தலையை பின்னுக்குச் சாயுங்கள். அதைச் சாய்க்கச் சாய்க்க தொண்டையை நீட்ட வேண்டும். பின் தலையை பின்னுக்குத் தள்ளுங்கள். இதற்கு முதுகந் தண்டை நீட்டவண்டும். இவ்வாறு கழுத்து வலிக்கும் வரை செய்க.

3. நிமிர்ந்து நின்றுகொண்டு தலையை வண்டிச்சக்கரம் போலச் சுற்றுங்கள். தலையை மார்பு நோக்கித் தாழ்த்தி இடபுறமிருந்து பின்புறம் வலது புறமாகச் சுற்றி முதல் நிலைக்கு கொண்டு வாருங்கள். அப்படியே எதிர்ப்புறமிருந்து செய்க.

4. மோவாய்க்கட்டையைப் பலமாக முன்னுக்குத் தள்ளிப் பிறகு உள்ளுக்கு இழுங்கள். இப்படி திரும்பத் திரும்ப செய்க.

5. பிடரியில் கைவைத்து மேலும் கீழுமாக இயக்கி அழுத்துங்கள். பின்னர் தலையை பின்புறமாகச் சாயுங்கள். சாய்க்கையில் கைகளால் முன்னுக்குத் தள்ளவேண்டும்.

### *ஆண் மகன் தன் தோள்களை பலப்படுத்து வதற்கு வழி.*

1. கைகளை பக்கவாட்டமாகத் தோள் மட்டத்திற்கு உயர்த்து. அவைகளை முன்னுக்கு கொண்டு வந்து தாழ்த்து. உயர்ந்த நிலைக்கு கொண்டுவா. இதேபோல் பின்புறத்திலும் 8 முறை செய்.

2. கைகளைத் தொங்கப்போடு. தோள்களை பலமாக உயர்த்தி குலுக்கு. தாழ்த்தி குலுக்கு. நிலைக்குக் கொண்டுவா. எட்டு முறை செய்.

3. முழங்கைகளை மடக்கு. முன் கைகள் மார்புக்கு நேராகவும் விரல் நுனிகள் தொட்டுக்கொண்டும் இருக்கவேண்டும். இப்போது முன் கைகளை தலைக்கு மேலாகச் சுற்றி பின்புறத்தில் விரல் நுனிகளைத் தொடு. மேல் கை அசையக்கூடாது. இனி தலையைப்பின்னுக்கு சாய். முழங்கைகளை பலமாக கீழே தள்ளு. எடுப்பான தோள் பட்டைகளைக் கரைப்பதற்கு இது நல்ல அப்பியாசம்.

*கால்களை பலப்படுத்த வழி:*—1. கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு நில். ஆசனம் குதிக்காலில் படத்தக்கதாக முழங்காலை மடக்கி உட்காரு. மெதுவாக எழுந்திரு. பின்பு ஒரு காலை முன்னால் தள்ளிக்கொண்டு மறுகாலின் மேல் உட்கார்ந்து எழும்பு.

2. ஒரு நாற்காலி அல்லது மேஜைக்கு முன்னால் நின்றுக்கொண்டு அதன்மேல் ஒரு காலை ஊன்றி ஏறு. ஒரு செகண்டு கழித்து காலை கீழே போடு. பிறகு மறு காலால் ஏறி நில். பன் முறை செய்க.



### தேகம் அதிகமாக ஸ்தூலித்தவர்கள் தங்கள் எடையைக் குறைக்க வழி.

1. தரையில் நீட்டி நிமிர்ந்து படு. தலைக்கு மேல் கைகளைச் சேர்த்துக்கொண்டு கொஞ்சநேரம் முன்னுக்கும் பின்னுக்குமாக புரளுக.

*இடுப்பைச் சுருக்க:*—இடது பாதத்தால் வலது கையையும் வலது பாதத்தால் இடது கையையும் மாறி மாறித் தொடுக.

*அடிவயிற்றைச் சுருக்க:*-கரங்களை விரைப்பாக உயர்த்தி வைத்துக்கொண்டு பாதங்களை சக்கரவட்டமாக ஆட்டுக. பெண்களுக்காக கொடுக்கப்பட்ட பயிற்சிகளையும் செய்யலாம்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது பழமொழி. ஒரு மணி நேரம் காலையிலோ மாலையிலோ உடற்பயிற்சி செய்தால் போதும். அதிக நேரம் சிரமமான தேகாப்பியாசம் செய்தால் இருதயம், நுரை ஈரல் முதலிய அங்கங்களுக்கு கெடுதி ஏற்படும். தேகப்பயிற்சி செய்தவுடன் குளிக்கக்கூடாது. உடனே குளித்தால் ஜலதோஷம், குளிர் இவை உண்டாகும். உடம்பிலுள்ள வியர்வை அடங்கும் அளவுக்கு பொருத்திருந்து நீராடுவது நலம். கூடுமான வரையில் தேக பயிற்சி செய்யத் திறந்த வெளிகளுக்குப் போகவேண்டும். வீட்டிலுள்ள அறையில் தேக பயிற்சி செய்ய விரும்பினால் அந்த அறை நல்ல காற்றோட்ட முள்ளதாக இருக்கவேண்டும். வாலிபம் நீடித்திருக்க உடற்பயிற்சி மிகவும் அவசியம்.

சரீர பயிற்சிகளை மூன்று பெரும்பகுதிகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன:—ஆரோக்கியத்தின் பாற்பட்டவை, பலத்தின் பாற்பட்டவை. தேகக்கட்டின் பாற்பட்டவை. இளைஞர்கள் இம்மூன்று வகைப் பயிற்சிகளையும் ஒருங்கே அடைய முயலுதல் வேண்டும். மத்தியப் பருவமுடையவர்கள் ஆரோக்கியத்தின்பாற்பட்டவைகளையும், தேகக்கட்டின் பாற்பட்டவைகளையும் செய்ய முயற்சிக்க வேண்டும். முதியோர் ஆரோக்கியத்தின் பாற்பட்ட பயிற்சிகளில் ஈடுபடலாம். நவீனமான

யுத்தக் கருவிகள் ஏற்பட்ட இக்காலத்தில், பதினாயிரம் பேர் செய்யக்கூடிய போர்த்திறமையை ஏககாலத்தில் ஒரே கருவி கொண்டு செய்யக்கூடிய இக்காலத்தில் இத்தகைய உடற் பயிற்சிகள் எதுவும் தேவை இல்லை என்று உறுதிகொள்ளலாம். ஆனால் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் ராணுவ வீரர்களும், ராணுவ உத்தியோகஸ்தர்களும் தற்காப்பிற்காக தேகப்பயிற்சி செய்கிறார்கள். நாட்டு இளைஞர்களின் தேகமனோ சக்திகள் சரியாக கவனிக்கப்படாத எந்த நாடும் முன்னேற்ற மடைந்திருப்பதாக சரித்திரங்களில் காணவில்லை. வருங்கால இளைஞர்களின் உடல் நலத்திற்காக தற்போது இந்தியாவில் செய்துவரும் அரும் பெரும் முயற்சிகள் போற்றதக்கது.

புழுதியினால் பல கெடுதிகள் உண்டாகின்றன. உடற் பயிற்சி செய்யுமிடம் புழுதி இல்லாத இடமாக இருக்கவேண்டும் புழுதியுடைய இடங்களில் கிரிக்கெட் பந்து முதலிய விளையாட்டில் கலந்துகொள்ளும்போது காயம் ஏற்பட்டால் உடனே அடிபட்ட இடத்தில் டிஞ்சர் வைப்பது நல்லது.

---

## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகள்.
* ஸினரேரியா மாரிடிமா கண் துளி.
* அல்பால்பா டானிக்.
* டயகார்டு இருதய டானிக் ஆகியவைகள்

எங்களிடம் கிடைக்கும் :

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

# செய்திகள்

### பட்டப் படிப்புவரை தபால் பாடம்

சர்க்கார் உத்தேசித்துள்ள மாலைநேரக் கல்லூரிகள், தபால் மூலம் கல்விபோதனை ஆகிய திட்டங்களை அமுலாக்குவதற்காக நூறு மாலைநேரக் கல்லூரிகளைத் துவக்குவதென்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து சர்வகலாசாலைகளில் பட்டப் படிப்புக் கட்டம்வரையில் கலைத்துறைப்படிப்புகளில் தபால் மூலம் கல்வி போதனை வசதிக்கு ஏற்பாடு செய்வதென்றும் முடிவாகியிருப்பதாக யூனியன் கல்வி மந்திரி, டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி, ராஜ்ய சபாவில் பிப்ரவரி 15-ம் தேதி யன்று கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

—சுதேசமித்திரன்

### அந்தஸ்து

ஹோமியோபதி வைத்தியர்களுக்கு ஆங்கில வைத்திய முறை டாக்டர்களுக்குள்ள அந்தஸ்தை அளிக்கவேண்டும். ராச்சியங்களில் ஹோமியோபதி ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள் ஆராய்ச்சி நிலையங்கள் முதலியவற்றை ஏற்படுத்த 3-வது திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கவேண்டும். ராச்சிய வைத்திய சர்வீஸ்களிலும் சமுதாய அபிவிருத்தி திட்ட பகுதிகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஹோமியோபதி வைத்தியர்களை நியமிக்க வேண்டுமென்றும், ஹோமியோபதி அகில இந்திய வைத்திய சங்க சென்னை கிளையின் முதல் மகா நாடு கேட்டுக்கொண்டது. இம்மகாநாடு பிப்ரவரி 5-ம்தேதி ராயப்பேட்டையிலுள்ள நியூ காலேஜில் நடைபெற்றது.

அச்சமயம், ஹோமியோபதி வைத்திய முறையை அங்கிகரிப்பதுபற்றி சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக சென்னை உள்துறை அமைச்சர் ஸ்ரீ. எம். பக்தவத்சலம் கூறினார்.

### தஞ்சை

தஞ்சை ஜில்லா ஹோமியோபதி சங்கத்தின் 14-வது வருடக்கூட்டமும், பொதுக்கூட்டமும் தஞ்சையில் பிப்ரவரி

5-ம்தேதி, டாக்டர் வி. ஆர். மூர்த்தியின் தலைமையில் நடந்தது. புது வருடத்திற்கு கீழ்கண்டவர்களை காரியக் குழு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

டாக்டர் வி. ஆர். மூர்த்தி, தலைவர் :

உப தலைவர்கள் :—டாக்டர் வி. ஜி. சந்திரன் தஞ்சை ; டாக்டர் எம். கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்; டாக்டர், ராமபத்திரன், திருவையார்; டாக்டர் பி. கே. பி. முருகையன், பட்டுக்கோட்டை; டாக்டர் டி. ஏ. அம்மணி அம்மாள், திருவிடமருதுர்; டாக்டர் கே. எம். இரத்னம், மாயூரம்; டாக்டர் கே. ஸ்ரீனிவாஸன், தஞ்சை; டாக்டர் டி. எஸ். நடராஜன் மன்னார்குடி.

டாக்டர் பி. ஆர். நடராஜன், காரியதரிசி; மற்றும் ஏழு டாக்டர்கள் காரியக்குழு அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## பொறையார்

பொறையார் ஹோமியோபதி சங்கத்தின் முதல் கூட்டம் 29-1-61-ல் மாலை 6-15–க்கு பொறையார் வேப்பமரத் தெரு, 1–நெம்பர் வீட்டில், (டாக்டர் ந. வே. பிள்ளையவர்கள் அனுமருந்தகத்தில்) காரை வெட்டரினரி சர்ஜனும் ஹோமியோபதி டாக்டருமான உயர்திரு M.A. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் பொறையார் டாக்டர் M. கோதண்டபாணி மேற்படி சங்கத்தின் தலைவராகவும், காரை டாக்டர் A. டேவிட் உபதலைவராகவும். பொறையார் டாக்டர் A. M. அகமது செயலாளராகவும், பொறையார் டாக்டர் ந. வே. பிள்ளை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அத்துடன் காரை டாக்டர் R. ராமதாஸ், காரை டாக்டர் S. M. ஷேக் அப்துல் காதர், பொறையார் டாக்டர் V. பஞ்சநாதம் பிள்ளை, திருக்களாச்சேரி டாக்டர் S.K. கோவிந்தராஜ், தரங்கம்பாடி டாக்டர் P. N. வைத்திலிங்கம் ஆகியவர்கள் மேற்படி நால்வர்களோடு நிர்வாக சபை மெம்பர்களாக



தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இச் சங்கம் தற்காலிகமாக மேற்படி ந. வே. பிள்ளை அவர்கள் அனுமருந்தகத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. தலைவரும் மற்றும் சிலரும் சொற்பொழிவாற்றிய பின். கூட்டம் இனிது முடிந்தது.

## திண்டுக்கல்

29—1—51ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு திண்டுக்கல் வட்டார பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்க கூட்டம் பழனி தாலுகா ஹோமியோபதி டாக்டர்கள் சங்க காரியதரிசி டாக்டர் திரு. V. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் திண்டுக்கல் மலை அடிவாரம் ஸ்ரீனிவாஸப்பெருமாள் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

1961ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:-டாக்டர். திரு. A. கிருஷ்ண கோனர்.
உபதலைவர்:-டாக்டர் திரு. V. குருசாமி.
பொதுச் செயலாளர்:-டாக்டர் திரு. E. சுப்ரமணியம்.
துணைச் செயலாளர்:-டாக்டர் திரு. A. S. கிருஷ்ணசாமி.
பொக்கிஷதார்:-டாக்டர் ஜனப் A. K. ஷம்சுதின்.
கமிட்டி மெம்பர்கள்:-டாக்டர்கள் ஜனப் K. K. H. ஷெரீப், திரு. ஜோசப் அமல் தாஸ், திரு. M. V. துரைராஜ், திரு. D.V. லோகனதைய்யர், திரு S கந்தசாமி. திரு. S. ராமசாமி, திரு. V. பாலகிருஷ்ணன், திரு. T. K. சேகர், திரு. C. பெருமாள், திரு ரெ. மாணிக்க முதலியார்.

கூட்டத்தில் ஹோமியோபதி டாக்டர்களின் ஒற்றுமையைப்பற்றி டாக்டர் திரு V. குருசாமி பேசினர். ஹோமியோபதி ஆர்கனன் பற்றி கூட்டத்தில் டாக்டர் திரு V. பாலகிருஷ்ணன் பேசினர்.

## செல்வி வைத்திய சாலை திறப்பு விழா

அறந்தாங்கி தாலுகா, மணமேற் குடியில், "ஹோமியோபதி" வைத்தியத் துறையில் பயிற்சி பெற்ற மண

16236



மேற்குடி டாக்டர். இராம. சுப்பையா M. H. H. அவர்களால் நடத்தப் படுகின்ற "செல்வி வைத்திய சாலை" 8-2-61 புதன்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் மணமேற்குடி கழக உயர் நிலைப் பள்ளி தமிழாசிரியர் திரு. க. இரத்தினம் அவர்கள் தலைமையில் அறந்தாங்கி கம்பவுண்டர். தி. சுந்தர ராவ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## தென் சென்னை

தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம், பிப்ரவரி 26-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணிக்கு 77, ராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-28, பால நிலையத்'தில் நடந்தது.

அச்சமயம் டாக்டர் ஸி. ஜே. போர்ஜியா தலைமை வகித்தார். டாக்டர் எம். எஸ். மணியம் "அலோபதியும், ஹோமியோபதியும்" பற்றிப் பேசினார்.

பேசுகையில் மற்ற வைத்தியர்களெல்லோரும் முழு நேரத் தொழில் புரியும் போது, நம்முறையில் மாத்திரம் இரு தொழில் புரிவோரும் இருப்பதால், ஹோமியோபதிக் கலை முன்னேற்றத்துக்கும் தொழில் மதிப்புக்கும், பதவிக்கும் இடைஞ்சல் உண்டாகிறது என்றும் சொன்னார்.

மார்ச்சு மாதம் 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு "பால நிலைய"த்திலேயே டாக்டர் ஸி. ஜே. போர்ஜியா "காலரா"வைப் பற்றிப் பேச ஒப்புக்கொண்டுள்ளார்.

## வாழ்த்துகிறோம்

எமது மாணவர் ஸ்ரீ R. ராஜமாணிக்கம் அவர்களுக்கும் ஸ்ரீமதி வஸந்தா அவர்களுக்கும் சென்ற 5-ஆம் தேதியன்று சேலம், ராசிபுரம், பட்டணத்தில் திருமணம் இனிது நடைபெற்றது. புதுமணத் தம்பதிகளுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களை உவகையுடன் அளிக்கிறோம்.


# க்யூ - வரிசையில்

நோயாளிகள் நிற்கும் பொழுது
ஒரே மருந்தைத் தேடிப்பிடிப்பது
கஷ்டம் தான்; அதுவும்
ஆரம்ப டாக்டராயிருப்பின்!
உங்களுக்காகத்தான்
ஹோமிக்ஸ் ரெமடீஸ்
முப்பது மருந்துகளையும்,
எங்கள் கூட்டு மருந்துகள்
ஐம்பத்திரண்டையும்
தயார் செய்திருக்கிறோம்.
அவ்வளவையும் ஒரே தவணையில்
வாங்க முடியாவிட்டால்
வேண்டியவைகளை மாத்திரம்
வாங்கிக் கொள்ளலாம்.
புதிய, விபரமான இவ்வருட
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**
"விற்பனை இலாகா"
"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

பஸ், ரயில்
பிரயாணமென்றால்
தலை சுற்றல்,
வாந்தியென்று
மலைப்பாய் இருக்கிறதா ?

எங்கள்

## கோடிக்

உங்களுக்கு உதவும்.

---

பனி பெய்ய, பயமா ?
குளிர் காண, கவலையா ?
ஆஸ்த்மா, இருமல்
ஆதிக்கத்தைப் போக்க

எங்கள்

## நில்கோஸா

உங்களுக்கு உதவும்.

---

அஜீரணம், வயிற்றுவலி
ஆகியவைகளுக்கு
அநேக மருந்துகள்
எம்மிடம் உள்ளன.

முதலில்

## இபில்கோ

கொடுத்துப் பார்க்கலாம்.

---

பொல்லாத சுரங்கள்
எல்லாவற்றிற்கும்
ஒரே ஒரு மருந்தா ?
யாருமே கேட்டதில்லை !

ஆனால்

## ஏக்வின்

என்ற எம்மருந்து
முதலுதவிக்குப் பயன்படும்.

---

### தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.**

Edited and Published by Dr. V. S. Subramanyam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, erson St., Madras-1